# தமிழரசு

நவ 16.1972
40 காசு



# அரசு — மிகவுயர்ந்த தரமான

# போர்ட்லேண்ட் சிமெண்ட் உங்களுக்குக் கிடைக்கிறது

அரசு சிமெண்ட் தரத்தில் தலைசிறந்து விளங்குவது; தரமே உருவானது. வலிமைக்கு மற்றொரு பெயரான அரசு, வலுவான கட்டுமானங்களுக்கு நேர் நிகரில்லாததாகும்.

அரசு சிமெண்டுக்குள்ள தனிச் சிறப்புத் தன்மைகள், அதனால் கட்டப்படும் எதையும் திண்மையும், நீர்க்காத திறனும் கொண்டு நெடுங்காலம் நீடித்து விளங்கச் செய்கின்றன.

அரசு ஒரு நவீன, விஞ்ஞான ரீதியான தயாரிக்கப்படும் போர்ட்லெண்ட் சிமெண்ட் குடியிருப்பு இல்லங்கள், பண்ணைக் கட்டிடங்கள், அலுவலக கட்டிடங்கள், தானியக் குதிர்கள், குழாய் அமைப்புகள், அணைகள், பாலங்கள், நீர்த்தொட்டிகள், நீர்த் தேக்கங்கள், நீச்சல் குளங்கள், அலங்கார அமைப்புக்கள் போன்ற எத்தனையோ கட்டுமான வேலைக்கு அரசு அருமையானதொரு சிமெண்ட்.

அரசு தமிழ்நாட்டிலேயே முதலாவதான ஒரே அரசினர் துறை சிமெண்ட் ஆலை




யால், கடுமையான தரக்கட்டுப்பாடுகளைக் கையாண்டு உற்பத்தி செய்யப்படுகிறது.

## தமிழ்நாடு சிமெண்ட்ஸ்

(தமிழ்நாடு அரசுக்கு சொந்தமான நிறுவனம்)

ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்


## அரசு — வலிவும் வனப்பும் வாய்ந்தது

AC-16




# தமிழரசு

மலர்-3
இதழ்-10
16·11·72

# மாத வருமானம் இரட்டிப்பாகும்

தமிழ்நாட்டின் மொத்த வருவாய் 1960-61-ல் ரூ. 1936 கோடி என்ற அளவிலிருந்து 1970-71-ல் ரூ. 2687 கோடியாக உயர்ந்தது. இதே கால அளவில் சராசரி நபர் வருமானம் ரூ. 574-லிருந்து ரூ.654 ஆக அதிகரித்தது.

இதே வளர்ச்சி விகிதத்தில், மாநிலத்தின் மொத்த வருவாய் 1970-71-ல் ரூ. 2687 கோடி என்ற அளவிலிருந்து 1983-84 ஆம் ஆண்டில் ரூ. 4202 கோடியாக உயரும். தமிழ்நாட்டின் மக்கள் தொகை 1971-ல் 4·11 கோடியாக இருப்பது 1984-ல் கிட்டத்தட்ட 5·4 கோடியாக உயருமாதலால் சராசரி நபர் வருமானம் இன்னும் 12 ஆண்டுகள் கழித்து ரூ. 783 என்ற அளவுக்கே உயரக்கூடும்.

ஆனால் இப்போது வகுக்கப்பட்டுள்ள தொலை நோக்கு 12 ஆண்டுத் திட்டம் சராசரி நபர் வருமானம் 1970-71-ல் ரூ. 654 ஆக இருப்பதை 1983-84-ல் ரூ. 1308 ஆக உயர்த்த வேண்டுமென்ற குறிக்கோளைக் கொண்டுள்ளது. சராசரி நபர் வருமானத்தை இரண்டு மடங்காக உயர்த்துவதற்கேற்ப மாநில மொத்த வருவாய் 1983-84-ல் ரூ. 7024 கோடி என்ற அளவுக்கு உயரவேண்டும்.

பண்டங்கள், பணிகள் இவற்றை இரு மடங்காகப் பெருக்குவதின் மூலம் இதற்கு வகை செய்ய வேண்டும்.

12 ஆண்டுக் காலத்தில் சராசரி நபர் வருமானத்தை இரண்டு மடங்காக ஆக்குவதென்பது சிலருக்கு ஒரு பேராசைத் திட்டம் போலத் தோன்றக் கூடும். சென்ற 20 ஆண்டுகளாகத் திட்டமிட்ட வளர்ச்சிக்குப் பின்பும் அனைத்திந்திய அளவில் சராசரி நபர் வருமானம் 31 சதவிகிதம்தான் அதிகரித்தது என்பதை வைத்து அவர்கள் அவ்வாறு கருதலாம். ஆனால் அப்படிப்பட்ட குறைந்த நிலை முன்னேற்றத்தைக் கருதித்தான், இப்போது திட்ட வேலையில் புதிய உத்தி கையாளப்படுகிறது. வேலை வாய்ப்பை மையமாகக் கொண்டு உற்பத்தியையும் விநியோகத்தையும் இணைப்பதே இந்தப் புதிய உத்தி ஆகும். இந்தப் புது உத்தியைக் கையாண்ட சில நாடுகள் 20 ஆண்டுக் காலத்தில் தங்கள் வருவாயை 3 மடங்காக—ஏன் நான்கு மடங்காகவும் கூடப் பெருக்கியுள்ளன.

நமது மாநிலத்தில் இத்திட்டப்படி சராசரி நபர் வருமானத்தை இருமடங்காக்கினாலும்கூட ஒரு நபரின் சராசரி மாத வருமானம் ரூ. 109 என்ற அளவில்தான் இருக்கும். (இந்தத் தொகைகள் 1970–71 விலை நிலவரப்படி கணக்கிட்டவை.)

மாநிலத் திட்டக் குழு
தொலைநோக்குத் திட்ட வரைவிலிருந்து
எடுக்கப் பட்டவை.



# உள்ளாட்சி மன்றங்களின் வளர்ச்சிக்கு.....

முத்து

"சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம்" என்பது நம் திருமறை; "நாட்டின் முதுகெலும்பு வேளாண்மை; வேளாண்மையின் தலைமைத் தளம் ஊர்கள். எனவே ஊர்களே மக்களின் உயிர்நாடி" என்பன போன்ற கருத்துக்கள் நம் அனைவர் மனத்திலும் ஆழமாகப் பதிந்தவையாகும்.

விவசாயம் பல்கிப் பெருகச் சாலை வசதி, மின் இணைப்பு, நீர்ப்பாசனம், கால்நடை வளம், கூட்டுறவு போன்ற திட்டங்களையும், மக்கள் நலம்பேணும் நல்வாழ்வுத்துறையில் இணைத்து, குடிநீர்த் திட்டம், பால் பெருக்கு, மீன்வளம், மருத்துவ வசதி, கல்வி, இன்னபிறபணிகளையும் சீரிய முறையில் நாம் செயல்படுத்துவதற்கு உறுதுணையாக அமைந்தவை, ஊராட்சிகளும், பேரூராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும், மாவட்ட வளர்ச்சி மன்றங்களும், மாநில ஊராட்சி வளர்ச்சிக் கருத்துரைக் குழுக்களும் ஆகும்.

மக்களுக்கும், ஆட்சி நிருவாக அமைப்புக்கும் இடையே இந்நிறுவனங்கள், நெருங்கிய தொடர்புக்கு வழி வகுத்து, இந்தியத் துணைக்கண்டத்தில் வேறு எந்த மாநிலத்திற்கும் கிட்டாத அரிய சிறப்புகள் பலவற்றைத் தமிழ்நாடு பெறுவதற்குக் காரணமாக இருந்திருக்கின்றன.

இன்று தமிழ் நாட்டில் 12,642 ஊராட்சிகள், 600 பேரூராட்சிகள், 12 நகரியங்களை உள்ளடக்கிய 374 ஊராட்சி ஒன்றியங்கள், ஊர் வளர்ச்சிக்குப் பாடுபடும் ஒப்பற்ற அமைப்புகளாக இயங்கி வருகின்றன. சமுதாய வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றும் முழுப் பொறுப்பும், ஊராட்சி ஒன்றியங்களிடமே ஒப்படைக்கப் பட்டுள்ளது.

"நீரின்றி அமையாது உலகு" என்றார் திருவள்ளுவர். நீரைத் தேக்கி நிலத்தின் வளத்தைப் பெருக்கி மக்கட்கு உண்டி கொடுப்பதே உயர்பணியும், உயிர்ப் பணியும் ஆகும். அத்தகு உண்டியை விளைவிக்க உறுதுணை புரியும் வேளாண்மைத் திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பு, ஊராட்சிகளைச் சேர்ந்ததே.

குழவிகளின் மழலைச்சொல், குழலையும் யாழையும் வெல்லக் கூடியதுதான் என்றாலும், அம் மழலைச் செல்வங்கள் ஈசலெனப் பெருகிவிட்டாலோ குடும்பங்கள் இடிபடும் உரலாகவும், அடிபடும் மத்தளங்களாகவும் ஆக நேரிடும். எனவே, பிறப்பு விகிதத்தை ஒழுங்குப்படுத்தி, மக்கட்பெருக்கத்தைக் கட்டுப் படுத்தி, நாட்டு நலத்தை நலமுறத் துய்க்கத் துணை செய்யும் குடும்பநலத் திட்டப் பணிகளும், ஊராட்சிகளிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளன.

'கிணறுகளை அகழ்ந்து மக்களுக்கு உண்ணுவதற்கு நீர் கொடுப்பவர் என்றும் சாவா உடம்பை எய்தியவராவர்' என்று நம்முடைய இலக்கியங்கள் பாடுகின்றன. இத்தகைய குடிநீரை, அதுவும் பாதுகாக்கப் பட்ட குடிநீரை, அளிக்கும் பொறுப்பு, ஊராட்சி ஒன்றியங்களுடையதே.

இந்தியத் துணைக் கண்டத்திலே சிறந்த கிராமமாக 1969–70-ஆம் ஆண்டில், நமது மாநிலத்தைச் சேர்ந்த கன்னியாகுமரி மாவட்டத்தில் குருந்தன்கோடு ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மணவாளக்குறிச்சி என்ற கிராமம் தேர்ந்தெடுக்கப்பட்டு, முதல் பரிசுத் தொகையாக ரூ. 3,000 பெற்றுள்ளது எனக் கேட்டு, நாம் அனைவரும் இறும்பூதெய்துகிறோம். இந்த ஊரை நிலைக்களனாகக் கொண்டு திரைப்படம் ஒன்றைத் தயாரிக்கவும் ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

நமது மாநிலத்தில் 1970-71-ஆம் ஆண்டிற்கான சிறந்த கிராமமென இராமநாதபுர மாவட்டம், வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கூமைப்பட்டி என்ற கிராமம் தேர்ந்தெடுக்கப்பட்டு, முதல் பரிசான ரூ. 750 பெற்றுள்ளது. இது ஊர் வளர்ச்சித்துறையின் சாதனைக்கு நல்லதோர் எடுத்துக் காட்டு என மகிழ்வுறலாம். மக்களுக்கான, மக்கள் சக்தி, மக்களாட்சியில் மலரும் பேற்றினை, இச்செயலின் மூலம் தெளிவுற அறியும் வாய்ப்பினை இது அறிவித்துள்ளது.

இதுபோலவே, கிராமச்சாலைகளின் தரம் உயர்த்தப்படுவதிலும், சீர்திருத்த வேலைகள் செய்து தருவதிலும், தமிழ்நாடு முன்னணியில் நிற்கிறது. தற்போது ஊராட்சிகளிலும், ஊராட்சி ஒன்றியங்களிலும் சுமார் 53,942 கி.மீ. சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

எல்லாக் கிராமங்களும் தரமுள்ள சாலை இணைப்பைப் பெற வேண்டும் என்பது, அரசின் நோக்கம். இந்நிலையை எய்த, முதற்படியாக 1,500-ம் அதற்கு மேற்பட்டு முள்ள மக்கள் தொகையைக் கொண்டுள்ள கிராமங்கள் சாலைகளால் இணைக்

கப்படும் வகையில் ரூ. 19 கோடி செலவு மதிப்பீட்டில் அரசு ஒரு திட்டத்தைத் தயாரித்துள்ளது. 1972—73-ல் செலவிட ரூ. 3 கோடிக்கு அரசு ஏற்கெனவே அனுமதி வழங்கியுள்ளது. இதற்கென 1973-74-ல் ரூ. 4 கோடி செலவிட வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

உள்ளாட்சி நிறுவனங்களின் செலவுப் பளுவைக் குறைக்கும் முறையில் ஊர்ப்புறங்களில் உள்ள பேருந்து வழிச் சாலைகளின் பராமரிப்பைப் படிப்படியே அரசே ஏற்றுக் கொள்வதென முடிவு செய்யப்பட்டு, இவ்வகையில், சென்ற ஆண்டுகளில், சராசரியாக ஆண்டு ஒன்றுக்கு 500 மைல் நீளமுள்ள சாலைகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. 1972-73-ல் சுமார் 1,015 மைல் நீளமுள்ள சாலைகளை ஏற்றுக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சேகரிக்கப்பட்டுள்ள புள்ளி விவரங்களிலிருந்து, 4,551 சிற்றூர்கள், நிலையான நீர் ஆதாரங்களின்றி உள்ளன என்பதும், சற்றேறத்தாழ 12,858 ஊர்களில் உள்ள நீராதாரங்கள் வலுவூட்டப்பட வேண்டிய நிலையில் உள்ளன என்றும், நோய் பரவும், வட்டாரங்களாக உள்ள சுமார் 2,059 ஊர்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டிய நிலை உள்ளதென்றும், அறிய வருகின்றோம். அரிது முயன்று இக்குறையினைப் போக்கியாக வேண்டுமென்பது இவ்வரசின் தலையாய நோக்கமாகும். மேற்கூறிய குறைகளைக் களைய சுமார் ரூ. 40 கோடி தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இப் பிரச்சினையை விசாலமான எதிர்காலக் கண்ணோட்டத்துடனும் மிகப் பெரிய அளவிலும் சமாளிப்பதற்கான புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குடிநீருக்குத் தொல்லையுறும் பற்றுக்குறை இடங்களுக்கெனக் ''குடிநீர் வழங்கும் சிறப்புத் திட்டம்'' ஒன்றினை உருவாக்கி நிறைவேற்ற வேண்டிய இன்றியமையாமையும் உள்ளது. குடிநீர் பற்றுக்குறை ஊர்களையும், ''காலரா'' நோயினால் பாதிக்கப்படும் ஊர்களையும் கண்டறிந்து, அங்குள்ள மக்களுக்கு நிலையான குடிநீர் வழங்கத் தக்க வசதிகளை ஏற்படுத்தித் தருவதற்குத் தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை ஊர்ப் பணிகள்) ஒரு வேலைத் திட்டத்தை உருவாக்கியுள்ளார். அவர் தொகுத்த இவ்வேலைத் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இம் மாநிலத்திலுள்ள பாறை, நிலப்பகுதிகளிலுள்ள குடிநீர்ப் பற்றுக்குறை ஊர்களிலும் ''காலரா'' நோயினால் பாதிக்கப்படும் ஊர்களிலும், ''யூனிசெப்'' உதவியைக் கொண்டு, ஐந்தாண்டுகளுக் குள்ளாக 8,850 குழாய்க் கிணறுகளை நிறுவுவதற்கு இத் திட்டம் வகை செய்கிறது. துளையிடும் மற்றும் இதரக் கருவிகளை 'யூனிசெப்'' அளித்து உதவும். 8,850 குழாய்க் கிணறுகளை நிறுவி அவைகளைப் பேணுவதற்காகவும் செலவு ரூ. 2.71 கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இத் திட்டம் 1971—72-ஆம் ஆண்டு முதற்கொண்டு நிறைவேற்றப் பட்டு வருகிறது.

ஒவ்வோர் ஆண்டும் 1,770 குழாய்க் கிணறுகள் நிறுவப் படும். முழுச் செலவையும் மைய அரசே ஏற்கும் வகையில் நாடு முழுமைக்கும் இந்த ஆண்டு ரூ. 20 கோடியும் அடுத்த ஆண்டு ரூ. 40 கோடியும் செலவிடும் வகையில் மைய அரசு ஒரு திட்டத்தைத் தீட்டியுள்ளது. இத் திட்டத்தின் முக்கிய நோக்கம், பாதுகாக்கப் பட்ட குடிநீர் அளிக்கப்படாத நிலையில் உள்ள பகுதிகளுக்கு உடனடியாக அவ்வசதிகளைச் செய்து தருவது ஆகும்.

இம் மாநிலத்தில் உள்ள 374 வட்டாரங்களிலும் ''திருத்தப் பட்ட குடும்பநல வேலைத் திட்டத்தைப்'' புகுத்தி, நாட்டை எதிர்நோக்கி நிற்கும் இப்பெரும் பிரச்சினையைச் சமாளிக்க, நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம். தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் சத்து, சாரம், குறிக்கோள் அனைத்தும் விவசாயப் பெருக்கமும், மக்கள் தொகைக் கட்டுப்பாடும் ஆகும். தமிழ்நாடு இத் துறையில் ஏறத்தாழ முன்னணியில் நிற்கிறது எனக் கூறிக் கொள்வதில் நாம் மகிழ்ச்சி பெறலாம். 1974-க்குள் பிறப்பு விகிதத்தை ஆயிரத்துக்கு 40 என்பதிலிருந்து 25 ஆகக் குறைக்க வேண்டுமென்பது, அரசின் இப்போதையக் கொள்கையாகும். இந்நோக்கம் நிறைவேறிட, ஒன்றியங்களின் ஒத்துழைப்பு மிக மிகத் தேவை.

கிராம வேலை வாய்ப்பு விரைவுத் திட்டம், தமிழகத்தில் 1971—72 முதல் அமலாக்கப் படுகிறது. இது மைய அரசின் முழு உதவி பெறும் திட்டமாகும். தமிழ் நாட்டில் 230 ஊராட்சி ஒன்றியங்கள் இத் திட்டத்தை நிறைவேற்றி வருகின்றன. இத் திட்டம் 1971—72-லிருந்து தொடர்ச்சியாக ஆண்டொன்றுக்கு வட்டாரத்திற்குச் சுமார் $1\frac{1}{4}$ இலட்சம் ரூபாய் ஒதுக்கீட்டுடன் செயல் பட்டு வருகின்றது. ஊர்ப் புறங்களில் வேலை வாய்ப்பின்றி இருக்கும் சுமார் 1,000 நபர்களுக்கு வருடமொன்றிற்கு 250 நாட்களுக்காவது வேலை வாய்ப்பளிப்பது, இத் திட்டத்தின் நோக்கம். உழைப்பின் அடிப் படையில் பல்வேறு வேலைகளை எடுத்துச் செய்து, அவ்வேலைகள் நிறைவேற்றப்படுவதன் மூலம் மக்கள் மேலும் பலன் பெறக் கூடிய தன்மையைக் கொண்டது இத் திட்டம். ரூ. 292.76 இலட்சம் செலவீட்டில் இதுவரை 4,397 மீட்டர் புதிய சாலைகள் அமைத்தும், 1,938 கி.மீட்டர் சாலைகள் மேம்பாடு செய்தும், 640 சிறுபாலங்கள், மதகுகள், தாம்போக்கிகளை அமைத்தும், இத் திட்டத்தின் மூலம் கிராமங்கள் பயன் பெற வழி வகுக்கப் பெற்று வருகின்றது.

தீவிர முன்னோடி கிராம வேலை வாய்ப்புத் திட்டம் தென் ஆர்க்காட்டில், மங்களூர் ஊராட்சி ஒன்றியத்திலே இவ்வாண்டிலிருந்து ஆரம்பிக்க வழி வகைகள் செய்யப்பட்டு வருகின்றன. இது மத்திய அரசின் திட்டமேயானாலும், தமிழக அரசு அதை நிறைவேற்றி வெற்றி பெற்றுத் தர முன் வந்திருக்கிறது. இத் திட்டத்தின்கீழ் மங்களூர் வட்டாரத்தில் ஆக்கப் பணிகளுக்குத் தங்களது உழைப்பு நல்க முன்வரும் மக்களுக்காகச் செலவிட, சுமார் 45 இலட்சம் ரூபாயை 1972-73ல் இருந்து மூன்றாண்டு



களுக்கு மைய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

படித்துப் பட்டம் பெற்றுள்ள இளைஞர்களிடையே சமூகத் தொண்டாற்றுவதற்கான உணர்வை ஏற்படுத்தும் முறையில் ''இளைஞர் அணி'' அமைக்கப்பட்டு இருக்கிறது. இதன் முதல் அணி, திருச்சியில் துவக்கப்பட்டது. கல்வி, மருத்துவம், வேளாண்மை, பொறியியல், அறிவியல், சுகாதாரம் போன்ற துறைகளில் பட்டம் பெற்ற இளைஞர்கள் இப்பணியில் தேர்ந்தெடுக்கப்படுவர். மாதம் ஒன்றுக்கு ரூ. 175 வீதம் ஒவ்வொருவருக்கும் உதவித் தொகை வழங்கப்படும்.

''அறிவு அற்றங் காக்கும் கருவி'' என்றார் வள்ளுவப் பெருந்தகை. இக்கருவியை நாட்டில் யாவரும் பெற்று உய்யும் வகையில் இவ்வரசு பல நல்ல திட்டங்களை அமைத்துள்ளது. கிராமப் பள்ளிகள் தரமுடைய கல்வியை அளிக்கும் வகைகளில், ''விஞ்ஞானக் கருவிகள் வழங்குதல்'' போன்ற திட்டங்களை நாம் உருவாக்கியுள்ளோம்.

ஆரம்பக் கல்விப் பணிக்கான செலவு நாளுக்கு நாள் பெருகி, வருவது, நாம் அடைந்துள்ள வளர்ச்சியின் அறிகுறியாகும். 1958-ஆம்வருடத்திய ஊராட்சிச் சட்டத்தின்படி அமைந்த மானிய முறைகள் இன்னும் நடைமுறையில் உள்ளன. கூடிவரும் செலவினங்களுக்கு ஏற்றவகையில், நிதி ஆதாரங்கள் மேலும் பெருக்கப்பட வேண்டும். மானிய முறைகள் மாற்றப்படவேண்டும். இதைக் கருத்தில் கொண்டு, இவ்வரசு முதன் முறையாக இப்பொருளைப் பரிசீலித்து ஆலோசனைகள் கூற, ஒன்றியக் கல்வி ஆய்வுக்குழு ஒன்றை நியமித்தது.

இக்குழுவின் பரிந்துரைகளை அரசு பரிசிலனை செய்து ஆணைகள் பிறப்பித்துள்ளது. இதன்படி ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கூடுதலாக அரசு மானியம் கிடைக்க வகை செய்யப்பட்டுள்ளது.

ஒன்றியப் பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கட்டித்தர ''விரைவுத் திட்டம்'' ஒன்றும் அரசின் ஆய்வில் உள்ளது. இப்போதுள்ள 21,900 ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் 14,930 பள்ளிகள் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. வருங்காலத்தில் பள்ளிகள் நிலையான கட்டடங்களில் இயங்குவதோடு காலப் போக்கில் மாநிலத்திலுள்ள

> நமது நாடு விடுதலை அடைந்தவுடன் கிராமங்களை முன்னேற்றுவதிலேயே மிகுந்த அக்கறை எடுத்துக் கொள்ளவேண்டும்.
>
> இந்தியாவின் உயிர் நாடியான கிராமங்கள் வளர்ச்சி அடைந்து முன்னேறினால் தான் நம் மக்கள் நல்வாழ்வுக்கு உறுதியான அடித்தளம் உருவாகும்.

எல்லா ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளும் சொந்தக் கட்டடங்களிலேயே செயல்படவேண்டும் என்ற கருத்துடன், ஆயுள் காப்பு நிறுவனத்தின் உதவி பெறும் திட்டம் ஒன்றும், அரசின் ஆலோசனையிலுள்ளது. இத் திட்டத்தின்கீழ் மூன்றாண்டுக் காலத்தில் 7,377 தொடக்கப் பள்ளிகளுக்கும், 1,112 உயர் தொடக்கப் பள்ளிகளுக்கும் கட்டடங்கள் கட்டித்தரத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஊராட்சிகளில் வானொலிப் பெட்டிகள் நிறுவும் செயல்திறன் மிக்க திட்டமொன்று தொடர்ந்து செயல்படுத்தப் பட்டதனால் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் இம்மாநிலத்திலுள்ள எல்லா ஊராட்சிகளிலும் வானொலிப் பெட்டிகள் நிறுவப்பட்டு விட்டன. இத் திட்ட வேலைகள் தற்போது ஊர்கள், சிற்றூர்களுக்குக் கூட விரிவாக்கப்படுகின்றன.


மொத்தம் உள்ள 57,794 கிராமங்களில் 1969—70-ஆம் நிதியாண்டு முடிய 23,088 வானொலிப் பெட்டிகள் நிறுவப்பட்டன. 1970—71-ஆம் ஆண்டில் 4,770 வானொலிப் பெட்டிகளும் 1971—72-ஆம் ஆண்டில் 5,000வானொலிப் பெட்டிகளும் நிறுவப் பட்டுள்ளன. ஆக 1971-72-ஆம் நிதியாண்டின் இறுதியில் 31,200 கிராமங்களில் வானொலிப் பெட்டிகள் நிறுவப் பட்டுள்ளன.

ஊராட்சி வானொலிப் பெட்டிகள் வாயிலாக, ஊர் வளர்ச்சிக்கான சிறப்பு நிகழ்ச்சிகளைக் கேட்கவும், தம்முள் கலந்து பேசி அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவும், செயலாற்றிப் பயன் பெறவும், வானொலி மன்றங்கள் சிறந்த பணியாற்றி வருகின்றன. இவற்றுக்கு மேலும் ஊக்கமூட்டும் நோக்கத்தோடு, திருச்சி வானொலி நிலையத்தாரின் ஒத்துழைப்புடன், சென்ற ஜூலைத் திங்களில் தமிழ் நாடு அரசு ஒரு பரிசுத் திட்டத்தை உருவாக்கி நிறைவேற்றியுள்ளது. மாநிலப் பரிசு ஒன்று 300 ரூபாய் அளவுக்கும், மாவட்டப் பரிசு ஒவ்வொன்றும் 200 ரூபாய் அளவுக்கும் ஏற்படுத்தப் பட்டது. அண்மையில், அக்டோபர்த் திங்களில் நடைபெற்ற சமுதாய நல விழாவின்போது இப்பரிசுகளை, மாவட்ட ஆட்சியாளர்கள் அளித்ததோடு, வானொலி மன்றங்களின் வளர்ச்சியில் தனிக்கவனம் செலுத்தி வருவதையும் அறிந்து மிகவும் மகிழ்கிறேன்.

நமது மாநிலத்தில் மொத்தம் 2,092 குழந்தைகள் காப்பகங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் 1,000 குழந்தைகள் காப்பகங்களுக்கான கட்டடங்களைக் கட்டுவதற்கும், அவற்றின் மூலம் இரண்டு முதல் ஐந்து வயது வரை உள்ள குழந்தைகளுக்கும், கர்ப்பிணிகளுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும், ஐந்தாண்டுகளுக்கு இலவச உணவு வழங்குவதற்கும், 'கேர்' நிறுவனம் பொறுப்பேற்றுள்ளது. இதுவரை 1,000 குழந்தைகள் காப்பகங்களில் இத் திட்டம் செயற்படுத்தப்பட்டுச் சுமார் 85,000 பேர் பயனடைந்துள்ளனர். இது வரை 115 குழந்தைகள் காப்பகங்கள் 'கேர்' நிறுவனத்தின் உதவியுடன் கட்டப்பட்டுள்ளன. மீதியுள்ள காப்பகங்களுக்கும் நிரந்தரமான கட்டடங்கள் கட்டுவதற்குக் 'கேர்' நிறுவனத்தின் உதவியைப் பெறுவதற்கு தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

நமது மாநிலம் இந்திய நாட்டின் பெரிய மாநிலங்களில் ஒன்று. பொருளாதார, சமூகத் துறைகளில் அமைதியான புரட்சியொன்றை ஏற்படுத்தி, வறுமை நிரம்பிய மக்களின் வாழ்வில் புத்தொளி காணும் மகத்தான முயற்சியில் நாம் எல்லாரும் ஈடுபட்டுள்ளோம். அறியாமையை அகற்றி, உயர்வு தாழ்வின்றிச் சாதிமதப் பாகுபாடுகளைக் களைந்து, பகுத்தறிவுடன் பிரச்சினைகளை நோக்கித் தீர்க்கும் உணர்ச்சியுள்ளவராய், நமது மாநிலத்தில் பல வளங்களைச் சீராகப் பயன்படுத்தி, ஓர் ஒப்பற்ற சமதர்ம சமுதாயத்தை நிறுவ நாம் மேற்கொண்டுள்ள பணியில், ஊராட்சிகளும், பேரூராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும் இன்றியமையாத பங்கு பெறுகின்றன.

[ஊராட்சி வளர்ச்சிக் கருத்துரைக் குழுக்களின் ஏழாவது கூட்டத்தில் ஆற்றிய உரையின் ஒரு பகுதி.]


செய்தியே! சித்திரமே!
கிராமப்புற இணைப்புச் சாலைகளுக்கு அடுத்த ஆண்டு ரூ. 4 கோடி செலவிடப்படும்.
ஒவ்வொன்றும் 16 லட்சம் ரூபாய் செலவில் தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை, நெல்லை மாவட்டம் தாழையூத்து, செங்கற்பட்டு மாவட்டம் திம்மாவரம் ஆகிய இடங்களில் தவிடு, பிண்ணாக்குகளிலிருந்து எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலை அமைக்கப்படும்.
தமிழ்நாட்டிலுள்ள எல்லா நகராட்சிகளுக்கும் அடுத்த ஆண்டு இறுதிக்குள் குடிநீர் வசதி செய்து கொடுக்கப்படும்.
1971-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கின்படி தமிழகத்தில் நகராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள் எண்ணிக்கை கூடுதலாக்கப்பட்டுள்ளது. வரும் நகராட்சித் தேர்தலின் போது இது நடைமுறைக்கு வரும்.
நகராட்சி மன்றம்

# ஊராட்சி வளர்ச்சிக்கு ஒப்பற்ற பணிகள்

ஒன்பதாம் நூற்றாண்டுக்குச் சற்று முற்பட்ட காலத்திலேயே சோழப் பேரரசர்களின் கீழ் உள்ளாட்சித் துறை பெரும் வளர்ச்சி பெற்றுச் செழித்திருந்த வரலாறு, நம் பண்டைய வரலாறாகும். இது நாம் எடுத்துக் கொண்டுள்ள சீரிய பணியில் நம்மை ஊக்குவிக்கும் வரலாற்றின் ஒளிக் கீற்றாகும். இராசராச சோழரின் அரசுப் பகுதிகள் ''8 மண்டலங்களாகவும்'' மண்டலங்கள் ''வளநாடுகளாகவும்'' வள நாடுகள் ''கோட்டங்கள்'' எனவும் 'பிரிக்கப்பட்டு நிருவகிக்கப்பட்டன.

ஒவ்வொரு கோட்டமும் சுயாட்சி பெற்ற பல ஊர்களைக் கொண்டதாகவும் அமைந்திருந்ததென வரலாறு நமக்கு அறிவிக்கிறது. ஊராட்சி, திறம்பட நடைபெறப் பல குழுக்கள் இயங்கி வந்திருக்கின்றன. இக்குழுக்களுக்குத் தேர்ந்தெடுக்கப்படவேண்டிய உறுப்பினர்கட்குச் சொத்து, கல்வி போன்ற சில தகுதிகள் வரையறுக்கப்பட்டிருந்ததாகவும் அறிகிறோம். கோட்ட வாரியம், ஏரி வாரியம், கழனி வாரியம், கணக்கு வாரியம், அறநிலை வாரியம் போன்ற பல குழுக்கள் ஊராட்சி நிருவாகத்தினை இயக்கும் உயிர்நாடிகளாக விளங்கியுள்ளன. எனவே, தேர்ந்தெடுக்கப்பட்ட குழுக்களின் மூலம் நிருவாகம் நடைபெற்று வருவது, நமக்குப் புதிய ஒன்றன்று என்பது வரலாறு உணர்த்தும் உண்மையாகும்.

மக்களாட்சி முறை தழுவிய இவ்வாட்சி முறை 19-ஆம் நூற்றாண்டு வரை நடைமுறையில் இருந்து வந்தது. நாளடைவில் அந்நிய ஆதிக்கத்தின் கீழ் இம்முறை சீர்குலைவு பெற்றது. எனினும் நாட்டு விடுதலைக்குப் பின்பு, இச்சீரிய கொள்கை மறுமலர்ச்சி பெற்றுப் ''பஞ்சாயத்து அரசு'' என்ற தத்துவத்தின் பேரில் புத்துயிர் பெற்றுள்ளது. சிற்றூர்க் குடியாட்சியே நாட்டாட்சியின் அடித்தளம் என்றும், பயிற்சிக் களம் என்றும் ஒத்துக் கொள்பவர்கள் ''பஞ்சாயத்து அரசு'' பயன் பெற்றவையாக அமைதல் வேண்டும் என்பதில் கருத்து வேற்றுமை கொள்வதற்கு இடமில்லை. வழிவழி வந்த அந்த நற்பண்புக்கேற்ப நாம் செயலாற்ற முனைந்ததன் விளைவே இன்றைய ஊராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவை.

இன்று அரசு காட்டும் பேரார்வத்தின் காரணமாக, வளர்ச்சிப் பணிகள் சிறந்து விளங்க, நல்லதொரு சூழ்நிலை ஊர்ப்புறங்களிலே உருவாகியுள்ளது. ஊர்கள் யாவும் ஊக்கமும், ஆக்கமும் பெற்றுத் தமிழகத்தைத் தன்னிகரில்லா மாநிலமாக விளங்கச் செய்யும் மாபெரும் வாய்ப்பு இப்போது ஏற்பட்டுள்ளது. இந்தச் சீர்முகத் திட்டங்கள் உருவாவதில் பேரார்வம் காட்டி, அரசுக்கு உறுதுணையாய் நின்று பாடுபட்டுவரும் உங்களுக்கு என் உளங்கனிந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மக்களுக்காக உள்ள அரசு அல்லது மக்கள் அரசு என்பதனை மக்களுக்குப் புலப்படுத்தி ஆக்கப் பணிகளில் மக்களை ஊக்கம் கொள்ளச் செய்து வருவது, இவ்வரசின் தலையாய பணிகளில் குறிப்பிடத்தகுந்த ஒன்று.

இத்துறையில், நடந்து முடிந்த ஊராட்சித் தேர்தல் புதியதோர் திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. 1970-ஆம் ஆண்டு சூலைத் திங்களில் 12,651 ஊராட்சிகளுக்கும், 506 பேரூராட்சிகளுக்கும் பொதுத் தேர்தல்கள் நடைபெற்றன. சற்றேறத்தாழ 190 இலட்சம் வாக்காளர்கள் இத்தேர்தலில் வாக்களித்தனர். சட்டப்பேரவை வாக்காளர் பட்டியலைத் தவிர்த்து, இத்தேர்தலுக்கெனவே தனி வாக்காளர் பட்டியல் இல்லங்கள் தோறும் சென்று கணக்கெடுத்து, 1958 ஆம் ஆண்டைய தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப்பிரிவு 20 (2)-ன் கீழ் வெளியிடப்பட்டது. இப்படி ஊராட்சித் தேர்தலுக்காகத் தனி வாக்காளர் பட்டியல் தயாரித்தது, தமிழ்நாடு வரலாற்றிலேயே முதல் நிகழ்ச்சியாகும்.

ஊர் அல்லது நகரிலுள்ள வாக்காளர்கள், முதல் முறையாக, இரகசிய வாக்கெடுப்பு மூலம், ஊராட்சித் தலைவர்களை நேரடியாகத் தேர்ந்தெடுத்தது, மற்றொரு முக்கிய நிகழ்ச்சியாகும். இம்முறை சரிவரச் செயல்படுகிறதா என்பதனை அரசு மாவட்ட ஆட்சியாளர்கள் தரும் கணிப்பைக் கொண்டு ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள் நேரடியாகத் தேர்ந்தெடுத்தல் குறித்துப் பரிசீலிக்கும். ஊராட்சி மன்ற உறுப்பினர்களுக்கும், தலைவர்களுக்கும் தேர்தல்கள் ஒரே நேரத்தில் நடைபெற்றன. கன்னியாகுமரி மாவட்டத்தில் முன்பிருந்த ஊராட்சிகளில் அடங்கிய பகுதிகள் சீர்செய்யப்பட்டுச் சிறிய அடக்கமான பகுதிகள் கொண்ட 224 64 பேரூராட்சிகள், ஊராட்சிகளாகவும்; திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வட்டத்தில் முன்பிருந்த 6 ஊராட்சிகள், 4 பேரூராட்சிகள், 6 ஊராட்சிகளாகவும் திருத்தியமைக்கப்பட்டன. மாநிலத்தில் மற்றப் பகுதிகளில் உள்ள ஊராட்சி

முறையைப் போல் இங்கும் இருக்க வேண்டுமென்பதற்காக, இந்நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது.

ஊராட்சி வளர்ச்சி நிருவாகத்தில் வட்டார நிருவாக அமைப்பு முறையைச் சீர் செய்யும் எண்ணத்துடன், இதை நிருவாகச் சீரமைப்புக் குழுவின் ஆய்வுக்கு விட்டிருக்கிறோம்.

கடந்த கால அனுபவங்கள் வருங்காலத் திட்டத்தைச் செம்மையாக்கிட உதவும் எனக் கூறப்படுவதுண்டு. எனவே, நம் எதிர்காலத் திட்டத்தை உருவாக்கும் முன்பு, சென்ற வரை நடந்து வந்துள்ள நெறியைச் சற்றே திரும்பிப் பார்ப்பதில் தவறில்லை என்றே கருதுகிறேன். ஊராட்சி வளர்ச்சி நிருவாகத்தில் இதுவரை செய்யப்பட்டுள்ள நிருவாகச் சீர்திருத்தங்கள் பின்வருமாறு:—

(1) கால்நடை வளர்ச்சித் துறையைத் திருத்தியமைத்து, ஒவ்வொரு வட்டாரத்திலும் துணை நிலையங்களின் எண்ணிக்கையையும், கால்நடை வளர்ச்சி அலுவலர்களின் எண்ணிக்கையையும் உயர்த்தி, ஒரு கட்டுக்கோப்பான பகுதியை அவர்கள் பொறுப்பின் கீழ்க் கொணர்ந்து, இத்துறையில் எல்லாப் பணிகளும் செவ்வனே நடை பெற வழி வகுக்கப் பட்டுள்ளது.

(2) ஊராட்சி வளர்ச்சி நிருவாகம் திறம்பட இயங்க இடமளிக்கும் வகையில் ஊராட்சித் துறையைத் திருத்தியமைக்கும் பணியில் முதற்படியாக 47 கோட்ட ஊராட்சி அலுவலர் பதவிகள் தேர்வு நிலை வட்டார வளர்ச்சி அலுவலர் பதவிகளாக உயர்த்தப் பட்டுள்ளன.


(3) வட்டாரப் பகுதிகளில் கடன்களை வசூலித்தல், ஊராட்சி, மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலங்களை நிருவகித்தல், நில ஆக்கிரமிப்புகள் போன்ற பல்வேறு வேலைகளைக் கவனிக்கத் தனி அலுவலர் பதவிகளை ''வளர்ச்சி அலுவலர் (வருவாய்)'' என்ற பெயரில் தோற்றுவித்து, ஊராட்சி ஒன்றியங்களின் நிதி நிலை உயர வகை செய்யப்பட்டுள்ளது.

(4) 1967-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் நீக்கப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர்

1970-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதல் மீண்டும் புதுப்பிக்கப்பட்டுள்ளன. பெயரே பணி நிலையை விளக்கும் வகையில், நேர் உதவியாளர் (ஊராட்சி வளர்ச்சி) என்ற பதவியை, ''மாவட்ட வளர்ச்சி அலுவலர்' என்று பெயரிட்டு அழைக்க முடிவு செய்யப்பட்டது.

ஊராட்சி நிருவாகத்தில் பங்கு கொண்டுள்ள உங்களனைவரின் கருத்துக்களையும் அறிந்து, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றின் நிருவாக அடிப்படையில் என்னென்ன விதமான மாற்றங்களும் முன்னேற்றத் திட்டங்களும் தேவைப்படுகின்றன என்பதை ஆலோசித்துத் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள இன்றைய அரசு விரும்புகிறது. இந்தச் சூழ்நிலையில், நாம் இதுவரை செய்துள்ள சில வளர்ச்சிப் பணிகள் பற்றிய விவரங்களைக் குறிப்பாக 1971—72-ஆம் ஆண்டில் ஆற்றியுள்ள பணிகளைச் சுருக்கமாக உங்களுக்கு எடுத்துக் கூற விரும்புகிறேன்.

குறிப்பாக எல்லா ஊராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும் வேளாண்மையில் சிறந்த முன்னேற்றம் காணவும், ஆரம்பக் கல்வித் துறையில் நிறைவு காணவும், குடும்ப நலத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றவும், குடிநீர்த் திட்டம், கிராம வேலை வாய்ப்பு நிறைவுத் திட்டம், இணைப்புச் சாலைகள், சாலை பராமரிப்புத் திட்டங்கள், மற்றும் முன்னேற்றத்திட்டங்கள் அனைத்திலும் முழு வெற்றி காணச் சீருடனும் சிறப்புடனும் செயல்பட்டு வருகின்றன.



கல்வி-உள்ளாட்சி அமைச்சர்

நாவலர் நெடுஞ்செழியன்

மேலும், கால்நடை வளர்ச்சி, மீன் வளம், சமூகக் கல்வி, மகளிர் குழந்தைகள் நலம், கிராமக் கலை, கைத்தொழில் திட்டம், இதுபோன்ற திட்டங்களும், இவையன்றிச் சத்துணவுத் திட்டம், குழந்தைகள் காப்பகம் போன்ற சிறப்புத் திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்படுகின்றன. இவ்வரசின் முக்கியக் குறிக்கோள், கிராம மக்களுக்கு அடிப்படைத் தேவையான குடிநீர், மின்சார விளக்கு, இணைப்புச் சாலைகள் ஆகியவற்றைக் குறைந்த காலத்தில் அமைத்துக் கொடுப்பதே யாகும். இதை நிறைவேற்றுவதில் ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சிகள், ஊராட்சிகள் முக்கியப் பங்கு ஏற்றுச் செயல்படவேண்டும்.

1971—72-ஆம் ஆண்டு மார்ச்சு முடிய 5,340 மேல் நிலை நீர்த் தொட்டிகள், மற்றும் தானியங்கி அழுத்தத் தொட்டிகள், 69,700 கிணறுகள், 50,150 கிலோ மீட்டர் சாலைகள், 14,030 பள்ளிக்கூடங்கள் முதலியன 374 ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் உள்ளன.

'' வெள்ளத் தனையது மலர் நீட்டம், மாந்தர்தம் உள்ளத் தனையது உயர்வு'' என்ற பொய்யா மொழியினை இங்கு நினைவுபடுத்தி, இந்நாளில் நாம் பெற்றுள்ள மேற்கூறிய வசதிகளும், வாய்ப்புகளும், எந்த நாளும் நிலைத்துப் பெருகிட, நம் சிந்தனையும் செயலும் எம்முறையில் அமைந்திடல் வேண்டும் என்பதை ஆய்ந்தறிந்து, அதற்கேற்ற நெறிமுறைகளின்படி நாம் செயலாற்றி வெற்றி கண்டிட வேண்டும் என்பதே, இந்த நேரத்தில் நான் உங்களுக்கு விடுக்கும் வேண்டுகோள்.

[ஊராட்சி வளர்ச்சி கருத்துரைக் குழுக்களின் ஏழாவது கூட்டம் 1—11—1972 அன்று நடைபெற்ற

# அகிலம் போற்றும் நேரு

புலவர் தமிழ்ப்பித்தன்

இந்தியத்தாய் நலம்பாட எழுந்த கொண்டல்!
இமயத்தைச் சிறிதாக்கும் வெற்றிக் காட்சி
சந்தித்த தேனருவி! திசைகள் எட்டும்
சஞ்சரித்த சுடர்இரவி! மாலைத் தென்றல்!
சிந்தித்த கருத்தெல்லாம் விளைச்சல் கொள்ளத்
திரண்டெழுந்த அமுதமழை! வற்றா ஊற்று!
முந்திநின்ற வெள்ளையரை ஆட்டி வைக்க
மூண்டெழுந்த புயற்காற்று-வீரர் நேரு!


பெற்றெடுத்த தந்தைக்குப் பெருமை சேர்த்துப
பெரும்புவியில் நிலைக்களனாய் வாழ்ந்த செம்மல்!
உற்றடுத்த காந்தியெனும் தலைவர் போற்ற
ஒளிவீசித் திகழ்ந்திருந்த திறமைத் தொண்டர்!
கற்றறிந்த செல்விக்கு வரலாறெல்லாம்
கனிச்சாற்றுக் கடிதத்தால் வரைந்தே காட்டி
முற்றிநின்ற முழுநிலவு; மூடக் கொள்கை
போக்கிடவே ஆர்த்தெழுந்த நெருப்பின் ஆறு!

பிஞ்சுகளின் நெஞ்சுகளில் எளிதாய் நின்ற
பெருமகனார்-திருமகனார்: வானில் தோன்றும்
செஞ்சுடரை விஞ்சுகின்ற வண்ண மேனி;
செயலெல்லாம் துடிதுடிப்பே கொண்ட தேனீ!
பஞ்சுநுரை வெண்புறாவைப் பறக்க விட்டே
பாரெல்லாம் அமைதிவழி நாடி நின்ற
கஞ்சமலர்: கனிவான உடையில் நித்தம்
வண்மலராய் ரோஜாவை ஏற்ற தோன்றல்!

"ஆலைகளே ஆலயங்கள்" எனவே சொல்லி
ஐந்தாண்டுத் திட்டங்கள் அன்பாய் நல்கி,
பாலைகளைச் சோலைகளாய் மாற்றும் தொண்டில்
பரிவுடனே முனைந்தவர்தான்: ஒவ்வோர் நாளும்
வேலையினைப் பதினெட்டு மணிகள் செய்தே
வீங்குபுகழ் பெற்றவர்தான்: புதிதாய்த் தோன்றும்
சாலைகளை அகலமுடன் படைப்ப தென்னும்
தத்துவத்தை-திட்டத்தை இவரே தந்தார்!

நூலகத்தை ஆர்வமுடன் நாடிச் சென்றே
நுண்மைகளை ஆய்ந்தறிந்தே இன்பம் கண்ட
சீலரவர்; வள்ளுவர்தம் குறளின் நீதி
தேர்ந்திருந்த தூயரவர்; என்புச் சாம்பல்
கூளமென எண்ணாமல், "வயல்கள் எல்லாம்
கோலமுறத் தெளித்திடுதல் வேண்டும்" என்றே
ஆழமுடன் உயில்எழுதி வைத்துச் சென்ற
அறிவாளர் நேருவினை அகிலம் போற்றும்!





# கனவு பலித்தது!



நீண்டகாலக் கனவு பலித்ததற்காக 16–9–1970 அன்று தமிழகமே மகிழ்ச்சியில் திளைத்திருந்தது!

ஆம்! அன்றுதான் மாண்புமிகு இந்தியத் தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தி அவர்கள், தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் தலைமையில் சேலம் இரும்புத் தொழிற்சாலைத் திட்டத்தைத் துவக்கிவைத்து நாலரைக் கோடி தமிழர்களின் நீண்ட காலக் கனவை நனவாக்கினார்!

கனவு பலித்தது! கனவு பலித்ததென்ற களிப்பில் கவலையற்றிருந்த தமிழக மக்களின் உள்ளத்திலே—''சேலம் இரும்புத் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் நிலைக்குமா? எப்பொழுது துவங்கப்படும்? சேலம் இரும்புத் தொழிற்சாலையில் உற்பத்தி எப்பொழுது துவக்கப்படும் ?'' என்பது போன்ற ஐயத்திற்குரிய சில வினாக்களைச் சிலர் அடிக்கடி எழுப்பி வந்ததன் காரணமாகக் கனவு பலித்தும், பலன் கிட்டவில்லையே என்ற ஏக்கம் இருந்து வந்தது!

இந்த ஏக்கம் 13—6—1972 அன்று சேலம் இரும்புத்தொழிற்சாலைக்கான இடத்தைத் தயாரிப்படுத்தும் வேலை துவக்கப்பட்டதாலும், வேலை தொடர்ந்து முன்னேற்றமான நிலையில் நடைபெற்று வருவதாலும்—படிப்படியாகக் குறைந்து வருகிறது.

சேலம் இரும்புத் தொழிற்சாலை பற்றி அடிக்கடி எழுப்பப்படும் ஐய வினாக்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் 25—10—1972 அன்று, சேலம் இரும்புத் தொழிற்சாலையை நடத்துவதற்காக, 'சேலம் ஸ்டீல் லிமிடெட்' (Salem Steel Ltd.) என்ற பெயரில் தனி நிறுவனம் (கம்பெனி) ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதனால் ஒளிமயமான எதிர்காலம் விரைவில் தமிழ்நாட்டிற்குக் கிடைக்கவிருக்கின்றது என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

'சேலம் ஸ்டீல் லிமிடெட்' என்ற நிறுவனம் இந்தியாவில், பொதுத் துறையில் அமைக்கப்பட்டுள்ள 3-வது இரும்புத் தொழிற்சாலை நிறுவனம் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ரூபாய் 340 கோடி செலவில் ஆண்டுதோறும் 70,000 மெட்ரிக் டன் 'எவர் சில்வர்' இரும்பும் (Stainless steel) 75,000 மெட்ரிக் டன் மின்சார இரும்பும் (Eletrical Steel) மெட்ரிக் டன் 50,000 சிறப்பு வகை இரும்பும் உற்பத்தி செய்வதற்கான வகையில் சேலம் இரும்புத் தொழிற்சாலையை அமைக்க 'சேலம் ஸ்டீல் லிமிடெட்' விரைந்து செயல்படும்.

சேலம் இரும்புத் தொழிற்சாலைக்காக இதுவரை 1,000 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டுள்ளது. இதனால் இடம் பெயர்ந்த 1,000 குடும்பங்களுக்கு நட்ட ஈடு வழங்குவதற்காக 75 இலட்சம் ரூபாயை இந்திய அரசு தமிழ்நாடு அரசிடம் ஒப்படைத்துள்ளது. இடம் பெயர்ந்த 1,000 குடும்பங்களுக்கும் மாற்று இடம் கொடுக்கப்பட்டுள்ளது. மாற்று இடத்திற்கு அனுப்பப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திலும் ஒவ்வொருவருக்காவது வேலை கொடுக்க வேண்டும் என்று திட்டமிடப்பட்டுள்ளது.

'சேலம் ஸ்டீல் லிமிடெட்' நிறுவனத்தின் தலைமை அலுவலகம் சேலத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இப் புதிய நிறுவனம் துவக்கத்தில் 100 கோடி ரூபாய் அதிகாரமளிக்கப்பட்ட மூலதனத்துடன் (Authorised Capital) இயங்கும். இந்நிறுவனம் 1956-ஆம் ஆண்டின் கம்பெனிகள் சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு பதிவு செய்வதற்கான பத்திரத்தை, கம்பெனி சட்ட வாரியத்தின் மண்டல இயக்குநர் திரு எஸ். சி. பத்ரு அவர்கள், 'சேலம் ஸ்டீல் லிமிடெட்' நிறுவனத்தின் நிருவாக இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ள திரு வி. சுப்ரமணியம் அவர்களிடம் 25—10—1972 அன்று சென்னை இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற விழாவில் ஒப்படைத்தார்.

''சேலம் இரும்புத் தொழிற்சாலை, இன்னும் 3 ஆண்டுக் காலத்திற்குள் உற்பத்தியைத் துவக்கும். சேலம் இரும்புத் தொழிற்சாலை முழு அளவில் உற்பத்தி செய்ய இன்னும் 6 ஆண்டுக் காலம் ஆகும்'' என்று இந்திய அரசின் எஃகு மற்றும்

சுரங்கத்துறை அமைச்சர் திரு மோகன் குமாரமங்கலம் அவர்கள் மேற்கூறிய விழாவில் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:

"சேலம் இரும்புத் தொழிற்சாலைத் திட்டம் மிகப் பெரிய திட்டமாகும். மற்ற இடங்களில் உற்பத்தி செய்யப்படும் இரும்புபோல் அல்லாமல், சேலத்தில் உயர்ந்த ரக இரும்பு உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. எனவேதான் திட்டம் தீட்டுவதில் கால தாமதம் ஆகியது. இப்பொழுது சேலம் இரும்புத் தொழிற்சாலைக்கான வேலைகள் வெகு வேகமாக நடந்து வருகின்றன.

சேலம் இரும்புத் தொழிற்சாலைக்கான மின் சக்தியைக் கிலோவாட் மணி நேரத்திற்கு 8.6 காசு என்பதற்குப் பதிலாக 5 காசு என்று குறைந்த விலையில் வழங்கிட ஒப்புக்கொண்டதற்காகத் தமிழ்நாடு அரசுக்கு மத்திய அமைச்சர் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

"சேலம் ஸ்டீல் லிமிடெட்" நிறுவனம் துவக்கப்படுவதன் மூலம், சேலம் இரும்புத்தொழிசாலை உருவ அமைப்பைப் பெறுவதால் தமிழ்நாடு அரசு மகிழ்ச்சி அடைகிறது" என்று இவ்விழாவில் கலந்துகொண்ட தமிழ்நாடு தொழில் அமைச்சர் திரு மாதவன் அவர்கள் குறிப்பிட்டதுடன், "சேலம் இரும்புத் தொழிற்சாலைத் திட்டத்திற்கு முழு ஒத்துழைப்பையும் தந்திடத் தமிழ்நாடு அரசு தயாராக இருக்கிறது" என உறுதிப்படுத்தினர்.

'சேலம் ஸ்டீல் லிமிடெட்' நிறுவனம் துவக்கப்பட்டது, நாலரைக் கோடித் தமிழர்களின் நீண்டகாலக் கனவு பலித்துவிட்டதன் முதல் பலனாக விளங்குகிறது. சேலம் இரும்புத் தொழிற்சாலை முழு அளவில் உற்பத்தியைத் துவக்கும் போது, நீண்டகாலக் கனவு நனவாகியதன் முழுப் பலனையும் தமிழகம் பெறும் என்பது திண்ணம். அந்த நாள் விரைவில் வந்திட அனைவரும் ஒத்துழைப்பு நல்குவோம்.

—ஆர். எம்.

---




தமிழ்நாட்டில் உள்ள காட்டு வளத்தைப் பெருக்குவதற்காக ரூ. 28 கோடி செலவில் தமிழக அரசு திட்டம் தீட்டி உள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள காடுகளை விரிவு படுத்தி அதன் மூலம் வேலை வாய்ப்பை உருவாக்குவதுபற்றித் தமிழ்நாடு திட்டக்குழு உறுப்பினர் டாக்டர் மால்கம் ஆதிசேசையா தலைமையில் ஒரு குழு பரிசிலனை செய்து ஒரு திட்டம் தீட்டியுள்ளது; அத்திட்டத்தின் விவரம் வருமாறு:

தமிழ்நாட்டில் தொழில்வளம் பெருகுவதற்கு ஏற்பக் காடுகளை விரிவாக்கும் இந்தத் திட்டம் 12 ஆண்டுக் காலத்தில் நிறைவேற்றப்படும்.

காடுகளில், காகிதம் தயாரிப்பதற்குப் பயன்படும் மரங்கள், மற்றும் தொழிற்சாலைகளுக்குத் தேவையான தேக்குப் போன்ற மரங்களையும் அதிகமாகப் பயிரிட வேண்டும். இப்போது தமிழ்நாட்டில் உள்ள காட்டுப் பகுதிகள் 12 ஆண்டுகளில் மேலும் விரிவுபடுத்தப்படும்.

காடுகளை விரிவுபடுத்துவதன் மூலம் தொழில் வளத்திற்குத் தேவையான மூலப் பொருள்கள் அதிகமாகக் கிடைக்க வாய்ப்பு ஏற்படும். இதன் மூலம் தொழில் வளத்தைப் பெருக்க முடியும்.

இது தவிர தேயிலை, காபி, ரப்பர் போன்ற தோட்டப் பயிர்களை உற்பத்தி செய்வதற்காக ரூ. 3 கோடியே 73 இலட்சம் செலவில் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் தமிழ்நாட்டிற்கு வரும் இலங்கைத் தமிழர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும்.

சுற்றுலாவின் வளர்ச்சியை யொட்டிக் கோவை மாவட்டத்தில் வன விலங்குகளுக்காக 3 சரணாலயங்களை ஏற்படுத்த வேண்டும். இது தவிர முந்திரிப் பழத்தில் இருந்து ஒரு வகை மது தயாரிப்பதற்காகத் தனித் தொழிற்சாலை ஒன்றும், சந்தனத்தைலம் தயாரிப்பதற்காக ஒரு தொழிற்சாலையும் அமைக்க வேண்டும்.


காட்டு வளத்தை எப்படி விரிவுபடுத்துவது, பாதுகாப்பது என்பது பற்றி அதிகாரிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும். அதுபற்றி ஆராய்ச்சி நடத்தவும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

தொழில் வளத்திற்கு அடிப்படையான இந்தக் காட்டு வளப்பகுதியை, நல்ல முறையில் மேற்பார்வை யிடுவதற்காகவும் வளரச் செய்வதற்காகவும் 'தனி நிறுவனம்' ஒன்றை ஏற்படுத்த வேண்டும்.

இவை தவிரத் தமிழ்நாட்டில் உள்ள 8 முக்கிய அணைக் கட்டுகளில் மண் அரிப்பைத் தடுப்பதற்காக ரூ. 2 கோடி செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

1972–73-ஆம் ஆண்டில் தொடங்கப்படும் இந்தத் திட்டம் 1983–84-ஆம் ஆண்டில் முடிவடையும். இந்தத் திட்டம் முடிவடைந்தால், இப்போது காடுகளில் இருந்து அரசுக்குக் கிடைக்கும் வருமானத்தைப் போல் இரண்டு மடங்கு வருமானம் கிடைக்கும்.

இதன் மூலம் மொத்தம் ஏறத்தாழ 20 ஆயிரம் பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும்.



# சிறப்பாக வளரும் சிறுதொழில்!

"அன்றைக்குத் திருவள்ளூருக்கு இரயிலில் போய்க் கொண்டிருந்த போது, அது என்ன அண்ணா என்று கேட்டாயே அதுதான் இந்தத் தொழிற் கூடம்" என்று அந்தத் தொழிற்கூடத்தைச் சுட்டிக் காட்டினான் இளங்கோ. அவன் தங்கை மணிமேகலை அந்தப் பரந்த இடத்தையும், அங்கே உருவாகியுள்ள தொழிற் கூடங்களையும் பார்த்தாள்.

கொரட்டூருக்கும், அம்பத்தூருக்கும் இடையில் உள்ள அந்த 'அம்பத்தூர் தொழிற் பேட்டை'யைச் சுற்றிப் பார்க்க இருவரும் அதனுள் நுழைந்தனர்.

"அண்ணா! இந்தத் தொழிற் கூடங்களையெல்லாம் நிறுவியது யார் அண்ணா?"

"தமிழ்நாடு அரசுதான் மேகலை. 'சிட்கோ' என்னும் சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தார்தான் 36,000 ஏக்கர் பரப்பளவுள்ள இந்த இடத்தைத் தேர்ந்தெடுத்துப் பல தொழிற் கூடங்களை உருவாக்கி வருகிறார்கள்."

"இதோ தெரிகிறதே இவையனைத்தும் தொழிற்கூடங்கள் தானா?"

"ஆமாம். இப்போது பதினேழு தொழிற் கூடங்கள் கட்டப் பட்டு, அவற்றில் தொழில்கள் நடந்து வருகின்றன. இவையனைத்தும் ஐந்தே மாதங்களில் கட்டி முடிக்கப் பட்டவை. இன்னும் 25 தொழிற்கூடங்கள் கட்டப்பட்டு உருவாக்கப்பட்டு வரும் கட்டட வேலைகளைக் காட்டினான் இளங்கோ.

"இங்கே என்னென்ன தொழில்கள் நடைபெறுகின்றன அண்ணா?"

"பல்வேறு தொழில்கள், இங்கே பாங்காக வளருகின்றன. அவற்றுள் சிலவற்றைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். துத்தநாக சல்பேட், ரப்பர் பொருள்கள், வேளாண்மைக் கருவிகள், அலுமினியப் பொருள்கள், பாலித்தீன்—பிளாஸ்டிக் சாமான்கள், இரும்புச் சாமான்கள் போன்ற பல தொழிற்கூடங்கள் தற்போது இயங்கி வருகின்றன" என்று சொன்ன இளங்கோ துத்தநாக சல்பேட் என்னும் உரம் தயாரிக்கும் தொழிற் கூடத்திற்குள் மணிமேகலையை அழைத்துச் சென்றான். தயாராகும் இந்த உரமானது தேயிலை, காப்பிச் செடிகளுக்குச் சிறந்த உரமாகும்.

"இந்தத் தொழிற் கூடங்களெல்லாம் தொழில் நடத்துபவர்களுக்குச் சொந்தமானவையா?"

"ஒரு காலத்தில் இந்தக் கூடம் அவர்களுக்கே சொந்தமாகிவிடும். தவணைமுறைத் திட்டப்படி இந்தத் தொழிற் கூடங்கள் தரப்படுகின்றன. தொழிலில் ஆர்வமும் திறமையும் இருந்து, போதிய வசதி இல்லாமல் திண்டாடுபவர்களுக்கு நல்ல வாய்ப்புத் தருகிறது இந்தச் சீரிய திட்டம். இதற்காகத் தமிழக அரசு எல்லா வகையிலும் உதவி

"எப்படி அண்ணா?"

"மூலப் பொருள்களை வழங்குதல், தொழிற் கூடங்களை அமைத்தல், இயந்திரங்களை வாங்கித் தருதல் போன்ற பல உதவிகளைச் செய்கிறது, அரசு".

"இயந்திரங்கள் கூடவா தருகிறார்கள்! பரவாயில்லையே!"

"ஆமாம். இதுவரை ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள இயந்திரங்களை இந்த நிறுவனம் தவணை முறையில் வழங்கி, வளரும் தொழில்களுக்கு வழிவகை செய்திருக்கிறது. மூலப் பொருள்களை வழங்குவதற்காகச் சென்னை, கோவை, மதுரை ஆகிய இடங்களில் கிடங்குகளும் உள்ளன."

"அப்படியானால் இந்தத் திட்டத்திற்குப் பெருமளவு வரவேற்பு இருக்குமே?"

"ஆமாம், மேகலை, பல தொழில்களில் முனைந்திருப்பவர்கள் இந்தத் தவணை முறைத் தொழிற் கூடங்களைப் பெற ஆர்வமுடன் முன்வருகிறார்கள். அவர்களுக்காக 'சிட்கோ' மிகச் சீரிய முறையில் மேலும் பல தொழிற் கூடங்களைக் கட்டும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது." என்று சொல்லிக் கொண்டே இளங்கோ, உலோகம் வெட்டும் கருவிகள் உருவாக்கும் தொழிற் கூடத்துள் நுழைந்து அங்கே இளைஞர்கள் பலர் சுறுசுறுப்பாகத் தம் பணிகளில் ஈடுபட்டிருப்பதைக் காண்கிறார்கள். அவர்கள் உருவாக்கிய கருவிகள் ஒரு



ருப்பதை மணிமேகலை பார்த்துக் கொண்டே வருகிறாள்.

“அண்ணா! இவைகளையெல்லாம் பார்க்கும்போது தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு ஒளிமயமான எதிர்காலமிருக்கிறது என்று சொல்லுங்கள்......” என்றாள் மேகலை.

“நிச்சயமாக. இன்னும் கேள். தொழிலில் நல்ல திறமையும் ஊக்கமும் உள்ளவர்களுக்கு நல்ல வாய்ப்பு அளிக்கும் சிட்கோவின் கொள்கை என்ன தெரியுமா? ‘உடைமை உடனே—தொகை பிறகே’ என்பதாகும். இயந்திரச் சாதனங்களில் ரூ. 7.5 இலட்சத்திற்கு மேற்படாமல் முதலீடு உள்ளவைகளே ‘சிறு தொழில்கள்’ எனப்படும் என்பதையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். ஓர் இயந்திரத்துக்கு ரூ. 500-க்குக் குறையாமலும் ஓர் இலட்சத்துக்கு மேற்படாமலும் மதிப்புள்ள உள்நாட்டு இயந்திரங்களை இத்திட்டத்தின் மூலம் பெறமுடியும்” என்று இளங்கோ சொன்னதும் மணிமேகலை, “மாவு அரைக்கும் இயந்திரத்துக்கும் உதவி கிடைக்குமா?” என்று அவசரமாகக் கேட்டாள்.


இளங்கோ சிரித்துக்கொண்டே சொன்னான்: “மாவு அரைக்கும் இயந்திரத்துக்கு மட்டுமல்ல, நெல் அரைக்கும் இயந்திரம், எண்ணெய் பிழியும் இயந்திரம், காப்பிக் கொட்டை அரைக்கும் இயந்திரம் ஆகியவற்றிற்கும் உதவி கிடைக்காது”

“உதவித் தொகையை எப்படிக் கட்ட வேண்டும் அண்ணா?”

“தவணை முறைத் திட்டத்தின்கீழ் விண்ணப்பம் செய்வோர் உதவி கோரும் தொகையின் மதிப்பு ரூ. 25,000-க்கு உட்பட்டிருந்தால், உதவி வழங்கப்படும் தொகையில் 5 சதவீதத்தையும், உதவி கோரும் தொகையின் மதிப்பு ரூ. 25,000க்கு மேற்பட்டிருந்தால் உதவி வழங்கும் தொகையில் 10 சதவீதத்தையும் தங்கள் பங்குப் பணமாகக் கட்ட வேண்டும்.

“அப்படியானால், மிகுதிப் பணத்தைக் கட்டவேண்டாமா?”

“அப்படிக் கேள் மேகலை! மிகுதிப் பணத்தை சிட்கோவே ஏற்றுக் கொள்ளும். இயந்திரங்கள் வந்து சேர்ந்த ஓராண்டிலிருந்து ஒவ்வோர் அரையாண்டிலும் தவணை முறையில் இந்தக் கடன் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். தவணைத் தொகை முழுமையும் சேர்ந்த பிறகு இயந்திரத்தினுடைய முழு உரிமையும் விண்ணப்பதாரருக்கு மாற்றப்படும். தனி நிறுவனமொன்று ஓர் இலட்சம் ரூபாய்வரை இதற்காகக் கடன் வாங்க வாய்ப்புண்டு.”



“சிட்கோவின் சிறந்த பணிகளை என்னால் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. தொழிற்கூடங்களைக் கட்டவும், இயந்திரங்களை வாங்கவும், நடைமுறைத் தேவைகளுக்காகக் கடன்களைப் பெறவும் இது உறுதுணையாக இருப்பதை அறிந்து மிகவும் மகிழ்கிறேன். அண்ணா!”

“அம்பத்தூரிலுள்ள சைக்கிள் தொழிற்சாலையைப் பற்றித்தான் நீ கேள்விப் பட்டிருப்பாயே! இந்தத் தொழிற்சாலைக்குத் தேவையான உபகரணங்களைத் தயாரிப்பதற்காக இதே இடத்தில் பத்து ஏக்கரில் 25 தொழிற்கூடங்களும் கட்டப்பட்டிருக்கின்றன.”

" நல்ல திட்டம் அண்ணே இது! இதன் மூலம் பலருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்குமல்லவா? "

" ஆமாம் மேகலை; இவை மட்டுமா? இன்னொரு திட்டமும் உள்ளது. இரசாயனம், மற்றும் பல தொழிலுக்காக 40 ஏக்கரில் ஒரு தொழிற் கூடமும் இங்கே கட்டப் போகிறார்கள்! "

" இம்மாதிரியான தொழிற் கூடங்கள் இந்தியாவில் வேறு எந்தெந்த மாநிலத்தில் அண்ணே இருக்கின்றன? "

" இந்தியாவில் வேறு எங்குமே இல்லை மேகலை! ஏன், ஆசியாவிலேயே தமிழ் நாட்டில் மட்டும்தான் தவணைமுறைத் தொழிற்கூடங்கள் உருவாக்கப் பட்டு வருகின்றன. இந்த வகையில் அம்பத்தூர் அனைத் திந்தியாவுக்கும் வழிகாட்டியாக விளங்குகிறது! ".

" இத்தனை சிறப்புக்கும், புகழுக்கும் உரிய இந்தத் தொழிற்பேட்டை கிண்டியில் உள்ளதைவிடப் பெரியதா? "

" ஆமாம்! ".

" தமிழ்நாட்டில் மற்ற மாவட்டங்களிலும் தவணை முறைத் தொழிற்கூடங்கள் அமைக்கப்படுமா? "

" இப்போது அமைக்கப்பட்டு வருகின்றனவே! ஊட்டியில் 12 ஏக்கரிலும், மதுரையில் 10 ஏக்கரிலும், திருவாரூரில் 10 ஏக்கரிலும், ராணிப்பேட்டையில் 20 ஏக்கரிலும், கோவையில் 30 ஏக்கரிலும் தொழிற்கூடங்கள் அமைக்கும் வேலை தீவிரமாக நடைபெற்று வருகின்றது. இவற்றில் ஊட்டி, கோவையில் அமைக்கப்பட்டுவரும் தொழிற் கூடங்கள் மார்ச்சுத் திங்களில் தொடங்கிவிடும். இப்படி ஒவ்வொரு மாவட்டத்துக்கும் தவணைமுறைத் தொழிற்கூடங்களை நிறுவும் எண்ணமும் அரசுக்கு இருக்கிறது " என்று சொல்லிக்கொண்டே இளங்கோ ஓரிடத்தில் வந்து அமர்ந்தான். அவன் அருகே மணிமேகலை வந்து உட்கார்ந்து கொண்டாள். தாம் கொண்டுவந்திருந்த பையிலிருந்து பிளாஸ்க்கையும் பிஸ்கட்டையும் எடுத்தான் இளங்கோ. சிற்றுண்டி முடிந்தது. மீண்டும் அவர்கள் தங்கள் பேச்சைத் தொடர்ந்தனர் :

" ஆமாம், இங்கு ஓட்டல் எதுவும் இல்லையா, அண்ணே? " மணிமேகலை கேட்டாள்.

" இப்போதைக்கு இங்கு இல்லை. ஆனால் கூடிய சீக்கிரத்தில் இங்கு ஓட்டல் என்ன, அஞ்சல் நிலையம், வங்கி, சொற்பொழிவு மண்டபம் போன்ற எல்லா வசதிகளும் ஏற்படுத்தப்படவிருக்கின்றன " என்றான் இளங்கோ.

" இங்கே பணிபுரிவர்கள் போக்குவரத்து வசதிக்கு என்ன செய்வார்கள்? "

" எல்லாம் போகப் போகச் சரியாகிவிடும். இந்த இடத்தில் அதாவது கொரட்டூருக்கும் அம்பத்தூருக்கும் இடையில் ஒரு இரயில் நிலையம்கூட அமைக்கப் படலாம். அப்போது எல்லாப் பகுதியிலிருந்தும் தொழிலாளர்கள் வர நல்ல வசதியாகிவிடும் ".

" ஆமாம், அண்ணே! இன்னும் என்னென்ன வசதிகளை 'சிட்கோ' செய்கிறது? "

" தொழில் நடத்துகிறவர்களுக்குச் சொந்தமாக நிலம் இருந்தால், அந்த நிலத்தில் தொழிற்கூடம் கட்டிக் கொடுக்கவும் சிட்கோ முன்வந்துள்ளது. இதற்காக ரூ. 24 இலட்சம் வழங்கிட இது ஒப்புதல் அளித்துள்ளது. சிட்கோ தொடங்கிய 23 மாதங்களில் ரூ. 650 இலட்சம் மதிப்புள்ள இரும்பு உருக்குகளையும், ரூ. 2.2 இலட்சம் மதிப்புள்ள காஸ்டிக் சோடா, துத்தநாகம் போன்றவைகளையும் வழங்கியுள்ளது. "

" எல்லாம் சரி அண்ணே! இவ்வளவு விஷயங்களையும் சொன்ன நீங்கள் ஏன் சும்மா இருக்கின்றீர்கள்? உங்களுக்குத் தான் அச்சகச் சம்பந்தமான வேலைகளில் நல்ல அனுபவம் இருக்கிறதே! நீங்களும் ஒரு தொழிற்கூடத்தை வாங்கக் கூடாதா? " என்றாள் மணிமேகலை சிரித்துக் கொண்டே.

" நிச்சயம் நான் வாங்கத் தான் போகிறேன். அதற்காக விண்ணப்பம் கூடச் செய்திருக்கிறேன். விரைவில் நான் இங்கே ஒரு தொழிற்கூடத்தை வாங்காவிட்டால் பாரேன்! " என்றான் உறுதியாக இளங்கோ. இருவரும், தொழிற்பேட்டையைச் சுற்றிப்பார்க்க அனுமதி வழங்கிய அதிகாரிக்கு நன்றி தெரிவித்துவிட்டு மகிழ்வுடன் வெளியே வந்தனர்.

—பி.வி.ஜி.

## மேம்பாலங்களும் சுரங்கப் பாதைகளும்



*தமிழகத்தில் 1967-ஆம் ஆண்டுவரையில் திட்டங்கள் வாயிலாக மேற்கொள்ளப்பட்டிருந்த பால வேலைகள் 50 ஆகும். அதற்காக ஒதுக்கப்பட்ட தொகை 372 இலட்சம்.


1967-க்குப் பிறகு 72 வரையுள்ள 5 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட பால வேலைகள், ஐந்து ஆண்டு காலத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளவை 72. அவற்றிற்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூபாய் 694 இலட்சம்.

*சுரங்கப் பாதைகளும் மேம்பாலங்களுமாக 20 ஆண்டு காலத்தில் அமைக்கப்பட்டவை 11.

கடந்த 5 ஆண்டுகளில் அமைக்கப்பட்டுள்ள மேம்பாலங்களும் சுரங்கப் பாதைகளும் 12.



1972-லிருந்து 74 வரையில் உத்தேசிக்கப்பட்டுள்ள பாலங்கள் மட்டும் 10. மேம்பாலங்களும் சுரங்கப் பாதைகளும் மொத்தம் 28.





# கதர் கைத்தொழில் அங்காடி


குறளகம்
சென்னை-1




கைவண்ணப் பொருள்களின் களஞ்சியம்

வெளிநாட்டார் போற்றும்
பயன் பொருள்
கலைக்கூடம்




20461
20462 20463
20464 20465

# முதல்வரின் கண் சிகிச்சை முகாம் நிதி

## நன்கொடை வழங்கியோர் பட்டியல்

| | ரூ. | காசு. |
|---|---|---|
| முன்தொடர்ச்சி. | 31,54,457 | 85 |
| தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர். | 400 | 00 |
| பதிவுத் துறை தலைமை அலுவலர், சென்னை. | 30 | 00 |
| மாவட்டக் கூட்டுறவுக் கணக்குத் தணிக்கையாளர், சேலம்-1. | 2,350 | 00 |
| திரு கிருஸ்துதாஸ், துணைப் பதிவாளர், சேலம். | 125 | 00 |
| திரு வி. வைத்தியநாதன், உதவிப் பதிவாளர் எஸ்.ஆர்.ஓ. உடங்குடி. | 150 | 00 |
| திரு பி. மாணிக்கவேலு, எம்.ஏ., முதல்வர், அறிஞர் அண்ணா அரசினர் கல்லூரி, ஆத்தூர், சேலம் மாவட்டம். | 524 | 00 |
| திரு எல். எம். மௌசீஸ், ஐ.ஏ.எஸ்., பால்பெருக்குத் துறை இயக்குநர் (பொறுப்பு) சென்னை. | 50 | 00 |
| திரு டி. பாலசுந்தரம், பி.ஏ., மாவட்டக் கூட்டுறவுக் கணக்குத் தணிக்கை அலுவலர்., சேலம். | 1,001 | 00 |
| திரு எம். சி. நாராயணசாமி, பி.ஏ., மாவட்டப் பதிவாளர், பாளையங்கோட்டை. | 12 | 00 |
| வடஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் (330 டிராப்டுகள்). | 3,52,215 | 00 |
| தென்ஆர்க்காடுமாவட்ட ஆட்சித் தலைவர், கடலூர். | 81,711 | 50 |
| இந்து அறநிலையப் பாதுகாப்பு ஆணையர், சென்னை-34. | 1,001 | 00 |
| வட்டார முன்னேற்ற அலுவலர் | 1,480 | 00 |
| திரு டி. கோபாலகிருஷ்ணன், லலிதா மருத்துவ நிலையம், மணச்சநல்லூர், திருச்சி. | 100 | 00 |
| கன்னியாகுமரிமாவட்ட ஆட்சித் தலைவர், நாகர்கோவில். | 3,200 | 00 |
| பதிவுத் துறைத் தலைவர் | 105 | 00 |
| செங்கற்பட்டு நகரக் கூட்டுறவு வங்கி. | 50 | 00 |
| மாவட்டக் கூட்டுறவுத் தணிக்கை அலுவலர், சேலம். | 800 | 00 |
| மாவட்டக் கூட்டுறவுக் கணக்குத் தணிக்கை அலுவலர், சேலம். | 500 | 00 |
| மாவட்டக் கூட்டுறவுக் கணக்குத் தணிக்கை அலுவலர், சேலம். | 250 | 00 |
| அசோக் லேலண்ட் தொழிலாளர் சங்கம், எழும்பூர். | 2,000 | 00 |
| திரு யூசுப், திருச்சி (வேளாண்மை அமைச்சர் மூலமாக). | 1,001 | 00 |
| பர்மா தமிழர் மறுமலர்ச்சி சங்கம், 9, பர்மா பசார், சென்னை-1. | 501 | 00 |
| விஜயலட்சுமிபுரம், குடியிருப்போர் சங்கம், அம்பத்தூர். | 11 | 00 |
| டி.ஐ. சைக்கிள் தொழிலாளர் பகுத்தறிவு மன்றம், அம்பத்தூர். | 50 | 00 |
| திரு கே.டி.எஸ். மணி நகராட்சித் தலைவர், காஞ்சிபுரம். | 25 | 00 |
| பேரறிஞர் அண்ணா நற்பணி மன்றம், டி. ஐ. மில்லர் தொழிலாளர் சார்பில். | 10 | 00 |
| திரு ராமு, காமராஜ் சேவா சங்கம், எழும்பூர். | 10 | 00 |
| திரு நாகலிங்கம், திரு ஏ. எல். சீனிவாசன் மூலமாக. | 10 | 00 |
| திரு கே. கணேச முதலியார், பட்டாணிப்பட்டி, மைசூர். | 25 | 00 |
| துணைப்பதிவாளர், சத்தியமங்கலம். | 25 | 00 |
| மாவட்டக் கூட்டுறவுத் தணிக்கை அலுவலர், சேலம். | 2,750 | 00 |
| நங்கநல்லூர் கூட்டுறவு வீடு கட்டும் சங்கம். | 25 | 00 |
| தஞ்சாவூர் கூட்டுறவு மத்திய வங்கி. | 5,000 | 00 |
| உதவிப் பதிவாளர், மேட்டூர் | 100 | 00 |
| ஷை | 200 | 00 |
| கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை-6. | 153 | 75 |
| துணைப் பதிவாளர், சங்கரன் கோயில். | 100 | 00 |
| ஷை | 150 | 00 |
| தஞ்சை மாவட்ட ஆட்சியாளர். | 2,200 | 00 |
| சேலம் மாவட்டக் கூட்டுறவுத் தணிக்கை அலுவலர். | 600 | 00 |
| ஆத்தூர் வட்டம் கூட்டுறவு மார்க்கெட்டிங் சங்கம். | 200 | 00 |
| துணைப்பதிவாளர், சேலம் | 1,100 | 00 |
| நிருவாக அலுவலர், தாந்தோணி நகரியம். | 301 | 00 |
| சேலம் மாவட்டக் கூட்டுறவுத் தணிக்கை அலுவலர். | 1,401 | 00 |
| நல்வாழ்வுத் துறை அமைச்சர் வாயிலாக. | 15,000 | 00 |
| ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றிய ஆணையர் | 835 | 00 |

| | | |
|---|---|---|
| பால் உற்பத்தி, பண்ணை வளர்ச்சி ஆணையர், சென்னை-51. | [illegible] | 00 |
| சேலம் மாவட்டக் கூட்டுறவுத் தணிக்கை அலுவலர். | 100 | 00 |
| ஷை | 100 | 00 |
| மேட்டூர் உதவிப்பதிவாளர், | 200 | 00 |
| அறந்தாங்கி ஊராட்சி ஒன்றிய ஆணையர். | 377 | 00 |
| திரு டி. பாலசுந்தரம், மாவட்டக் கூட்டுறவுத் தணிக்கை அலுவலர், சேலம். | 50 | 00 |
| ஷை | 450 | 00 |
| திரு ஓ. எம். எஸ். காசிம் முகம்மது மரக்காயர், மரக்காயர்பட்டினம். | 101 | 00 |
| திரு பெரி. விசுவநாதன், அரசினர் உயர்நிலைப்பள்ளி, இராமநாதபுரம். | 10 | 00 |
| தாலுகா அலுவலக ஊழியர்கள், இராமநாதபுரம். | 51 | 00 |
| திரு வி. காஞ்சி நகரத் தி.மு.க. இராமநாதபுரம். | 11 | 00 |
| அரசினர் மருத்துவமனை, செவிலியர், இராமநாதபுரம். | 51 | 00 |
| திரு எம். ராஜகோபாலன், ராஜகம்பீரம். | 5 | 00 |
| திருவாத ஊரைச் சேர்ந்த ஒருவர். | 10 | 00 |
| திரு எல். கிருஷ்ணன், தலைவர், பேங்க் ஆப் மதுரை லிமிடெட். | 2,500 | 00 |
| தமிழ்நாடு அரசினர் கல்லூரி ஆசிரியர்கள் சங்கம். | 1,000 | 00 |
| சேலம் மாவட்டக் கூட்டுறவுத் தணிக்கை அலுவலர். | 1,500 | 00 |
| செங்கற்பட்டு மாவட்ட ஆட்சியாளர். | 225 | 00 |
| உதவிப்பதிவாளர், மேட்டூர் | 225 | 00 |
| சேலம் மாவட்டக் கூட்டுறவுத் தணிக்கை அலுவலர். | 300 | 00 |
| ஷை | 200 | 00 |
| ஷை | 2,525 | 00 |
| உதவிப்பதிவாளர், மேட்டூர் | 1,350 | 00 |
| சேலம் மாவட்டக் கூட்டுறவுத் தணிக்கை அலுவலர். | 800 | 00 |
| திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பு ஆலை லிமிடெட், நாசரத். | 1,500 | 00 |
| உளுந்தூர்ப்பேட்டை கூட்டுறவு வீடு கட்டும் சங்கம், லிமிடெட். | 100 | 00 |
| கன்னியாகுமரி மாவட்டக் கூட்டுறவு நூற்பாலைகள் லிமிடெட், ஆருள்வாய்மொழி. | 1,500 | 00 |
| துணைப் பதிவாளர், பாளையங்கோட்டை. | 30 | 00 |
| மாவட்ட ஆட்சித் தலைவர், தஞ்சாவூர். | 4,100 | 00 |
| மாவட்ட ஆட்சித் தலைவர், இராமநாதபுரம். | 45,152 | 50 |
| மாவட்டக் கூட்டுறவுத் தணிக்கை அலுவலர், சேலம். | 1,575 | 00 |
| திரு ஜே. கே. சோமசுந்தரம், ஐ.ஏ.எஸ்., பத்திரப் பதிவுத் தலைமை அலுவலர், சென்னை. | 160 | 00 |
| திரு வி. இராமலிங்கம், உதவிப் பதிவாளர், மேட்டூர். | 275 | 00 |

| | | |
|---|---|---|
| சேலம் மாவட்டக் கூட்டுறவுக் கணக்குத் தணிக்கை அலுவர். | 350 | 00 |
| ஷை | 150 | 00 |
| மேட்டூர் அணை மீன்பிடிப்போர் கூட்டுறவு விற்பனைச் சங்கம் லிமிடெட், மேட்டூர். | 250 | 00 |
| மேட்டூர் உதவிப் பதிவாளர், சேலம். | 125 | 00 |
| நிர்வாக இயக்குநர், ஆம்பூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள், லிமிடெட், வடபுதுப்பேட்டை. | 5,000 | 00 |
| நிருவாக இயக்குநர், தென்னிந்தியக் கூட்டுறவு நூற்பு ஆலைகள் லிமிடெட், பேட்டை திருநெல்வேலி. | 2,500 | 00 |
| மாவட்டக் கூட்டுறவுத் தணிக்கை அலுவலர், சேலம்-1. | 125 | 00 |
| தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர், கடலூர்-1. | 3,500 | 00 |
| உதவிப் பதிவாளர், மேட்டூர், சேலம். | 1,187 | 00 |
| கூட்டுறவு உதவிப் பதிவாளர், செங்கற்பட்டு. | 50 | 00 |
| தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர், தஞ்சாவூர். | 50 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், கீழ்வேளூர், தஞ்சாவூர். | 65 | 00 |
| தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர், கடலூர். | 19,760 | 00 |
| மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர், மதுரை. | 1,00,124 | 00 |
| சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர். | 350 | 00 |
| மாவட்டக் கூட்டுறவு தணிக்கை அலுவலர், சேலம். | 1,375 | 00 |
| மாவட்ட ஆட்சித் தலைவர், நாகர்கோவில். | 6,592 | 50 |
| மாவட்டக் கூட்டுறவு தணிக்கை அலுவலர், சேலம்-1. | 50 | 00 |
| செயலாளர், நீலகிரி கூட்டுறவு அச்சகம் லிமிடெட், உதகமண்டலம். | 50 | 00 |
| சேலம் மாவட்டக் கூட்டுறவுத் தணிக்கை அலுவலர். | 825 | 00 |
| சேலம் மாவட்டக் கூட்டுறவுத் தணிக்கை அலுவலர். | 450 | 00 |
| மாயூரம், தர்மபுரம் ஞானாம்பிகை அரசினர் மகளிர் கல்லூரி, ஆசிரியைகளும், மாணவியர்களுமாக. | 564 | 00 |
| திரு பி. சம்பந்தம், ஊராட்சித் தலைவர், தலைச்சங்காடு மாயூரம். | 25 | 00 |
| குத்தாலம் பொதுக்கூட்டத்தில் கொடுக்கப்பட்டது. | 10 | 00 |
| மாணவர்கள், ஆசிரியர்கள், கூட்டுறவுக் கடைகள் ஜி.எச். எஸ். குத்தாலம், தஞ்சை. | 10 | 00 |
| மாவட்டக் கூட்டுறவுத் தணிக்கை அலுவலர், சேலம். | 600 | 00 |
| வருவாய்த்துறை வாரிய அலுவலர், மனமகிழ் மன்றம், சென்னை-5. | 100 | 00 |
| | 38,49,558 | 84 |




## புகையும் பகை நெருப்பு

மாடியிலிருந்து குருபாதத்தின் உரத்த குரல் கேட்டுக் கொண்டிருந்தது. வெகு நேரமாகவே அவரோடு பேசிக் கொண்டிருந்து விட்டு, சோர்ந்த முகத்துடன் ஒவ்வொரு படியாக இறங்கி வந்தார் குருவையா.

குருவையாவை எதிர்பார்த்தே—முன் பக்க மாடிப்படிகளின் ஓரம் நின்று கொண்டிருந்த ஐயனு, ''அம்மா உங்களைப் பாக்கணும்னுங்க'' என்று சொல்லி அடுத்த அழைப்பையும் விடுத்தான்.

குருவையா தயங்கினார். அவருக்கு அலுப்பாகவும் இருந்தது.

குருபாதத்தோடு ஒத்த வயது இவருக்கு. என்றைக்குமே இந்தக் குடும்பத்தில் இவரும் ஒரு அங்கம்போல. ஆல் போல் தழைத்து வந்த குடும்பம் இப்படிச் சிதறுண்டு போவதை நினைத்து இவருக்குப் பெருங் கவலை. பெரியவரை, அந்த உள் கொந்தளிப்புக் குறையாமல் வைத்துக் கொண்டிருக்கிறார்களே என்ன செய்வது? காது கொடுத்துப் பேச விட்டால் தானே இருக்கும் நிலையை எடுத்துச் சொல்லுவதற்கு! விழுந்திருக்கும் முடிச்சை, வேறு எப்படித்தான் அவிழ்ப்பது?

''யாருகிட்டே என்ன பேசுறதுன்னு, எனக்குப் புரியலே ஐயனு?'' என்று மெதுவாகச் சொன்ன குருவையா, உள்பக்கமாகத் திரும்பிப் பார்த்து, ''அம்மா எங்க இருக்காங்க?'' என்று கேட்டார்.

ஐயனு பதில் சொல்லுவதற்குள், தலைவாசல் கதவோரமாக நின்றிருந்த சிவகாமியம்மாள், எட்டிப் பார்த்து, ''வாங்க அண்ணைச்சி'' என்று குரல் கொடுத்தாள்.

குருவையாவும், ஐயனுவும் பக்கமாகச் சென்றார்கள்.

சற்று நேர மௌனத்துக்குப் பிறகு, தலைமறைவாகவே நின்று அடக்கமாகவே சொன்னாள் சிவகாமியம்மாள்.

''மகனைப் போய் பார்த்திட்டு வந்ததிலேயிருந்து எங்க கூடப் பேச்சும் நின்னு போச்சு. பெத்த மனம் கேக்குதா? பதறிப் போயிட்டேன். இவருக்கும் அவனுக்கும் மத்தியிலே நான் என்ன செய்யட்டும்? ரெத்தக் கொதிப்புக்கு வாங்கியாந்த மருந்து மாத்திரையெல்லாம் அப்படியே இருக்கு. அதைத் தொட்டுத் துதிக்கலே. கால்லே விழுந்தும் சொல்லிப் பார்த்தாச்சு, வாயைத் திறக்கலையே''. என்று சொல்லி வந்த போது குரல் தழுதழுத்தது.

''மகளை நினைச்ச வெறுப்பு இன்னமும் அடங்கலையே இவருக்கு! என் மகன் காலிப் பயதான்னு சொல்லிக்கிட்டாரு. அந்த அளவுக்கு நெஞ்சிலே நிறைச்சு வச்சிருக்காங்க. இப்ப என் பேச்சும் எடுபடலையே!'' என்று கவலையோடு சொன்னார் குருவையா.

''சின்னவர்தான் அடிக்கடி வந்திட்டுப் போறாரே. எல்லாத்தையும் ஒருமிக்கச் சுருட்டுறதுக்குத் திட்டம் போட்டுத்தானே இறங்கி இருக்காங்க'' என்று இடையிலே கொதிப்போடு சொன்னான் ஐயனு.

''நீ சும்மா இருடா''—, என்ற சிவகாமியம்மாள், ''இவரு என்னதான் சொல்றாரு? பிறந்த ஒரு மகன் தலைக்கும் கல் வந்து நிக்கறப்ப, இவரும் இப்படி இருந்தா, இது எதிலே போய் முடியப் போகுது? இந்த வீடு இன்னமும் இருளடைஞ்சு போகணுமா?'' என்று கேட்டாள்.

வியர்த்துப் போன முகத்தைத் துடைத்துக் கொண்டார் குருவையா.

''நாலு நாளைக்கு முன்னாலே மதுரையிலேதான் பாண்டியனைப் பார்க்க வேண்டியதாச்சு. அவன் எதைப் பத்தியும் கவலைப்படலே! இப்பவும் சிரிச்சுக்கிட்டுதான் இருக்கான். பணம் தேவையின்னா கேளுன்னு கூடச் சொன்னேன்.''

''எவ்வளவு கேட்டாலும்—கொடுங்க'' என்றாள் சிவகாமியம்மாள் ஆவலுடன்.

''பணத்தாலே மட்டும் வெற்றி கிடைக்கும்ன்னு நான் நம்பலே. நெஞ்சிலே உண்மை இருக்கு. நடத்தையிலே நேர்மை இருக்கு. இது எப்பவும் எனக்குத் துணை இருக்கும்ன்னு சொல்றான், அவன்கிட்டே வேறே எதைப் பேச முடியுது?'' என்றார் குருவையா.

''இருக்கிறதையெல்லாம் சுருட்டிக்கிட்டுப் போகணும்ன்னு வளைச்சு வாராங்களே. இதைப் பத்தியெல்லாம் அவன் நினைக்கலையா?'' என்று கேட்டாள் சிவகாமியம்மாள்.

''சுருட்டினதை வேறே எங்கே கொண்டு போகப்போறாங்க? ஊருக்குள்ளேதானே இருக்கும்ன்னு சொல்றானம்மா உன் மகன்'', என்ற குருவையா, சற்று யோசித்து, ''எப்படியும் பாண்டியனை இங்கே இழுத்துக்கிட்டு வாரேன். தகப்பனும் மகனும் நேருக்கு நேரா பேசிக்கட்டும். அப்பவாவது நல்ல முடிவு ஏற்படுமான்னு பாக்கலாம்'' என்றார் குருவையா.

சிவகாமியம்மாள் ஏதோ சொல்ல வாயெடுத்த போது, வாசலிலே வேலாயுதத்தின் தலை

தெரிந்தது. உள்ளுக் குள்ளே நகர்ந்து கொண்டாள்.

படியேறி வந்த வேலாயுதம், நின்று, பொதுவாகச் சுட்டெரிப்பது போலவும் ஒரு பார்வையைப் பார்த்து விட்டு, மெத்தைப் படிகளை நோக்கிச் சென்ருர்.

* * *

இதுவரையிலும் கீழே பின் கட்டில் உள்ள மைய அறையில் தான் படுப்பார். சில நாட்களாகவே, பெரிய கட்டில் மாடியேறி இங்கே வந்து விட்டது. இப்போது, மனைவி-மக்களையெல்லாம் விட்டு விலகிய தனிமை தேவையாகிவிட்டது. காலையில் ஒரு பொழுதைத் தவிரக் கீழே இறங்கிப் போவதே இல்லையாமே!

மெதுவாகக் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே எட்டிப்பார்த்தார் வேலாயுதம்.

கட்டிலிலே மேல் உத்திரத்தைப் பார்த்தவாறு சாய்ந்திருந்தார் குருபாதம். வலது கை நெற்றியின் மீது கிடந்தது.

வேலாயுதம் உள்ளே நுழைந்தார்.

குருபாதம் படுத்தவாறே தலையைத் திருப்பிப் பார்த்து, ''வா உட்காரு'' என்ருர்.

வேலாயுதம், பக்கத்திலிருந்த நாற்காலியைக் கட்டிலோரமாக இழுத்துப்போட்டுஉட்கார்ந்தார்.

''ரெண்டு நாளா நீ வரவே இல்லையே!''

''வராம என்ன? நடக்கிறதை நினைக்கறப்ப எனக்கே பெரிய வேதனையா இருக்கு. இந்த வழக்கு ஒரு பக்கம் நிக்கிது. இப்படியொரு சிக்கல் இருக்கும் போதே அவனுடை திமிர் அடங்கலையே! நானும் முத்தையா மாமனுமா சேர்ந்துதான் பொன்னையாவை அடிச்சதா சொல்ருனும். அதுக்குச் சாட்சிகள் தேடிக்கிட்டிருக்கான்'' என்ருர் வேலாயுதம் தணிந்த குரலில்.

''ஆமா—எல்லாரையும் ஆளனும்னுதானே அவன் பிறவி எடுத்திருக்கான்.'' என்று ஆத்திரத்தோடு சொல்லிப் பல்லைக் கடித்தார் குருபாதம்.

வேலாயுதம் மேலும் பக்குவமாகச் சொன்னர்.

''அம்மன் கோவில் கிணத்துக்குப் பக்கத்திலே, கோவில் கோபுரத்துக்கும் உயரமா குடி தண்ணித் தொட்டியைக் கட்டுறதுக்கும் பிளான் தயாராகிக் கிட்டிருக்கு. இதுக்கு யாரோட சம்மதமும் தேவை இல்லையாம். இதே தண்ணியை வெளிக் கிராமங்களுக்கும் கொண்டு போகப் போருனும்'' என்ருர்.

குருபாதம் திரும்பினர். அவர் முகம் கன்றிச் சிவந்திருந்தது.

''நான் ஏற்கெனவே சொல்லி இருக்கேன். முதல்லே கிணத்தை இழுத்து மூடணும். அப்புறம் வர்றதைப் பாத்துக்கலாம். இதைச் செய். இல்லே—நானே செய்துக்கிறேன்'' என்று கோபமாகவே சொன்னர்,



வேலாயுதம் மிகுந்த பய பக்தியோடு சற்று நேரம் பேசாதிருந்தார்.

''மகனைப் பிறந்திட்டதுனலே, அவனலே ஊரைவிட்டே ஓட முடியுமா?'' என்று மேலும் கேட்டார் குருபாதம்.

''நாம வளைஞ்சு கொடுக்கணும்னு நினைச்சாலும் அவன் வணங்கி வரத் தயாராயில்லையே! களத்துமேட்டு வேலையும் மறுபடியும் தொடங்கியிருக்கு. வர்ற வெள்ளிக்கிழமை அந்தப் பொன்னையாவோட குடிசையைப் பிரிக்கப் போருனும். அதுக்கும் நாள் குறிச்சிருக்கான். நம்ம

ஊருக்குள்ளே நடக்கிற காரியத்துக்கு, வெளியூரிலே இருந்து பாதுகாப்புக்கு வாராங்க'' என்று வேலாயுதம் சொல்லி வந்தபோது, ''உள்ளே போயிட்டு வந்தாத்தான் அவன் திமிர் ஒடுங்கப் போகுது. அதுக்கானதைப் பாரு,'' என்றார் குருபாதம் சற்று உரத்த குரலில்.

வேலாயுதம் இன்னும் நெருங்கி வந்தார்.

''அவன் எல்லாத்தையும் கடந்து, எவ்வளவோ தூரம் போயிருக்கான்ங்கிறது இப்பத்தான் புரியுது.



உங்க கிட்ட அதைச் சொல்றதுக்கே தயக்கமா இருக்கு'' என்று சொல்லித் தலையைக் குனிந்து கொண்டார்.

குருபாதம் திரும்பினார். நெற்றி சுருங்கியது.

வேலாயுதம் இரகசியமான குரலில் சொன்னார்.

''ஏற்கெனவே, பொன்னையாவோட பெண்சாதி சிவந்திக்கும்—இவனுக்கும் தொடர்பு இருந்திருக்கு. இது போலீஸ் விசாரணையிலே கூட வெளியாகலே. இவனைப் பாக்குறதுக்குப் படுக்கையிலே கிடக்கிற புருசனைப் போட்டுட்டு, இங்கே வந்திருக்கா சிவந்தி. கொஞ்ச நேரத்துக்கு முன்னாலே, லிங்கம் வீட்டுத் தோப்பிலே இவனும் அவளும் பேசி இருக்காங்க.''

நீண்ட பெருமூச்சு குருபாதத்தின் உடலை உலுக்கியது.

ஒன்றும் சொல்லாமல், நெற்றியை விரல்களால் அழுத்தியவாறு அப்படியே சாய்ந்து கொண்டார். சற்று நேரம் கழித்து ''இப்ப உடம்பு எப்படி இருக்கு?'' என்று ஆர்வத்தோடு விசாரித்தார் வேலாயுதம்.

குருபாதம் தலைநிமிர்ந்து தம்பியைப் பார்த்தார். கண்களில் நீர் கோத்திருந்தது. ''இந்த மண்ணிலே இருக்கிற வரைக்கும் எனக்கு நிம்மதி இருக்காது'' என்றார் கலங்கிய குரலில்.

'' அவன், தானாகவே இழுத்து வச்சுக்கிட்ட தீவினை; நாம கவலைப்பட்டு என்ன செய்ய?''

''வேறே எங்கே யாவது போய்க் கொஞ்சம் நாள் தங்கியிருக்கணும். இந்த ஊருக்குள்ளே இருக்கிறது எனக்கு நெருப்பா இருக்கு'' என்றார் குருபாதம் மேலும்.

''போகலாம். உங்களைப் பொறுத்த வரையிலே அது தான் எனக்கும் நல்லதாப் படுது. மத்ததை நான் பாத்துக்கிறேன். இன்னொன்று, நான் முன்னாலேயே உங்ககிட்ட சொல்லி இருக்கேன். இந்த ஐயனுப் பயலைப் பத்தி இன்னமும் நீங்க மெத்தனமா இருக்கீங்க. நடந்ததுக் கெல்லாம் உள் கையா இருந்து, இப்பவும் இங்கேயும் அங்கேயுமா நிக்கிறது இவன்தான். அவனுக்கும் ஒரு வழி பண்ணி ஒதுக்கி விடுங்க'' என்பதையும் சொல்லி விட்டு வேலாயுதம் எழுந்தார்.

குருபாதம் ஒன்றும் சொல்லவில்லை. அப்படியே சாய்ந்திருந்தார்.

''உடம்பைக் கவனமாகப் பார்த்துக்குங்க'' என்று கேட்டுக் கொண்டு, வேலாயுதம் போய் விட்டார்.

தம்பி சொன்னதை யெல்லாம் மீண்டும் நினைத்துப் பார்க்கும் போது, உடம்பிலுள்ள இரத்தமெல்லாம் நெஞ்சிலே வந்து உறைந்து விட்டதைப்போலிருந்தது. இப்போது நினைத்தாலும் எழுந்து உட்கார முடியாது. ஒரேயடியாகப் போய்ச் சேர்ந்து விடவும் முடியவில்லையே!

விரைவிலேயே உற்றம் சுற்றம் என்பதெல்லாம் இல்லாத இடத்துக்குப் போய்ச் சேர்ந்து விட வேண்டும். யாருமில்லாத இடத்தில்தான் இந்த நெஞ்சுக்கு நிம்மதி கிடைக்கும்.

> காலத்தின் மாறுதல்களுக்கு ஏற்றபடி ஒரு சமுதாயம் வளர்ச்சியடைந்து மாறாமலிருக்குமானால், அது வரவரத் தளர்ச்சியடைந்து வாழ்க்கையிலே பிறப்பே இல்லாமல் நசித்துப் போகும்.
>
> * * *
>
> மக்கள் பயிற்சி பெறுவதற்கும் குறைகளைக் குறைத்துக் கொள்வதற்கும் ஒரே யொரு வழிதான் உண்டு. பொறுப்பை ஏற்றுக் கொண்டு, செய்யும் பிழைகள் மூலம் அனுபவம் பெற்றுக் கொள்ளும்படி செய்வதுதான் இந்த ஒரே வழி.
>
> —நேரு.

பின்பக்கத்துக் கதவைத் தள்ளிக் கொண்டு ஐயனு உள்ளே நுழைந்தான்.

அவனாகத்தான் இருக்கும். அவனைத் தவிர, இப்போது இங்கே வேறு யார் வரப் போகிறார்கள்?

குருபாதம் திரும்பவில்லை.

ஐயனு, இடது பக்கமாக, கட்டிலோரமாக வந்து நின்றான்.

''ஐயா'' என்றான்.

''என்னடா?'' என்றார் கடுகடுப்போடு.

''மருந்தைத் தொடவே இல்லையே. டாக்டர் சொல்லியிருக்காரு'' என்று ஆரம்பித்தான் ஐயனு.

''பாக்கி இருக்கிற உயிரும் உன்னாலேதான் போகப் போகுது. நீயும் போடா.... அவனோடவே சேர்ந்துக்கோ! அவளும் இங்கே நின்னு கண் கலங்க வேண்டாம். மகன் கிட்டயே போய் இருக்கச் சொல்லு. என்னைத் தனியா விடுங்க'' என்றார் குருபாதம். கண்களை மூடிக் கொண்டார். அவருக்கு மயக்கமாக வந்தது.

''நீங்க நிம்மதியா இருங்க; இப்ப அதுதான் வேணும்.'' என்றான் ஐயனு அவர் முகத்துக்கு நேரடியாகக் குனிந்து.

குருபாதம் கண்களைத் திறந்த போது, ஐயனுவின் முகம் பக்கத்தில் இருந்தது.

அவனையும், இவனையும் சமமாகவே வளர்த்து விட்டாள் சிவகாமி.

''ஐயனு'' என்றார் மெதுவான குரலில்.

''ஐயா''

''நீ இந்த வீட்டுக்கு எப்படி வந்தேங்கிறதெல்லாம் உனக்கு நினைவு இருக்காடா?

''இல்லீங்க''

''இருக்காது. எனக்கே மறந்து போச்சு. உன்னோட வளர்ந்தவன், பாகத்தைப் பிரிச்சுக்கிட்டு, சொந்த பந்தம் எதுவுமே இல்லையின்னு படியிறங்கிப் போயிட்டான். இல்லையா?'' என்று கேட்டார் குருபாதம்.

ஐயனுவுக்கு, உள்ளுக்குள் நிறைந்திருந்த பொருமல் பொத்துக் கொண்டு வந்தது.

''தம்பி தானாப் போகலிங்க; நாமதான் போகச் சொன்னோம்'' என்றான் விம்மலுடன்.

'' ஆமடா...., அப்படித் தான், உனக்கும் கொடுக்கிறதைக் கொடுத்துப் போடுறேன். நீயும் போயிடு.'' என்றார் குருபாதம் கோபத்தோடு.

''ஐயா'' என்ற ஐயனு, ஆவேசத்தோடு முன்னால்

கவிழ்ந்து, அவரது கால்களைப் பிடித்துக் கொண்டான்.

''எனக்கு வேறே எதிலேயும் பங்கு வேண்டாமுங்க. உங்க உயிரிலே பங்கு இருக்கு. இந்தக் காலடியில் தான் வளந்தேன். இந்த உயிரு இருக்கிற மட்டும் இங்கதான் கிடப்பேன்'' என்று சொல்லி அவர் கால்களைக் கட்டிக் கொண்டு முகம் புதைத்து அழுதான் அந்த இளவட்டம்.

குருபாதத்தின் விழிகளில் நீர் தேங்கி நின்றது.

''உனக்கிருக்கிற பாசம் அவனுக்கு இல்லையேடா?'' என்றார்.

ஐயனு கண்களைத் துடைத்து கொண்டே ஏறிட்டுப் பார்த்தான்.

''சின்ன வயசிலேயிருந்தே உங்களுக்கும் தம்பிக்கும் இடையிலே திரை போட்டு மறைச்சிட்டாங்க. இப்பவும் உங்களுக்கு நிம்மதி இல்லாம வந்து வந்து சேதி சொல்றாங்க'' என்றான் படபடப்புடன்.

''நெஞ்சொடிய அடிபட்டவன் வாக்கு மூலத்திலே சொல்லி இருக்கானே.''

''பொன்னையா தானாச் சொல்லலே. அவனைச் சொல்ல வச்சிருக்காங்க.'' என்றான் ஐயனு ஆத்திரத்துடன்.

''எல்லாம் உனக்குத் தெரிஞ்சிருக்கு. எனக்கே எடுத்துச் சொல்ற அளவுக்குத் துணிவும் வந்திருக்கு. உன்னைப் பாக்குற போதெல்லாம் அவன் நினைவு வருது. போடா நீயும் போ செத்தாலும் நான் தனியாத்தான் சாகணும். நான் யாருகிட்ட வேறெதைச் சொல்லப்போறேன்.'' என்றார் குருபாதம்.

''உங்க கண் கலங்கலாமா ஐயா?'' என்று சொல்லிப் பதட்டத்துடன் அவரது கைகளைப் பிடித்துக் கொண்டான் ஐயனு.

கதவு 'கிறீச்'சிடும் சத்தம் கேட்டது.

நீர் நிறைந்த விழிகளுடன் திரும்பிப் பார்த்தார் குருபாதம்.

சிவகாமியம்மாள் உள்ளே நுழைந்தாள்.

(வளரும்)

---



# கரிசல் மண் பகுதிக்கேற்ற புதிய சோளம்!

கோவில்பட்டியிலுள்ள மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் 1968-69, 1969-70, 1971-72-ஆம் ஆண்டுகளில் நடத்தப்பெற்ற பரிசோதனைகளிலிருந்து கரிசல் மண் பகுதிக்கேற்ற குறுகிய கால வயதுடைய ஒரு புதிய ஒட்டுவீரியச் சோளம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இப்புதிய ஒட்டுவீரியச் சோளம் எம். எஸ். 2219 என்ற ரகத்தையும், ஐ. எஸ். 3541 என்ற ரகத்தையும் கரு இணைப்பு செய்து உருவாக்கப்பட்டுள்ளது. இது, தற்பொழுது கரிசல் மண் பகுதியில் மானாவாரியாகப் பயிரிடப்பட்டுவரும் 'கே. 3' என்னும் 'பெரிய மஞ்சள் இருங்கு' ரகத்தைவிட மகசூலிலும், தானியம், தட்டை ஆகியவைகளின் தரத்திலும் சிறந்து விளங்குகிறது.

தென்பாண்டி மண்டலத்திற்கு இப்புதிய ரகம் ஏற்றதாக இருப்பதுடன், எக்டேருக்கு 4,425 கிலோ தானியத்தையும், 11,923 கிலோ தட்டையையும் அளிக்கின்ற ஆற்றல் வாய்ந்ததாகவும் இருக்கிறது. ஆனால், தற்பொழுது பயிரிடப்பட்டு வரும் 'கே. 3' என்னும் சோளம் எக்டேருக்கு 3,111 கிலோ தானியமும், 10,026 கிலோ தட்டையுமே கொடுத்து வருகிறது. எனவே, இப்புதிய ஒட்டுவீரியச் சோளம் 'கே. 3' சோளத்தைவிட 42 சதம் அதிகத் தானிய மகசூலும், 19 சதம் அதிகத் தட்டை மகசூலும் அளிக்கிறது. இந்தப் புதிய ரகம் கீழ்க் கண்ட குணங்களையும் கொண்டுள்ளது :—

1. வறட்சியைத் தாங்கிக் கொள்ளும்.

2. குறுகிய கால வயதுடையது. 90 நாட்களில் அறுவடைக்கு வந்துவிடும். தற்பொழுது சாகுபடியில் உள்ள 'கே. 3' சோளத்தைவிட 30 நாட்கள் வயது குறைவானது.

3. எளிதில் கதிரிலிருந்து மணிகளைப் பிரிக்கலாம்.

4. முத்துப் போன்ற வெண்மையான மணிகளைக்கொண்டது.

5. தட்டை இனிமையானதாகவும், சாறு நிறைந்ததாகவும் இருப்பதால், கால்நடைகளால் விரும்பி உண்ணப்படுகின்றன.

அதிக மகசூலையும், தரமான தானியத்தையும், தட்டையையும் அளிப்பதால் இப்புதிய ஒட்டுவீரியச் சோளம் 'கே. 3' சோளத்தைவிட எக்டேருக்கு ரூபாய் 1,040 அதிக இலாபம் அளிக்கின்றது.

மேற்கூறிய பயன்களைக் கொண்டிருப்பதால், தமிழ்நாட்டின் கரிசல் மண் பகுதியில் இப்புதிய ஒட்டுவீரியச் சோளத்தைச் சாகுபடி செய்வதற்காக வழங்குவதென மாநில வேளாண்மைக் குழு முடிவு செய்துள்ளது.

# வெண்பாப் போட்டி

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர்:

க. இலக்குமி, எழிலகம்,
நெசவாளர் குடியிருப்பு,
அருப்புக்கோட்டை,
இராமநாதபுரம் மாவட்டம்.

## தை' எனத் தொடங்கி 'இனிது' என முடித்தல்

தைப் புலவர் குவலயத்தில் தோன்றிப்
தமிழர் பாங்கறியச் செய்தார்—வழங்கிடும்
ரோரின் உள்ளத்தே சாவா நிலையெய்திக்
ன்போல வாழ்வார் இனிது.

—க. இலக்குமி, அருப்புக்கோட்டை.

தை வளர்ப்பும் குடியோம்பிக் காப்பும்
தரூஉம் திட்டத்தின் வாக்காம்—குழந்தை
பற் றிடர்ப்படாமுன் பண்பாய்த் தடுத்துச்
பறூஉம் சீர்மை இனிது.

—புலவர் அ. மரியமைக்கேல், திருவரங்கம்.

தைபல ஈன்று குடும்பத்தைக் காக்க
ன்று வருந்தல் அழகோ ?—பழங்குறள்போல்
றிவுச் சேய்கள் நமக்கிரண்டே உண்டானல்
ற வாழ்வே இனிது.

—புலவர் மா. அரங்கநாதன், சல்லிப்பட்டி.

தை முகத்தைப்பார் ! கொஞ்சமிவ னோடு
யவர் வேறுமுகம் பாரார்—மழலையதால்
ல எழிலாக்கும் இப்பிஞ்சைப் பார்த்திடர்
லயென வாழ்வோம் இனிது.

—சி. சௌ. கருப்பன்செட்டி, திருச்சி-15.

தைகளே உங்களுக்கோர் கொண்டாட்ட நாளை
கிய நேருவுக்கு வாழ்த்து—முழங்க
வடுப்பீர், நாட்டிலவர் வேண்டியநல் லின்பம்
ழைப்பீர், என்றும் இனிது.

—புலவர் சு. முத்துக்கருப்பன், பேரையூர்.

குழந்தை மனத்திற் குகந்த கவியைப்
பழகுந் தமிழினில் பாங்காய்—அழகுற
மாற்றமின்றி மக்கள் மனத்தில் பதிந்திட
ஏற்றம் கொடுத்த லினிது.

—பூவன. தீனதயாளன், திருவண்ணாமலை.

குழந்தைநா னுகிக் குமரியே உன்றன்
அழகுக் கரங்களில் ஆவேன் !—விழையும்
மணமாய்என் வாழ்வின் வழிகாட்டி யாய்நீ
இணைந்தால் எனக்கே இனிது !

—ந. பாசுலால், அந்தியூர்.

குழந்தைமலர் கொவ்வைக் கனிவாய் குவித்து
மழலைசொல நெஞ்சம் மகிழும்—அழகுருவே
பிச்சிப்பூங் கையால் முகங்கிள்ளிப் பெற்றிடும்
'இச்'செனும் முத்தம் இனிது.

—முத்தமிழ்த்தாசன், சிறுகூடல்பட்டி.

குழந்தை அளவு குடும்பத்தில் வேண்டும் !
கிழவர் எனினும் குணத்தில்—குழந்தை
மனமிருத்தல் வேண்டும் ! மகவு, பகைசெய்
இனத்தார்க்கும் கூட இனிது.

—நா. பசும்பொற்கிழார், பாளையம்பட்டி.

குழந்தைகள் பேற்றைக் குறைக்குங் குடும்பம்
விழைந்தஇன்பம் துய்த்தே மிளிரும்—அழுகுறும்இம்
மாற்றத்தால் காணும் வளங்கள் தமிழ்நாட்டை
ஏற்றமுற வைக்கும் இனிது.

—வி. மு. உலகநாதன், சென்னை-7.

# வெண்பாப் போட்டி

ுழந்தை குழறுமொழி கொண்டசெவி தன்னுள்
பழந்தமிழ்நா வின்பமும் பாய்ந்து—விழைந்தநலம்
ப்பா தளிப்பதுபோல் தண்டமிழ்நல் லாட்சியுமே
ப்போதும் நல்கும் இனிது.

—கண. சீனிவாசன், மதுரை-1.

ுழந்தை யெனப்பிறந்தேன் கொல்பசியில் நோயில்
விழுந்து தவிக்க விடாதீர்—எழுந்தேற்பீர்
' எல்லாம் இரண்டே இரண்டின்பின் எப்போதும்
இல்லா திருத்தல் இனிது. ''

—சி.பி. அரங்கநாதன், நுங்கம்பாக்கம்.

ுழந்தைகளைப் பெற்றே குடும்பத்தை நாளும்
அழகாய் நடத்துவாள் அன்னை ;—கிழமாகிப்
பேரனையும் பேணிப் பெருமையுறும் பெண்ணினத்தின்
ர மனதே இனிது.

—ஆர். லலிதா, மேல்பட்டாம்பாக்கம்.

ுழந்தைகள் நாளாகக் கொண்டாடும் நம்முள்
நிழல்போல் நிலைத்தநல் நேரு—பழகிய
மாந்தர் பலருள்ளும் மாணிக்க மாய்வாழ்ந்த
ஏந்தலைப் போற்றல் இனிது.

—சி. கைலாசம், ஈரோடு-7.

குழந்தை இளந்தென்றல் கொத்துமலர்ச் செண்டே
மழலைமொழிக் கீடுண்டோ மண்ணில்—அழகுச்
சுடர்விளக்கோ ! அன்பின் செழும்பரிசோ ! செந்தேன்
இடரகற்றும் வாழ்வில் இனிது.

—து.ம. இராமசாமி, கோவை-29.

ந்தைக் கனியமிழ்தே ! குற்றமிலா உன்போல்
ந்தைப் பிறப்பெடுத்தோர் குற்றம்—இழைத்தல்போல்,
ள்வாழ்வில் செய்யாதே, ஊக்கம், உயர்நெறியால்
ன்புறுக நாட்டில் இனிது.

—அ. கோவரசு, அரக்கோணம்.

குழந்தை பலபெற்றுக் கோடிநோய் வாட்ட
அழுந்திஅவை மாள்தல் அழகோ?—எழிலார்
குடும்ப நலத்திட்டம் கூறும் வழியில்
இடர்களைந்து வாழ்வோம் இனிது.

—ப. சண்முகானந்தம், தேவம்பாடி.

குழந்தைச் சிரிப்பில் குழலிசையில் கொஞ்சும்
தமிழில் தகுநெறியில் தாய்மை—விழுமியநல்
அன்பில் அருங்கலையில் ஆன்றமைந்த முப்பாலில்
இன்பத்தைக் காணல் இனிது.

—அ. முப்பாலிகை, திருப்பத்தூர்.

குழந்தைமன் நேருவின் கோலத் திருநாள்
குழந்தைகள் நாளென்றே கொண்டோம்—மழகளிற்றை
ஒப்பவே நம்புதல்வர் ஓங்கும் வகைவளர்த்தே
எப்பகையும் வெல்வோம் இனிது!

—புலவர் ந. கருணாநிதி, வங்கனூர்.

குழந்தை மிகுந்தால் குடும்பத்தில் இன்பம்
இழந்து விடுதல் இயல்பே—குழந்தைகள்
ஒன்றுக்கு மேலாய் உதவா தெனக்கொண்டால்
என்றுமே வாழ்க்கை இனிது.

—இரா. பலாகிருட்டிணன், பாலூர்.

குழந்தை பிறந்து குலப்பெருமை காத்துப்
பழந்தமிழ்ப் பாங்குடன் கற்றே—இழந்த
தரமிகு வாழ்வு தரணியி லோங்க
இரண்டு பெறுத லினிது.

—ஆ. இளங்கண்ணன், கல்லுப்பட்டி.

குழந்தைச் சிறுவாயில் கூத்தாடும் தேன்சொல்,
அழகியவள் கண்ணசைவும் அன்னை—மொழியோடு
நன்னெறியில் செல்வமுடன் நாட்டுகிற நற்புகழும்
இன்பமுமே வாழ்வில் இனிது.

—அரசிக்கன்பன், காரைக்குடி.

குழந்தைக்கே அன்பைக் கொடுத்தாலும் நற்றாய்
இழந்தாரின் உள்ளம்போல் இன்றிப்—பழந்தமிழில்
தாலாட்டுப் பாடித் தடந்தோள் வளர்த்திட்டால்
ஏலாமை நீங்கும் இனிது.

—கோ. வேணுகோபாலன், சென்னை-39.

குழந்தைகள் உள்ள குடும்பந்தான் சோலை ;
மழலையில் லாமனையோ பாலை—சுழலுலகில்
துன்பங்கள் கோடி துளைப்பினும் பால்முகம்
இன்பம் தருமே இனிது.

—வி. ஆர். துரை, திருப்பத்தூர்.

குழந்தை மனமும் குவலயம் போற்றும்
மழலைச் சிரிப்பும் உலகம்—வழங்கும்
புதுமைக் கருத்தும் பொலிந்தநம் அண்ணா
இதயத்தில் வாழ்தல் இனிது.

—மு. கலாநிதி, அம்பத்தூர்.

குழந்தை பலபெற்றுக் கூட்டும் கவலைச்
சுழலில் தவித்தல் சுகமோ?—அழகாய்த்
திரண்ட தெனஉரைக்கும் தேன்மொழிச் செல்வம்
இரண்டோ டிருத்தல் இனிது.

—சொ. மணிமொழி, வள்ளுவரகம்.

# வெண்பாப் போட்டி

குழந்தை இளந்தென்றல் ! கொஞ்சுதமிழ் மன்றம் !
அழகு நிலாப்பூ ! அமுதம் !—பழத்தேன் !
இருமழலை பெற்றால்தான் ஈதெல்லாம் மெய்யாம் !
இருமை அருமை இனிது.

—புலவர் முத்துவேங்கடேசன், திருமயம்.

குழந்தை பிறந்த குரல்கேட்டுத் தாய்தான்
உழந்த துயர்மறப்பாள், உண்மை ;—தழைத்த
குடும்பக் கொழுந்திது கூட்டுக கோலம்,
இடும்பை எரித்தே இனிது.

—இரும்பொறை, கானாடுகாத்தான்.

குழந்தை இளநெஞ்சும், கொண்டவன் போற்ற
ஒழுங்காய்ப் பணிபுரிந் தோம்பும்— எழிலுரு
முல்லையை ஏற்ற ஒருவருக் கிப்புவியில்
இல்லற வாழ்வே இனிது !

—ஏகாம்பரம், தென்னம்பட்டு.

குழந்தை மனமே ! குமுத மலரே !
அழகிய பெண்ணே என் அன்பு—கெழுமிய
சித்திரமே ! காதலியே ! தேன்மொழியே ! நீயென்றும்
இத்தரையில் வாழ்க இனிது.

—அரவரசன், கீழஅரும்பூர்.

குழந்தை பெருக்கலிலோர் கொள்கையின்றி உள்ளம்
விழைந்த படிபெறுதல் வீணே—குழைந்து
சுருண்ட நறுங்கூந்தல் தோகையே ! வாழ்வில்
இரண்டைப் பெறலே இனிது.

—அமரன், அருப்புக்கோட்டை.

குழந்தைபல பெற்றுக் குடும்பம் துயரில்
அழுந்துவதி னின்றும் அகல—மழையே
திரண்டன்ன கூந்தல் தெரிவையே யாரும்
இரண்டு பெறுதல் இனிது.

—நாவரசு, விழுப்புரம்.

குழந்தை பெறுவதைக் கூட்டிப் பெருக்கி
இழக்கும் வளங்கள் இனிஏன்?—அழகே
திரண்ட குழந்தையைத் தீதற்ற மாந்தர்
இரண்டே பெறுவர் இனிது.

—இரா. பெரியசாமி, அருப்புக்கோட்டை.

குழந்தை குரலினிது ; கொள்ளுங் களமார்
உழவர் உழைப்பினி தோங்கும்—நிழலாக
வாய்த்த அரசினிது ; வற்றாத நற்றொண்டால்
சத்துயர்தல் என்றும் இனிது.

—புலவர் அ. ஆறுமுகம், திருச்சி-20.

குழந்தை மனமினிது ; குற்றமிலாப் பண்பால்
உழும்வாழ் வினிதே ; அறமும்—செழுந்தமிழும்
ஆட்சிக் கினிதே அறிவன்பும் சேர்ந்தாங்கு
மாட்சிமைகொண் டாளும் இனிது.

—வ. சீ. கி. மூர்த்தி, சிந்தகம்பள்ளி.

குழந்தை இரண்டும் குலவுதமிழ் மூன்றும்
நிழலாம் பொருள்நான்கும் நிற்க—அழகூட்டும்
பாவைந்து மாறாப் பணிநாட்க ளேழென்றும்
தேவை தெவிட்டா தினிது.

—சாரதா ஆறுமுகம், இலப்பைக்குடிக்காடு.

குழந்தைப் பருவமது கொஞ்சமும் துன்பத்
தழல்பட்டு நோகாத தன்றோ—கிழமாகிக்
கன்னங்கள் பள்ளத்தைக் கண்டபின் முற்பருவ
எண்ணங்கள் யாவும் இனிது.

—த. ச. தவசிமணி, அருப்புக்கோட்டை.

குழந்தை யிரண்டுபெற்றுக் கொண்டான் மகிழ
அழகிலும், அன்பான உண்டி—வழங்கி
வருவாய்க்குத் தக்கபடி வாழ்வதிலும் மேம்பட்(டு)
இருப்பாள் துணையே இனிது.

—புலவர் பெரு. வே. மருதையன், பாபநாசம்.

குழந்தைகள் பேசும் குதலை மொழியும்
பழந்தமிழ்ப் பாணர் பயின்று—வழங்கிய
தொல்யா ழிசையும்சீர் தூக்கின் மழலையே
எல்லார்க்கும் ஆற்ற இனிது.

—சு. தருமர், மேலாண்மறைநாடு.

குழந்தையது வாழட்டும் ; கொள்கையில் மாற்றம்
பழுதில்லை ; பண்புயரும் பாரில்—வழுவகற்றிச்
சீனாவே! சீறாது வங்கத்தை அங்கமென
ஐ.நா.வில் சேர்த்தல் இனிது.


—அ. புருடோத்தமன், காவேரிப்பட்டணம்.

குழந்தை மலர்முகத்தைக் கொவ்வை இதழைப்
பழகுமுயர் பண்புடனே பேச்சின்—மழலையை
உண்ணுகின்ற காட்சியொ(டு) ஓடுகின்ற மாட்சியினைக்
கண்கொண்டு காண்டல் இனிது.

—தஞ்சை இளந்திரையன், கரந்தை.

குழந்தை, கடவுள் கொடுப்பதெனல் நன்றா ?
குழந்தை இரண்டெனில்முக் கோண—முழக்கத்தை
இன்றே செயல்புரிவீர்! எல்லார்க்கும் செல்வமெனில்,
என்றும் இரண்டே இனிது.

—புலவர் அ.வே. காசிநாதன், கோடாலிக்



# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்



# புதிய கண்டுபிடிப்புகள்!

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் துவக்கப்பட்டு இன்னும் 1½ ஆண்டுக் காலம்கூட ஆகவில்லை. ஆயினும் அது தமிழ்நாட்டு உழவர் பெருமக்கள் விழுமிய முறையில் வேளாண்மை செய்து உயர்வு பெறப்பலபுதிய கண்டுபிடிப்புகளை வெளியிட்டுள்ளதுடன், உயரிய சாகுபடி முறைகளையும் அவ்வப்போது வெளியிட்டு வருகிறது. அவைகளை எல்லாம் தொகுத்து உழவர் பெருமக்களின் நலன் கருதித் 'தமிழரசு' வெளியிட்டு வருகிறது. அண்மையில் வந்த தகவல்களைக் கீழே படைத்துள்ளோம்.

### 1. உயர் விளைச்சல் நெல்வகைகளுக்கு உரமிடும் முறைகள்

உயர் விளைச்சல் நெல்வகைகளைச் சமீபகாலமாகத் தமிழக உழவர் பெருமக்கள் பெருவாரியாகப் பயிரிடுவதால், அவைகளுக்குத் தேவையான உர அளவுகள், உரமிடும் முறைகள் ஆகிய விவரங்களைத் தமிழக உழவர் பெருமக்களும், விரிவாக்கப் பணியாளர்களும் நன்கு தெரிந்திருப்பது மிகவும் இன்றியமையாததாகும். குட்டையான எல்லா உயர் விளைச்சல் நெல் வகைகளும் ஒரே அளவு தழைச்சத்தை மண்ணிலிருந்து கிரகித்துக் கொள்வதில்லை. மண்ணில் இருக்கும் தழைச்சத்தின் அளவும் இடத்திற்கு இடம் மாறுபட்டிருப்பதால், ஓரளவு மாறுபட்ட உர அளவுகள் பரிந்துரைக்கப்படுகின்றன.

பருவ மழையுடன் ஒன்றியிருக்கும் பட்டங்களைவிட, கோடைப்பட்டம் அல்லது நவரைப்பட்டத்தில் குட்டையான உயர் விளைச்சல் நெல் வகைகள், பொதுவாகப் பல இடங்களில் ஒரே சீராக அதிக மகசூலை அளிக்கின்றன. ஓர் ஏக்கரில் உயர் விளைச்சல் நெல் வகையைச் சாகுபடி செய்ய ஆகும் செலவில் சுமார் மூன்றில் ஒரு பங்கு, உரத்திற்காகச் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே, உயர் விளைச்சல் தரும் நெல்வகை, உரத்தின் முழுப் பயனைப் பெற்று நல்ல மகசூல் கொடுக்கத்தக்க சூழ்நிலையை ஆராய்ந்து, அறிந்து, அதன்படி உரமிடவேண்டும்.

பொதுவாக, உயர்விளைச்சல் நெல் வகைகளுக்கு, ஏக்கருக்கு 75 கிலோ தழைச்சத்து, 35 கிலோ மணிச்சத்து, மற்றும் 35 கிலோ சாம்பல் சத்து பரிந்துரைக்கப்படுகிறது. 35 கிலோ மணிச்சத்துக் கொடுக்கும் அளவுக்குச் சூப்பர் பாஸ்பேட்டும், அதே அளவு சாம்பல் சத்துக் கொடுக்க, மூரியேட் ஆப் பொட்டாஷ் உரமும் கடைசி உழவின் போது அடியுரமாக இடவேண்டும். அடுத்து, பரிந்துரைக்கப்படும் தழைச்சத்தின் ஒரு பகுதி, அம்மோனியம் சல்பேட்டாகவோ அல்லது யூரியாவாகவோ நடவின்போது தூவப்படுகிறது. நேரிடை உரங்களைத் தவிர, காம்ப்ளெக்ஸ் உரம் அல்லது கலப்பு உரங்களை உபயோகிக்கும் போது, மேலே பரிந்துரைக்கப்பட்ட சத்துக்களின் அளவுகளைக் கருத்திற்கொள்வது அவசியம்.

நல்ல தண்ணீர் வசதியும், வடிகால் வசதியும் உள்ள நன்செய் பூமிகளில் தழைச்சத்து கொடுக்கும் உரங்களை அடியுரமாக இடும்போது, மேலாகத் தூவி விடுவது பழக்கத்தில் உள்ளது. அவ்வாறில்லாமல், தழைச்சத்து அளிக்கும் உரங்களைச் சற்று ஆழமாகப் போட்டு விட்டால், நடவு செய்யப்பட்ட பயிருக்கு எதிர்பார்த்த அளவு தழைச்சத்தின் பயன் கிடைக்காமல் போய் விடுகிறது. மேலுரமாகத் தழைச்சத்து கொடுக்கும்போது, உரங்களைச் சுமார் 2 செ. மீ. அளவு தண்ணீரை வயலில் இருத்திக் கொண்டு போடுவது அவசியம். அப்பொழுது வயலிலுள்ள தண்ணீர் மடைகளையும் நன்கு அடைத்து விடவேண்டும். வரிசை வரிசையாக நடவு செய்த வயல்களில், 20 செ.மீ. இடைவெளியில் 'ரோட்டரி வீடர்' என்ற சுழலும் களை எடுக்கும் கருவியை உபயோகித்தால் தழைச்சத்தில் சேதமேற்படாமல் பாதுகாக்கலாம். வளரும் நெற்பயிருடன் போட்டியிடும் களைப் பயிர்களைக் கட்டுப்படுத்த, நன்செய் வயல்களில் சீராகத் தண்ணீர் இருத்திவைக்கவேண்டும்.

அடுத்து, தழைச்சத்து அளிக்கும் உரங்களை வளரும் பயிருக்கு எந்த விகிதத்தில் அடியுரம், மற்றும் மேலுரமாகப் பிரித்துக்கொடுப்பது என்பதைப் பற்றி ஆராய்வோம். தற்போது பரிந்துரைக்கப்படும் தழைச் சத்தின் அளவில் சரிபாதியோ அல்லது பாதிக்குச் சற்று அதிகமாகவோ அடியுரமாக அளிக்கப்படுகிறது. மற்றப் பகுதி, மேலுரமாக ஒரு முறையோ அல்லது இரண்டு முறைகளோ கொடுக்கப்படும் பழக்கம் உழவர் பெருமக்களிடம் பரவியிருக்கிறது. வளரும் சில நுணுக்கங்களை ஆராய்ந்து அறிந்து, அதற்கேற்றாற்போல், தக்க தருணத்தில் தழைச்சத்து அளிக்கும் உரங்களை இட்டால், தழைச் சத்துக் கிரகிக்கப்படும் திறனை அதிகரிக்கலாம்.

அதாவது, பரிந்துரைக்கப்படும் தழைச்சத்தளவின் ஒரு பகுதி அடியுரமாகப் போடப்பட்டது என்று வைத்துக் கொள்வோம். பாக்கியுள்ள அளவின் உரத்தை இரு பாகங்களாகச் செய்து தூர்கள் கிளைக்கும் சமயத்தில் ஒரு பாகமும் (அதாவது நடவு செய்து 15 அல்லது 20 நாட்களுக்குள்) மீண்டும் தண்டு உருளும்அல்லது கதிர்விட ஆயத்தம் செய்யும் சமயத்தில் ஒரு பாகமும் (அதாவது நடவு செய்து 60 அல்லது 75 நாட்களுக்குள்) இடுவது மிகவும் சிறந்தது. மணற்பாங்கான வயல்களுக்கோ அல்லது

மத்தியகால நெல் வகைகள் பயிர் செய்த சமயத்திலோ, பயிர் புடையில் இருக்கும் போது—அதாவது தொண்டைக் கதிர் பருவத்தில்—ஒருமுறை தழைச்சத்துக் கொடுத்தால் நல்ல மகசூல் கிடைக்கிறது. பொது வாகப் பார்க்கும் போது, உயர் விளைச்சல் நெல் வகைகளுக்குப் போதிய தழைச்சத்து, கொடுத் துத் தூர்கள் கிளைக்க வகை செய்யவேண்டும். மேலுரமாகத் தழைச்சத்து இரண்டு அல்லது மூன்று பகுதிகளாகத் தக்க தருணத்தில் அளிக்கப்பட்டால், சத்து முழுவதும் பயிரினால் கிர கிக்கப்படுகிறது. அதற்கேற்றாற் போல் கதிர்களில் மணிகள் அடர்த்தியாகப் பிடிப்பதுடன், மணிகள் பதராகவும், கருக்காய் களாகவும் மாறுவது தவிர்க்கப் படுகிறது.

மேலும், நெல் மணிகளில் புரதச்சத்து அதிகமாகச் சேமிக்கப்பட வழி செய் கிறது. மேலுரமாகத் தழைச் சத்துக் கொடுக்கும்போது ஒரே சமயத்தில் பெரும் பகுதியை அளித்தால், பயிர் பூச்சியால் தாக்கவோ அல்லது பூசணத் தால் சேதமடையவோ ஏது வாகும். ஆகவே, இரண்டு அல்லது மூன்று முறைகளில் தழைச்சத்து உரத்தைப் பிரித்து அளித்தால் மேலே குறிப்பிட்ட நஷ்டங்களைத் தவிர்க்கலாம்.

பொதுவாக மண்ணின்வளம், சாகுபடி செய்யப்படும் நெல் வகை, அதன் வயது, தண்ணீர் வசதி மற்றும் சாகுபடி செய்யப் படும் பட்டம் ஆகியவற்றைப் பொறுத்துத்தான், எவ்வளவு தழைச்சத்து உரம் இடவேண் டும் என்றும், எவ்விதத்தில் பிரித்து அடியுரமாகவும், மேலுர மாகவும் இடவேண்டும் என்றும் நிர்ணயிக்க வேண்டும். தழைச் சத்து உரம் அதிகமாகச் சேத மாகாமல் சாகுபடி செய்யப் படும் உயர் விளைச்சல் நெல் வகைகளால் பயன்படுத்தப் பட, பல உழவியல் ஆராய்ச்சிகளுக் குப் பிறகு, கீழ்க்கண்ட வழி முறைகள் வகுக்கப்பட்டிருக் கின்றன.

1. மண்ணின் வளத்தையும், தண்ணீர் வசதியையும் பொறுத்து இரண்டு முதல் நான்கு முறைகள் தழைச்சத்தைப் பிரித்து மேலுரமாக இடலாம்.

2. ஒவ்வொருமுறை மேலு ரம் இடும்போதும், ஏக்கருக்கு 10 கிலோ அல்லது 12 கிலோ தழைச்சத்திற்கு மேல் அளிக்கக் கூடாது.

3. மண்ணில் தழைச்சத்து குறைவாக இருந்தால், அடி யுரம் சற்று அதிகமாகவே கொடுக்கப்பட வேண்டும்.

4. மண்ணில் தழைச்சத்து அதிகமாக இருந்தால், மொத் தம் கொடுக்கப்படும் தழைச் சத்தைக் குறைத்து, மேலுர மாக ஒரு முறை சிறிதளவு கொடுத்தால் போதும்.

5. தூர்கள் குறைவாகக் கிளைக்கும் நெல் வகைகளுக்கு ஓரளவு அதிகமான தழைச் சத்து அடியுரமாக அளிக்கப்பட வேண்டும்.

6. குறுகியகால நெல்வகை களுக்கு, அதிகமான தழைச் சத்தை அடியுரமாகக் கொடுத்து, மேலும் ஒரு முறை கொடுக் கலாம்.

7. நீண்டகால நெல் வகை களுக்கு மேலுரத்தை மூன்று அல்லது நான்கு தடவைகளில் பிரித்துக் கொடுக்கலாம்.

8. பயிர் நடவு செய்த தருணத்தில் குளிர்காலப் பட்ட மாக இருந்தால், மேலுரமாகக் கொடுக்கப்படும் தழைச்சத்தின் அளவை அதிகப்படுத்தலாம்.

9. 'குலைநோய்' அல்லது 'கொள்ளை நோய்' மேலும் தோகையில் வரும் 'பிளைட்' நோய், சாகுபடி செய்யப்படும் நெல்வகைகளைத் தாக்காமல் இருக்கத் தழைச்சத்தை மேலுர மாகச் சிறுகச் சிறுகப் பிரித்து அளித்தல் அவசியம்.

10. நேரிடை விதைப்புச் செய்த வயலுக்கு அடியுரத் தைக் குறைத்து, மேலுரம் மூன்று, நான்கு முறைகளில் பிரித்துக் கொடுக்கப்பட வேண் டும்.

11. சற்று வயது முதிர்ந்த நாற்றுகளைப் பயன்படுத்தும் போது அடியுரம் அதிகமாகவும், மேலுரம் குறைவாகவும் உப யோகிக்க வேண்டும்.

12. மானாவாரிப் பயிருக்கு, மழைவரும் தருணமறிந்து, சிறிது சிறிதாக மேலுரம் அளிக் கப்படவேண்டும்.

மேற்கூறிய நிர்ணயிக்கப்பட்ட அனுபவரீதியான வழிமுறைகளைக் கவனத்தில் இருத்திக்கொண்டு, உழவர் பெருமக்கள் உயர் விளைச்சல் நெல் வகைகளை நல்லமுறையில் பயிர் செய்து அதிக விளைச்சல் அடையமுடியும்.

## வெண்பாப் போட்டி-47

'ஆண்டு' எனத் தொடங்கி 'அன்பு' என முடித்தல்.

முடிவு நாள் : 1—12—1972

பரிசு : ஓராண்டு 'தமிழரசு' அன்பளிப்பு

வெண்பா அனுப்பவேண்டிய முகவரி :—

ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
''தமிழரசு'' அலுவலகம்,
அரசினர் தோட்டம், சென்னை-2.

குறிப்பு :

அஞ்சல் அட்டையில் வரும் வெண் பாக்களே ஏற்றுக் கொள்ளப்படும்.

பவானி சாகர் பகுதிக்கேற்ற
அதிக விளைச்சல் தரும்
புதிய வீரியச் சோளம்

சி. எஸ். எச். 1 வீரியச் சோளத்தை வெளியிட்ட நாள் முதல், பல வீரியச் சோள ரகங்கள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பவானி சாகர் வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில், இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் நல்ல ஒத்துழைப்புடன் தொடர்ந்து பரிசோதிக்கப்பட்டன. இந்தச் சோதனைகள் பருவமழைப் பட்டத்திலும், கோடைப் பட்டத்திலும் நடத்தப்பட்டன. கோடைப் பருவத்தில் கோ. 18 சோளத்துடனும், பருவ மழைப் பட்டத்தில் உள்ளூர் செஞ்சோளத்துடனும் ஒப்பிட்டுப்பார்க்கப்பட்டன.

ஓர் எக்டேருக்கு 20 வண்டி கம்போஸ்ட் உரத்துடன் 420 கிலோ சூப்பர் பாஸ்பேட் (67.26 கிலோ மணிச்சத்து) அடியுரமாகப் போடப்பட்டது. 560 கிலோ அம்மோனியம் சல்பேட்டை (112.00 கிலோ தழைச்சத்து) ஒரு எக்டேருக்கு இரு சம பங்காகப் பிரித்து, முதல் பகுதியை விதைக்கும் போதும், மற்றப் பாதியை விதைத்த ஒரு மாதத்திற்குப் பிறகும் போடப்பட்டது.

வரிசைக்கு வரிசை 45 செ. மீட்டரும், செடிக்குச் செடி 15 செ. மீட்டர் இடைவெளியும் விட்டு நடப்பட்டது. நடவின் போது 1 மீட்டர் நீளத்திற்கு 1.5 கிராம் 'திம்மட்' (Thimet) குருணைகள் போடப்பட்டன. நட்ட 15-வது நாளில் பயிர்ப் பாதுகாப்புக்காக என்ட்ரின் தெளிக்கப்பட்டது. 30-வது நாளில் மற்றொருமுறை என்டிரின் மருந்து தெளிக்கப்பட்டது. நட்ட 40-வது நாளில் எக்டேருக்கு 15 கிலோ வீதம் என்டிரின் குருணைகள் குருத்தில் போடப்பட்டன. கதிர் விடும் தருணத்தில் பி. எச். சி. 10 சதத் தூளும், டி. டி. டீ. 5 சதத் தூளும் கதிர் நாவாய்ப் பூச்சியைத் தடுக்கத் தூவப்பட்டன.

இந்தச் சோதனையில் எம்.எஸ். 2219× ஐ. எஸ். 3541 என்ற வீரியச் சோள ரகமானது தொடர்ந்து பருவமழைப் பட்டத்திலும், கோடைப் பட்டத்திலும் உள்ளூர் ரகங்களைவிட அதிகவிளைச்சல் கொடுத்துள்ளது. அதாவது இந்த ரகம் 1968-69, 1969-70-ஆம் ஆண்டுகளில் மழைப் பருவத்தில் ஒரு எக்டேருக்கு முறையே 6,300 கிலோ, 5,975 கிலோவும், கோடைப்பட்டதில் 6,095 கிலோ, 8,790 கிலோ தானிய விளைச்சலும் கொடுத்துள்ளது. இது மங்கலான நடு இலைநரம்பைக் கொண்டுள்ளதால், நல்ல சுவையுள்ள தட்டையையும் கொடுக்கிறது.

இதைத்தவிர இந்த ரகமானது சி. எஸ். எச். 1 ரகத்தைவிட உயரமானது. அதாவது சி. எஸ். எச். 1 சோளத்தின் உயரம் 136 சென்டி மீட்டர். இந்த எம். எஸ். 2219× ஐ. எஸ். 3541 ரகத்தின் உயரம் 216 சென்டி மீட்டர். இதனால் இந்தச் சோள ரகத்தின் சோளத் தட்டை விளைச்சல் சி. எஸ். எச். 1 சோள ரகத்தைப் போல் இருமடங்காக இருக்கும். இந்த ரகம் முத்துப் போன்ற வெண்ணிற மணிகளைக் கொண்டிருப்பதுடன், சாயாத தன்மை வாய்ந்ததாகும்.

> சமுதாய நீதி வேண்டும் என்று இன்று மக்கள் சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள். ஏழையாகப் பிறந்தால் ஏழையாகவே இருக்கவேண்டும் என்று நினைத்து 'விதி', 'தலை எழுத்து' என்றெல்லாம் பேசுகிற பேச்சை இன்றைய மக்கள் குறைவாகவே மதிக்கிறார்கள். எனவே, செல்வர்க்கும், வறியவர்க்கும் இடையேயுள்ள வேற்றுமைகளை நீக்க முயல்வது தவிர வேறு வழியில்லை. எல்லாருக்கும் சமவாய்ப்பு ஏற்படுத்தும் வகையிலே நாம் முயலத்தான் வேண்டும்.
>
> —நேரு

### 3. திராட்சையைத் தாக்கும் சொறி நோய்த் தடுப்பு முறைகள்

திராட்சையில் காணப்படும் பூச்சிகளில் புள்ளி வண்டு, இலைப் பேன், இலை சுருட்டுப் புழு போன்றவை இலைகளைப் பாதிக்கின்றன. ஆனால் இவைகளைவிடத் திராட்சைக் குலைகளைத் தாக்கும் 'திரிப்ஸ்' என்னும் பேன் இப்பொழுது விரைவாகப் பரவி வருகிறது. குறிப்பாகக் கோவை மாவட்டத்தில் இப் பேனின் தாக்குதல் அதிக அளவில் காணப்படுகிறது. இப்பேன்களே திராட்சையில் சொறி நோயை ஏற்படுத்துகின்றன.

'திரிப்ஸ்' இனத்தைச் சேர்ந்த 'ஸ்கிரிட்டோதிரிப்ஸ் டார்ஸாலிஸ்' என்ற மிகச் சிறிய பழப்பேனே இச் சொறி நோயை உண்டாக்குகிறது. சாதாரணமாக இப்பேன், திராட்சையில் தங்கி இனப் பெருக்கம் செய்வதில்லை. இவைகள் சீமைக்கருவேல், ஆமணக்கு, மிளகாய், சோயா மொச்சை போன்ற செடிகளில் பெருமளவில் இனப் பெருக்கம் செய்கின்றன.

வயதடைந்த பூச்சிகளே பழக்குலையைத் தாக்குகின்றன. திராட்சைக் கொடிகள் கவாத்து செய்யப்பட்டு புதிதாகக் காய்கள் பிடிக்க ஆரம்பித்ததிலிருந்து, இலை பழுக்கும் வரையிலும் இத்தாக்குதலிருக்கும். இரவிலும், குளிர்ந்த மாலை நேரத்திலும் இப்பூச்சிகள் பழக்குலைகளைத் தாக்குகின்றன.

இப்பூச்சிகள் காய்களின் மெல்லிய தோலைச் சுரண்டி, அதனின்று கசியும் சாற்றை உறிஞ்சுகின்றன. இதனால் காயின் மேல் தோலில் தேமல் போன்ற படைகள் தோன்ற ஆரம்பிக்கின்றன. நாளடைவில் இவைகள் சொறி பிடித்தது போன்றாகி, வரண்டு, கடினம் ஆகிவிடுகின்றன. மிகக் கடுமையான தாக்குதலில், காய்கள் வளர்ச்சியுறாமலும், வெடித்தும் காணப்படுகின்றன. அதனால் காய்களின் தூய்மை பாதிக்கப்பட்டுப் பற்பல பூஞ்சாள நோய்கள் பரவ ஏதுவாகின்றன. பாதிக்கப்பட்ட குலைகள் விற்பனை மதிப்பை இழந்துவிடுகின்றன. இக்கனிகள் சுவை குன்றிவிடுவதுடன், சாறுமற்று உவர்ப்பாக இருக்கும். இதனால் இலாபம் வெகுவாகக் குறைகிறது.

இப்பூச்சியினால் குறிப்பாகப் 'பன்னீர்,' 'அனாப்-இ-ஷா ஹி', 'மஸ்காட்' 'கந்தாரி', 'பெங்களூர் புளூ' போன்ற உயர் விளைச்சல் தரும் திராட்சை ரகங்கள் பெருமளவில் பாதிக்கப்படுகின்றன. மிகக் கடுமையான தாக்குதலால் அனாப்-இ-ஷாஹி ரகத்தில் 70 முதல் 80 சதம் வரை சேதமேற்படலாம். 'விதையில்லாத ரகம்', 'கராச்சி', 'பக்டி' போன்ற ரகங்களில் இப்பூச்சியின் தாக்குதல் குறைவாகக் காணப்படுகிறது.

**தடுப்பு முறைகள்**—இப்பேனின் தாக்குதலைக் கட்டுப்படுத்தவும், சொறி நோயைத் தடுக்கவும் டி. டி. டீ. 0·1 சதத்தையோ டிரைதியான் 0·06 சதத்தையோ கார்பரில் 0·1 சதத்தையோ, மேலத்தியான் 0·1 சதத்தையோ தெளிக்கவும்.

கவாத்து செய்த நாளிலிருந்து ஒருமாதம் கழித்து, முதல் முறை

யாகத் தொடங்கி 10 நாட்கள் அல்லது ஒரு வாரம் இடைவெளி விட்டு 5 அல்லது 6 தடவை மருந்து தெளிக்கவேண்டும். சில இடங்களில் டி. டி. டீ. அல்லது கார்பரில் தெளிப்பதால் சிலந்திப் பூச்சி இலைகளில் தோன்றலாம். இதனைக் கட்டுப்படுத்த அதனுடன் நனையும் கந்தகத்தைச் சேர்த்துத் தெளிக்கவும். வேலிகளாகச் சீமைக்கருவேல் இல்லாமலிருந்தால் இப்பூச்சியைக் கட்டுப்படுத்த மிக உதவியாயிருக்கும். தவிரச் சுற்றியுள்ள இடங்களில் மிளகாய், பருத்தி, ஆமணக்கு போன்ற செடிகளிலிருந்தால் தவறாமல் மருந்தடித்து வருதல் மூலமும் இப்பேனைக் கட்டுப்படுத்தலாம்.

மருந்து தயாரிக்கும் முறை

டி.டி.டீ. 50% டபிள்யூ.பி.
டிரைதியான் 20% இ.சி.
மேலத்தியான் 50% இ.சி.
கார்பரில் 50% டபிள்யூ.பி.

மேற்கூறிய திறன் கிடைக்க ஒரு லிட்டர் தண்ணீரில் கலக்க வேண்டிய மருந்தின் அளவு முறையே 2 கிராம், 3 மி.லி., 2 மி.லி., 2 கிராம் ஆகும்.

### 4. பவானி சாகர் பகுதிக்கு ஏற்ற வீரிய கம்பு

வீரியக் கம்பு ரகங்கள் ஏறக்குறைய சாதாரண நாட்டுக் கம்பு ரகமான அரிசிக் கம்பின் பரப்பளவு முழுவதையும் ஆக்கிரமித்துக் கொண்டதற்கு, இவைகளின் எளியசாகுபடி முறைகளும், சிறந்த மகசூலும், அதிகப் பூச்சிகளும் நோய்களும் தாக்காத தன்மைகளுமே காரணமாகும்.

பவானிசாகர் பகுதிக்கு ஒரு சிறந்த வீரியக் கம்பு ரகத்தைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டும், அதற்கான கட்டுக்கோப்புச் சாகுபடி முறைகளை நிர்ணயிக்கும் பொருட்டும் எச். பி. 1, எச். பி. 3, எச். பி. 4 மற்றும் எக்ஸ் 3 ஆகிய ரகங்கள் பவானி சாகர் வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் பரிசோதிக்கப்பட்டது. இந்தச் சோதனைகள் மானாவாரியிலும், பாசனத்திலும் நடத்தப்பட்டன.

எச். பி. 3 கம்பு, மூன்று பாசனப் பட்டத்திலும், ஒரு எக்டேருக்கு மிக அதிகச்சராசரி விளைச்சலாக 2,570 கிலோ தானியம் கொடுத்தது. இந்த மூன்று பட்டத்திலும் நடத்திய 27 வகையான பல அளவு உரப் பரிசோதனைகளில் எக்டேருக்குச் சராசரியாகக் கீழ்க்கண்டவாறு மகசூல் கிடைத்துள்ளன.

எச்.பி. 3—2,570 கிலோ.
எச்.பி. 4—2,120 கிலோ.
எச்.பி. 1—2,032 கிலோ.
எக்ஸ். 3—1,232 கிலோ.

எச். பி. 3 கம்பு ரகத்தைப் பாசனப் பயிராகச் சாகுடி செய்ய எக்டேருக்கு 150 கிலோ தழைச் சத்து, 38 கிலோ மணிச்சத்து, 25 கிலோ சாம்பல் சத்து இடுவதே சிக்கனமான உர அளவு என்று நிர்ணயிக்கப்பட்டது. இந்த உர அளவில் எச். பி. 3 கம்பு ரகம் எக்டேருக்கு 3,235 கிலோ தானிய விளைச்சல் கொடுத்துள்ளது.

இரண்டாண்டுகளாக நடத்தப்பட்ட மானாவாரியப் பயிர்ச் சோதனையில் கிடைத்த பல்வேறு வீரிய ரகங்களின் விளைச்சல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| ரகம். | விளைச்சல் ஒரு எக்டேருக்கு |
|---|---|
| எச்.பி. 1 | 1,080 கிலோ |
| எச்.பி. 4 | 1,085 ,, |
| எச்.பி. 3 | 1,432 ,, |
| எக்ஸ். 3 | 900 ,, |

சிறந்த, சிக்கனமான, மானாவாரி வீரியக் கம்புப் பயிருக்கேற்ற உர அளவானது, ஒரு எக்டேருக்கு 50 கிலோ தழைச் சத்து, 25 கிலோ மணிச்சத்து, 5 கிலோ சாம்பல் சத்து எனக் கண்டறியப்பட்டுள்ளது. இந்த உர அளவில் எச். பி. 3 கம்பின் சராசரி விளைச்சல் எக்டேருக்கு 2,000 கிலோ தானியமாகும்.

எனவே, இந்தச் சோதனைகளிலிருந்து பவானி சாகர் பகுதியில் மானாவாரியாகவும், பாசனப் பயிராகவும் சாகுபடி செய்ய எச். பி. 3 கம்பு ரகமே தலைசிறந்த வீரியக் கம்பு ரகமெனத் தெளிவாகியுள்ளது.

தகவல் : தகவல் தொடர்பு நிலையம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர்-3.

# மருந்து தெளிக்க உதவும் புதிய பம்பு


'பசுமைப் புரட்சி' பட்டி தொட்டி எங்கும் பரவிவருவதால், பூச்சிகளின் தாக்குதலிலிருந்து பயிர்களைக் காப்பாற்ற வேண்டுமென்ற நோக்கத்துடன் பூச்சி மருந்துகள் தெளிக்கும் பழக்கம் முக்கியத்துவம் பெற்று வருகிறது. பொதுவாக விசைத் தெளிப்பான்கள் (Power sprayers) அல்லது கைகளால் இயக்கும் தெளிப்பான்கள் மூலமாகவே பூச்சி மருந்துகள் தெளிக்கப்படுகின்றன. விசைத் தெளிப்பான்களின் விலை அதிகமாக இருப்பதுடன், சாதாரண உழவர்கள் எளிதில் பயன்படுத்த முடியாத அளவுக்கு அமைந்துள்ளது.

கல்கத்தாவைச் சேர்ந்த திரு எஸ்.எஸ். காத்ராஅவர்கள் கால்களால் இயக்கும் பம்பு ( Foot operated pump ) ஒன்றைக் கண்டுபிடித்துள்ளார். இப் பம்பினை பூச்சி மருந்துக் கரைசல் நிரம்பிய கொள்கலனுடன் (container) இணைக்கலாம்.

இப்புதிய சாதனத்தில் 2 சிறு பம்புகள் அடங்கியுள்ளன. ஒவ்வொரு பம்பிலும் உருளைக்குள் செல்லும் 'பிஷ்டன்' உள்ளது. இப் பம்புகள் இதற்கென்றே சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட பூட்சுகளின் ( Specially designed shoes) குதி (Heels) பாகத்தில் பொருத்தமாக வைக்கப்பட்டுள்ளன. இப்பூட்சுகளை அணிந்துகொண்டு இப் பம்பினை இயக்குபவர் நடந்தால், அவருடைய எடையின் காரணமாக குதிகாலில் ஏற்படும் அழுத்தத்தால், பம்புகள் ஒன்று மாற்றி ஒன்றாக இயங்குகின்றன அவ்வாறு அவ்விரு பம்புகளும், மாறி மாறி இயங்கும்பொழுது பூச்சிமருந்துக் கரைசல் கொண்ட கொள்கலனுடன் இணைக்கப்பட்ட தெளிப்பான் மூலம் மருந்துக்கரைசல் தெளிக்கப்படுகிறது.

இந்த எளிய ஆனால் பயனுள்ள பம்பினை உருவாக்கிய திரு எஸ். எஸ். காத்ரா அவர்களுக்குப் புதிய கண்டு பிடிப்புகளை ஊக்குவிக்கும் வாரியம் 2,000 ரூபாய் பரிசு வழங்கியுள்ளது.

# அன்று சொன்ன அமுதமொழிகள்



மனிதனுடைய கை, மூளை ஆகியவற்றின் விரிந்த வளர்ச்சியே கருவிகள். கருவிகள் மூலமாக உங்கள் கைத்திறனையும் மூளைத்திறனையும் பெருக்காவிட்டால் உங்களுடைய ஆற்றலும் வளராமல் சுருங்கிக் கெடும்.

வாழ்வில் எதையும் வெறுத்துக் குறை காண்பவன் எவ்வளவுதான் அறிவுக்கூர்மை படைத்திருந்தாலும், செயல்படுவதிலே ஊக்கமும் ஆற்றலும் இன்மையால் எப்போதும் எதுவுமே செய்யான்

பழைய நாகரிகங்களிலே பல சீர்மைகள் உண்டு; என்றாலும் இன்றைய தேவைகளுக்கு அவை போதியவை அல்ல என்பது தெளிவாகிவிட்டது.

உண்மையான நம்பிக்கை ஒருவனுக்கு மட்டுமே இருக்குமாயின், அந்த நம்பிக்கையே மலைகளைக் கூட அசைத்துவிடும்.

நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபட்டால் தான் செல்வத்தை உண்டாக்கமுடியும் என்பதை நாம் எல்லாரும் நினைவில் கொள்ளவேண்டும்.

மக்களுக்கு எழுச்சியூட்ட வேண்டுமாயின் பெண்ணுக்கு விழிப்பூட்ட வேண்டும். பெண்மைச் சக்தி கிளர்த்தெழுந்தால் குடும்பம் கிளர்ந்தெழும்—கிராமமும் கிளர்ந்தெழும்—நாடும் கிளர்ந்தெழும்.

ஆற்ற வேண்டிய பணிகளைப் பற்றிப் போதிய அளவு சிந்திக்கப் பலர் முன் வருவதில்லை; அதற்குப் பதிலாக அறிவுரைகள் வழங்கவோ, குற்றங்காணவோ சிறிதும் தயங்குவதில்லை.

கொள்கைகளை வகுத்து விடுவது மட்டும் போதாது. அது முக்கியமானதுதான். ஆனால் போதிய வேகத்தோடு கொள்கைகளை நிறைவேற்றுவதுதான் அதைவிட முக்கியமானது.

ஆணைகள் பிறப்பித்துச் செல்வத்தை உண்டாக்கி விட முடியாது; உழைப்புத் தான் செல்வத்தைப் படைக்கும்.

நாம் எத்தனையோ மேம்பாட்டுத் திட்டங்களை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆனால், அந்தத் திட்டங்களுக்கெல்லாம் பெரியது சிறந்த ஆடவரையும் மகளிரையும் உருவாக்குவதுதான்.

பணம் பணம் என்றே மக்கள் பேசுகிறார்கள்; பணம் பயனுடையதுதான், ஐயமில்லை; ஆனால் முடிவான மதிப்பு மனிதனுக்குத்தான். பணத்துக்கு அன்று. வரலாற்றை உருவாக்கின வன்—மனித சமுதாய முன்னேற்றத்தை உருவாக்கின வன் மனிதன்தான். பணம் அன்று.

# வயிற்றில் வரும் புற்றுநோய்

## முன்னுரை

ஒற்றைச் சாண் வயிறு இல்லா விட்டால் உலகில் வாழ்வும் இல்லை; வளர்ச்சியு மில்லை; வளமும் தேவையில்லை.

பசிதான் உலகையே இயக்கு கிறது, என்ருன் ஓர் அறிஞன். 'பசி வந்தால் பத்தும் பறந்து போம்' என்பதும் உண்மை. பசியே வராவிட்டால், உடலில் இருந்து உயிரே பிரிந்து போகுமே.

ஆகவே வயிற்றைப் பேணு வீர்; வாழ்வைக் காணுவீர் என்று, வயிற்றின் இயல் பறிந்து பலரை வாழவைத்திடப் பணியாற்றும் டாக்டர் என். ரங்கபாஷ்யம் நமக்கு அறிவுரை தருகிருர்; புற்றுநோய் பற்றி ஞல் மரணமே பற்றிக் கொண்ட தாக மருண்டு நிற்கும் மக்கட்கு 'அஞ்சற்க' என்று அபயமும் தருகிருர்.

**பு**ற்று நோயைக் குணப்படுத் தவே முடியாது என்ற கருத்து எப்படியோ பொது மக்களி டையே நிலவி வருகிறது. குணப்படுத்த முடியாமற் போவ தற்குரிய காரணம், முற்றிய பிறகே நோயாளிகள் மருத் துவம் பெற வருவர்; அல் லது மருத்துவத்தைத் தாங்கிக் கொள்ளும் சக்தி கூட இல்லாத வர்களாக நோயாளிகள் இருப் பர். இந்த இரண்டு நிலைகளிலும் நோயைக் குணப்படுத்த முடிவ தில்லை. என்னுடைய மருத்து வப் பிரிவில் வயிற்றில் ஏற்படும் நோய்களுக்கே சிகிச்சையளித்து வருகிறேம். வயிற்றில் புற்று நோய் ஏற்பட்டு அல்லற்படும் நோயாளிகளை நாங்கள் பார்க் கிறேம். இரைப்பை, குடல் ஆகிய வற்றில் ஏற்படும் புற்றுநோயின் இயல்பு பற்றித் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

வாய் முதல் ஆசனவாய்வரை உணவுக் குழாய், இரைப்பை, குடல் ஆகியவை ஒரு தொடராக அமைந்துள்ளன; உணவு, வாயி லிருந்து உணவுக் குழாய் வழியாக இரைப்பையை அடைகிறது. உணவுக் குழாயின் மேற்பகுதி, நடுப்பகுதி அல்லது கீழ்ப்பகுதி யில் புற்று நோய் ஏற்படலாம்.

உணவுக் குழாயில் நோய் ஏற் பட்டால், ஆரம்பத்தில் உணவு செல்லுவதில் ஏதாவது ஒரு கோளாறு ஏற்படும். புண் அல் லது சதை வளர்ச்சி அதிகப்பட்டு விட்டால், உணவுக் குழாயின் உள் சுற்றளவு குறைந்து, உணவை விழுங்க முடியாதபடி ஆகும். சிலருக்கு உமிழ்நீரைக் கூட விழுங்க முடியாதபடி இருக் கும். இதில் வேதனை என்ன வென்றல், இந்த நோயாளி களுக்கு நல்ல பசியும், உண்ண வேண்டும் என்ற ஆசையும் இருக்கும். ஆனல், உணவை உட்கொள்ள முடியாது. உணவை விழுங்க முடியாமல் தவித்துச் சாப்பிட முடியாமல் மெலிந்து, எலும்பும், தோலு மாக ஆகிய நிலையில் எங்களிடம் வருகிருர்கள். இந்த நிலையில் அவர்களைச் சிகிச்சைக்குத் தக்க படி சக்தியூட்டி அறுவைச் சிகிச்சை அல்லது ஒளிக் கதிர் சிகிச்சை ஆகியவற்றுக்கு ஏற்ற படி உடலை ஆயத்தப்படுத் தவே நாளாகி விடுகிறது.

முன்னதாகவே வந்தால் நோயின் தன்மையை எளிய சோதனையின் மூலம் தெரிந்து கொள்ளலாம். உணவுக் குழா யின் உட்புறத்தில் உள்ள நோயின் அறிகுறிகளை ஒரு காட்சிக் கருவியின் மூலம் காண லாம். நிழற்படம் போல உள் ளுறுப்புகளைக் காட்டும் கருவி ஒன்றின் மூலம் காணலாம். தேவையானல் உடற் சதை யினைச் சோதித்து நோயின் இயல்பை அறிந்துகொள்ளலாம். 'பேரியம்' எனப்படும் மாவினைக் கரைத்து உட்கொள்ளச் செய்து கதிர்ப்படம் மூலம் நோய் ஏற் பட்டுள்ள பாகம் எது என்ப தைக் கண்டு கொள்ளலாம். நோயின் தொடக்கக் காலத்தி லேயே மருத்துவம் செய்யப்படு மானல், வெற்றி கிடைக்கிறது.

புகை பிடிப்பதால் இருதய நோயும், நுரையீரலில் புற்று நோயும் வருவதோடு, உணவுக் குழாயிலும் புற்று நோய் ஏற் படுகிறது.

அதற்கடுத்து, பொதுவாகப் புற்று நோய் வரும் இடம் இரைப்பைதான். நம் நாட்டில் நோயாளிகள் மிகவும் காலங் கடந்து வருவதால் நமது சிகிச்சையால் கிடைக்கும் பயன் பிற நாடுகளில் கிடைப்ப பதை விடக் குறைவாகிவிடுகி கிறது. பிற நாடுகளில் நோய் தாக்கத் தொடங்கியவுட னேயே சிகிச்சையும் செய்யத் தொடங்கி விடுவதால் வெற்றி கிடைக்கிறது.

இரைப்பையில் புற்றுநோய் ஏற்படும் ஒருவருக்கு ஆரம்பத்தில் சில அறி குறிகள் காணப்படும். பசியிருக்காது, உணவின் சுவைதெரியாது. சாப்பிட்ட பிறகு வாந்தி எடுக்கும். சாப்பிட்ட பிறகு வயிறு ஏதோ அதிகப்படியாக நிறைந்து விட்டது போன்ற ஓர் உணர்வு இருக்கும். அத்துடன் பலக் குறைவு, எடைக் குறைவு, இரத்த சோகை ஆகியவையும் ஏற்படும். சில வேளைகளில், நோயாளிக்கு இரத்த வாந்தி வரும். அல்லது வயிற்றின் மேல் பகுதியிலோ, முதுகிலோ வலி ஏற்படலாம். அல்லது வயிற்றில் ஒரு கனம் தெரியலாம்.

இந்த அடையாளங்களில் சில, குடற் புண் இருந்தாலும் ஏற் படலாம். இப்படிப்பட்ட அறி குறிகள் இருந்தால் உடனே மருத்துவப் பரிசோதனை செய் தாக வேண்டும். குறிப்பாக நாற் பது வயதுக்கு மேற்பட்ட ஒரு வருக்கு இந்த அறிகுறிகள் ஏற் பட்டால், அவர் அன்றுட வாழ் வில் நோயற்றவராகவே இருந் தாலும், அவரை டாக்டரின் சோதனைக்கு அனுப்பியாகவேண் டும்.


நம் நாட்டில் உள்ள நோயாளி கள் இப்படிப்பட்ட அறிகுறிகள் இருந்தால், ஏதோ வயிற்றுக் கோளாறு, உணவு செரிக்க வில்லை, பலவீனம் என்று மட்டு டுமே கருதி விடுகிருர்கள். ஏதா

வது சக்தியூட்டும் சத்து மருந்து வாங்கிச் சாப்பிட்டால் போதும் என்று கருதி விடுகிறார்கள். பரிசோதனை செய்துகொள்ள வேண்டும் என்று கூட அக்கறை காட்டுவதில்லை.

எவ்வளவு பகுதியை எந்த அளவுக்குப் பாதித்திருக்கிறது என்பதைப் பொறுத்து, அறுவை மருத்துவம் செய்வதுதான் வயிற்றில் ஏற்படும் புற்று நோய்க்குத் தக்க மருத்துவமாகும். இரைப்பையின் ஒரு பகுதியோ அல்லது முழுவதுமோ நீக்கப்படுகிறது. இச் சிகிச்சை ஆளைப் பாதிக்காது. மாறாக, உணவைச் செரிக்கச் செய்து, எடையையும் கூட்டுகிறது. தொடக்கத்திலேயே அறுவை செய்துகொண்டால் நல்ல பயனளிக்கிறது. நிணநீர் சுரப்பிகள் (Lymph glands) ஈரல், இரத்த நாளங்கள் ஆகியவற்றுக்குப் புற்று நோய் பரவிவிட்டால் முழுச் சிகிச்சை செய்ய முடியாது. வலியைக் குறைக்கலாம் அல்லது அந்த நோயாளி எவ்வளவு நாள் வாழ முடியுமோ அதுவரை நோயின் வேதனையைத் தாங்கக் கூடிய வேதனையாகக் குறைக்கலாம். அதற்குமேல் எதுவும் செய்ய முடியாது. இந்நோயால் பாதிக்கப்படுவோரில் பொதுவாக ஐம்பது துடையோர்தான் அதிகம் என்றாலும் 24 வயது முதல் 70 வயதுவரைநோயாளிகள் எங்களிடம் வந்துள்ளனர்.

அடுத்து; புற்று நோய் ஏற்படும் பகுதி பெருங் குடலாகும். சிறுகுடலின் முடிவிலிருந்துதொடங்கி, ஆசனவாய் வரை பெருங்குடல் அமைந்துள்ளது. வலது புறமாக உள்ள பெருங்குடலின் (ascending colon) தொடக்கப் பகுதியில் ஏற்படும் புற்று நோய் 'காலிஃப்ளவர்' போன்று இருக்கும். நோயாளியின் மலம் கருப்பாக இருக்கும். வயிற்றின் வலது புறத்தில் வலி இருக்கும். இரத்தம் வெளியாவதால்சோகை ஏற்படும். இதில் வேதனை என்ன வென்றால், இந்த நோயாளிகளுக்கு நோய் அதிகப்பட்ட பிறகுதான் அதற்குரிய அடையாளங்கள் வெளிப்படும். பெருங்குடலின்பின்பகுதியில் (descending colon) அல்லது மலம் தங்கும் பகுதியில் புற்றுநோய் ஏற்பட்டால், மலம் கழிப்பதில் தடை ஏற்படும். மலம்கழிக்க முடியாது. வேதனை அதிகப்படும். புற்று வளர்ந்தால் இரத்தம் கசியத் தொடங்கலாம். ஏற்பட்டுள்ள நோயின் இயல்புக்கேற்ப, மலச் சிக்கல், கருப்பாக மலம் கழிவது **ஆகியவை ஏற்படலாம்.**

பெருங்குடலின் இறுதிப் பகுதியில் புற்று நோய் தோன்றினால், வயிற்றுளைச்சல் நோய்க் குண்டானது போல் சில அடையாளங்கள் ஏற்பட்டு, இரத்தமும் சளியுமாக அடிக்கடி மலம் கழியும். இதை அமீபாவினால் வரும் வயிற்றளைச்சல் என்று தவறாகக் கருதி விடுவதுண்டு. இந் நோயாளிகளுக்கு மலம் கழித்த பிறகும் மலக்குடல் நிறைந்திருப்ப, போலவே ஓர் உணர்வு இருக்கும். இப்படிப் பட்ட அறிகுறிகள் உள்ள நோயாளிகள் உடனே மருத்துவரை அணுக வேண்டும். புற்று நோய் ஏற்பட்டு இரத்தம் வடிவதைச் சிலர், மூல நோயினால்தான் இரத்தம் வடிகிறது என்று கருதிக்




கொண்டு, நாள் கடந்து நோய் முற்றிய பிறகே வருகிறார்கள். சில வேளைகளில் வயிற்றுளைச்சலைக் கூட அமீபா வயிற்றுளைச்சல் என்றோ வயிற்றுக்கோளாறு என்றோ கருதி விடுகிறார்கள். வயிற்றுளைச்சலுக்கு நல்ல மருத்துவம் செய்து, மீண்டும், மீண்டும் அதே அடையாளங்கள் தெரிந்தால், முழுவதுமாக நோயாளியைச் சோதித்துப் பார்க்க வேண்டும். பெருங் குடலில் வரும் புற்றுநோயையும் தொடக்க நிலையிலேயே கண்டு கொண்டால் மற்ற நோயைப் போலவே குணமாக்க முடியும்.

பெருங்குடலில் புற்றுநோய் ஏற்பட்டால் புற்று வளர்ந்துள்ள பதிகுயை மட்டும் **அறுவை மூலம் நீக்கி விட்டு,** நோயாளியைக் காக்கலாம், பெருங்குடலின் இறுதிப் பகுதி, ஆசனவாய்ப் பகுதி ஆகியவற்றில் புற்றுநோய் இருந்தால், ஆசனவாய்ப் பகுதியை அறுவை செய்து நீக்கி விட்டு, நோயாளியின் வயிற்றிலேயே ஒரு பகுதியில் செயற்கையாக ஆசனவாய் அமைக்கப்படுகிறது.

நீங்கள் உங்கள் குடும்ப டாக்டரை அணுகி ஆலோசனை கேளுங்கள். அவர் அதைக் கவனித்து, நோயின் இயல் பறிந்து, தேவைப்பட்டால் அது சம்பந்தப்பட்ட நிபுணர்களிடம் உங்களை அனுப்பித் தக்க நேரத்தில் மருத்துவத்துக்கு உதவுவார்.

**இவற்றை மறக்காதீர்கள்** அல்லது அலட்சியப்படுத்தாதீர்கள்.

1. உணவை விழுங்கும் போது ஏற்படும் வேதனை.
2. சோகை, பசியின்மை, சீரணக் கோளாறு.
3. வாந்தியிலோ, மலத்திலோ, இரத்தம் வெளிப்படுதல்.
4. குடலில் ஏற்படும் மாற்றங்கள்.

(அ) மலக்குடல் வழியாகரத்தம், சளி போன்றவை மருத்துவத்திற்குப் பிறகும் தொடர்ந்து வெளிப்படுதல்.

(ஆ) திடீரென்று அல்லது நாட்பட ஏற்படும் மலச்சிக்கல்கள்.

(இ) மலம் கழிந்த பிறகும் மீண்டும் மலக்குடல் நிறைந்திருப்பது போன்ற உணர்வு; அல்லது அரைகுறையாக மலம் கழிவது.

(ஈ) வலியுடனோ அல்லது வலியில்லாமலோ வயிறு நிறைந்திருப்பது போன்ற உணர்வு.

(உ) வயிற்றில் ஏதோ ஒரு கட்டிபோல் தெரிவது.

(ஊ) காரணமில்லாமலே எடை குறைவு, பலகீனம் ஏற்படுவது.

(எ) அடிக்கடி காரணம் கண்டுபிடிக்க முடியாத காய்ச்சல்.

மேலே குறிப்பிடப் பட்டுள்ள அறிகுறிகள் மற்றச் சிறு வியாதிகளாலும் ஏற்படலாம். அல்லது புற்று நோயின் காரணத்தால் ஏற்பட்டுவிடலாம். ஆகவே, அவற்றைப் புறக்கணிக்காதீர்கள்.


குறளோவியம்

# முதல்வர் கலைஞர்

வெள்ளிமணல் படுக்கையிலே அந்தப் புள்ளிமயில் படுத்திருந்தாள். அந்தச் சயனத்துச்சாயலைத் தூர இருந்து காண்கிறான் அவன். அந்த அழகுமிழும் காட்சியால் உள்ளத்தில் வெல்லப்பாகு தடவிய அவன் கண்களை வாழ்த்துகிறான்; பாராட்டுகிறான்.

குளிர் மொண்டுவரும் தென்றலிலே கத கதப்பு உணர்ச்சி கலந்து வருவதாக அறிகிறான். சிறிதுநேரம் சிலையானான். உணர்வு வந்தபின் அசைந்தான். அப்போது அந்த நிலாப்பதுமையைக் காணவில்லை. அவள் போய் விட்டாள்.

அவன் நெஞ்சு துடித்துக் கனத்து விட்டது. 'ஐயோ! ஏன் இந்த அழகியைப் பார்த்தோம்! பார்க்காமலிருந்திருந்தால் இப்படிப் பதைக்க வேண்டிய அவசியமே வந்திருக்காதே' என்று புலம்பினான்.

வேதனையை உண்டாக்கிய தன் கண்களை வசைபொழிந்து கண்டித்தான். வீடு சென்றான். தூக்கம் வரவில்லை. அவளை நினைத்து நினைத்து அழுதான். அப்போது அவனுக்கு ஓர் ஆறுதல் ஏற்பட்டது.

"சும்மா இருந்த என்னைச் சுந்தரியின் நினைவால் வாடச்செய்யும் நோயை உண்டாக்கிய எ, கண்களே—நீங்கள் தூக்கம் வராமல் அழுகிறீர்களே...... அது எனக்கு மிக மகிழ்ச்சி. 'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்' தண்டனையை நன்றாக அனுபவியுங்கள்" என்று முணு முணுத்தான். அந்த முணுமுணுப்பை முத்தமிழ் வள்ளல் குறளார் எப்படி இரு வரிகளில் அமைத்திருக்கிறார்! படியுங்கள்.

"ஓஒ இனிதே யெமக்கிந்நோய் செய்தகண்
தாஅம் இதன்பட் டது".



# மாணவர் அரங்கம்

## செந்தமிழ்ச் செம்மல்கள்

வளங்கொஞ்சும் நன்செய்க்குப் பஞ்சமில்லாத் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள ஊர் பாபநாசம். இவ்வூருக்குக் கிழக்கே முக்கால் கல் தொலைவில் உள்ளது 'உத்தமதானபுரம்'.

இவ்வூரின் அருகே, கிழக்கே 'நல்லூர்' என்னும் ஊரும், வடமேற்கே திருப்பாலைத்துறை என்னும் ஊரும் உள்ளன. அவை இரண்டும் தேவாரப் பாடல் பெற்ற திருத்தலங்களாகும்.

உத்தமதானபுரத்தில் வேங்கட சுப்பையர் என்பவர் ஒருவர் வாழ்ந்திருந்தார். அவருடைய முழுப்பெயர் வேங்கட சுப்பிரமணிய அய்யர் என்பது. அவர் தமிழ்ப் புலமையும், இசைப் புலமையும் மிக்கவராகத் திகழ்ந்தார். அவருடைய மனைவிக்கு 1855-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் பத்தொன்பதாம் நாள் திங்கட்கிழமை ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அக் குழந்தைக்கு 'வேங்கடராமன்' என்று பெயர் வைக்கப்பட்டது.

சிறுவன் வேங்கடராமன், சடகோப ஐயங்கார் என்ற புலவரிடமும், குன்னம் சிதம்பரம் பிள்ளை என்பாரிடமும் கல்வி பயின்றான். வேங்கடராமனுக்குப் பதின்மூன்று வயதாகிய போதே, அதாவது 16-6-1868-ல் திருமணம் நடைபெற்றது.

வேங்கடராமன் 1869-ல் செங்கணம் விருத்தாசல ரெட்டியாரிடம் யாப்பருங்கலக் காரிகையைப் பாடம் கேட்டு வந்தார். 1862-ஆம் ஆண்டில் சந்திரசேகரக் கவிராசப் பண்டிதரால் முதன் முறையாகப் பதிப்பிக்கப் பெற்ற 'தனிப்பாடல் திரட்டு' என்ற நூலை அடிக்கடி ரெட்டியாரும் வேங்கடராமனும் படித்துப் பாராட்டி மகிழ்வது வழக்கம்.

விருத்தாசல ரெட்டியார்தான் வேங்கடராமனிடம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை என்பவரைப் பற்றி அடிக்கடி சொல்வார். "நீர் அவரிடம் போய்ப் படிப்பதுதான் சிறந்தது" என்று உரைப்பார்.

மாயூரத்திலிருந்த மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையைக் கண்டு, அவரிடத்தில் தம் மகன் வேங்கடராமனை வேங்கடசுப்பையர் ஒப்புவித்தார். வேங்கடராமனுடைய படிப்பு நிலையைச் சில கேள்விகள் கேட்டு ஆராய்ந்த மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, அவரைத் தம் மாணாக்கராக ஏற்றுக் கொண்டார்.

வேங்கடராமனுக்கு வேறு பெயர் ஏதேனும் உண்டா என்று மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் ஒருநாள் வினவினார். எங்கள் வீட்டில் 'சாமா' என்று என்னை அழைப்பார்கள் என்று வேங்கடராமன் மறுமொழி பகன்றார்.

சாமா என்பது சாமிநாதன் என்ற பெயரின் மாற்றுச் சொல்லே. ஆதலினால், வேங்கடராமனைச் சாமிநாதன் என்று அழைப்பதாக மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் கூறினார்கள்.



# உ.வே.சாமிநாதஅய்யர்

வேங்கடராமன் அன்று முதல் தன் பெயரைச் சாமிநாதன் என்றே சொல்லிக் கொண்டார்.

அந்த வேங்கடராமனே, பிற்காலத்தில் மகா மகோபாத்தியாய சாமிநாத அய்யர் என்றும், ''தாட்சிணாத்திய கலாநிதி சாமிநாதய்யர்'' என்றும் ''தமிழ்த்தாத்தா'' என்றும் தமிழ் கூறும் நல்லுலகு பாராட்டும் பெரும்பேற்றைப் பெற்றார்.

மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களிடம் சாமிநாத அய்யர், குடந்தை திரிபந்தாதி, பழமலைத் திரிபந்தாதி, திருப்புகலூர் திரிபந்தாதி, மறைசையந்தாதி, தில்லையமக அந்தாதி, துறைசையமக அந்தாதி, திருவரங்கத்து யமக அந்தாதி, மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ், செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழ், அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ், சீர்காழிக் கோவை முதலிய நூல்களைப் பாடம் கேட்டார்.

சாமிநாத அய்யரின் ஆசான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் 31—1—1876-ல் இயற்கை எய்தினார். மனமுடைந்து போன சாமிநாத அய்யரைத் திருவாவடுதுறை குருமூர்த்தியாக இருந்த மேலகரம் சுப்பிரமணிய தேசிகர், திருமடத்திலேயே இருக்கும்படி கேட்டுக் கொண்டார்.

தேசிகரிடம் சைவ சித்தாந்த சாத்திரங்கள், நன்னூல், விருத்தியுரை, யாப்பருங்கலக்காரிகை, தண்டியலங்காரம், திருக்குறள் பரிமேலழகர் உரைகளைச் சாமிநாத அய்யர் பாடம் கேட்டார்.

கும்பகோணம் அரசினர் கலைக் கல்லூரியின் பேராசிரியராக விளங்கிய தியாகராசச் செட்டியார், திருவாவடுதுறைக்கு வந்திருந்த பொழுது ஆதீனத் தலைவரிடம் சாமிநாத அய்யரைக் கும்பகோணம் கல்லூரிக்குத் தமிழ்ப் பேராசிரியராக அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொண்டார். தேசிகர் முதலில் மறுத்தாலும் பின்னர் அனுப்பி வைத்தார்.

தியாகராசச் செட்டியாரின் பரிந்துரையால் குடந்தைக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகச் சாமிநாத அய்யர் பணியாற்றத் தொடங்கினார். அப்பொழுதுதான் குடந்தையின் முன்சீப்பாகப் பணியாற்றி வந்த சேலம் இராமசாமி முதலியார் அவர்களின் நட்பு இவருக்குக் கிடைத்தது. சங்க இலக்கியங்களின் பிரதிகளை அவர் கொடுத்ததால்தான் சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, பத்துப்பாட்டு, புறநானூறு முதலிய பண்டைய இலக்கியங்களை அரும்பாடுபட்டு ஆராய்ந்து வெளிப்படுத்திய பெரும்பேறு சாமிநாதய்யருக்குக் கிடைத்தது.

1880-ஆம் ஆண்டிலிருந்து 1903-ஆம் ஆண்டுவரை குடந்தைக் கல்லூரியில் பணியாற்றிய இவர் 1903-ஆம் ஆண்டு சென்னை மாநிலக் கல்லூரிக்கு மாற்றப் பெற்றார். இங்கு 1919-ஆம் ஆண்டு வரை பதினாறு ஆண்டுகள் பணியாற்றினார்.

1924-ஆம் ஆண்டில் இராஜா அண்ணாமலைச் செட்டியார், சிதம்பரத்தில் கல்லூரிகள் ஏற்படுத்திய போது, தமிழ்க் கல்லூரிக்கு இவர் முதல்வராகப் பொறுப்பேற்றார்.

1932-ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக் கழகத்தார், தமிழ்ப் புலவர்களுக்கு, அதுவரை வழங்கிடாத ''டாக்டர்'' பட்டத்தை இவருக்கு வழங்கினார்கள்.


இரண்டாவது உலகப் பெரும் போர் நடைபெற்ற பொழுது சென்னை மாநகரில் பகைவர்களின் குண்டுகள் விழும் என்று அஞ்சிச் சென்னையில் வாழ்ந்த மக்கள் வேற்றூர்களை நாடிச் சென்றனர். உ. வே. சாமிநாத அய்யரும் தம் குடும்பத்தாருடன் திருக்கழுக்குன்றம் சென்று தங்கினார். 1942-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் இருபத்தெட்டாம் நாள் உ. வே. சாமிநாத அய்யர் இயற்கை எய்தினார்.

சாமிநாத அய்யர் பதிப்பித்த நூல்களைக் காவியங்கள், சங்க நூல்கள், இலக்கண நூல்கள், பிரபந்தங்கள் எனப் பலவகைப் படுத்தலாம்.

இன்று தமிழ்ச் சமுதாயம் சங்க இலக்கியங்களைப் படிக்க முடிகின்றது என்றால் அதற்குப் பெரும் காரணமாக விளங்குபவர் சாமிநாத அய்யர் அவர்கள். சங்க இலக்கியங்கள் பெரும்பாலானவை இவராலேயே அச்சிடப்பட்டன. பல உரைநடை நூல்களை இவர் ஆக்கி வெளியிட்டார். தமிழகத்திற்கே புது மாதிரியாக முதன் முதலில் ''என் சரித்திரம்'' என்ற நூலை இவர் எழுதினார் என்பது குறிப்பிடத்தக்கது.

—நம்பியின் தம்பி

# துப்பாக்கிக் குண்டுகளாலும் துளைக்க முடியாத தொப்பி



பட்டாளத்து வீரர்களும் காவற்படையினரும் இனிமேல் எஃகினால் செய்யப்பட்ட பாரமான தொப்பியைச் சுமக்க வேண்டியதில்லை!

துப்பாக்கிக் குண்டுகளாலும் துளைக்கப்பட முடியாததும், கண்ணாடி நார் இழைகளை உள்ளீடாகச் செலுத்தி வலுவூட்டப் பெற்றதும், பிளாஸ்டிக்கினால் செய்யப்பட்டதுமான இலேசான தொப்பியை அணிந்து, இனிமேல் பட்டாளத்து வீரர்களும், காவற்படையினரும் பாதுகாப்புடன் பணியாற்ற முடியும்.

இப்புதிய தொப்பியைக் கோயம்புத்தூரில் உள்ள பிரகா தொழிற்சாலையில் (Praga Industries Pvt. Ltd.,) பணியாற்றும் திரு ஜோசப் நிஜெட்லி (Joseph Nejedly) அவர்கள் கண்டு பிடித்துள்ளார். அவருக்குப் பட்டாளத்து வீரர்களும், காவற்படையினரும், நன்றிசெலுத்தக் கடமைப்பட்டுள்ளார்கள்.

பிளாஸ்டிக்கினால் செய்யப்பட்ட இத்தொப்பி மிகவும் இலேசாக இருப்பதால், தற்பொழுது பழக்கத்திலுள்ள எஃகுத் தொப்பிகளுக்கு மாற்றுப் பொருளாக அமைவதுடன், துப்பாக்கிக் குண்டுகளாலும் துளைக்கப்பட முடியாத எஃகுத் தொப்பியின் எல்லாப் பயன்களையும் கொண்டுள்ளது. கண்ணாடி நார் இழைகளை உள்ளீடாகச்செலுத்தி வலுவூட்டப் பெற்ற பிளாஸ்டிக், எளிதில் வெப்பத்தைக் கடத்தாதாதலின், இப்புதிய தொப்பி வெப்பத்தைத் தடுக்கச் செய்யும் குணத்தைப் பெற்றிருப்பதுடன், குளிர் மற்றும் அதிக வெப்பம் ஆகிய இரண்டிற்கும் எதிராகப் பாதுகாப்பு அளிக்கிறது.

முதலில், தேர்ந்தெடுத்த கன பரிமாணமுள்ள கண்ணாடி நார் இழைகளைப் பின்னி, அத்துடன் பாலிஸ்டெர் (polyster), ரெசின் (Resin) ஆகியவைகளைக் கலந்து, பிறகு ஒரு நீரழுத்த அச்சில் (Hydraulic press) வைத்து மிகுந்த அழுத்தத்திற்கு உட்படுத்தப்படுகிறது. சரியான வெப்பக் கட்டுப்பாடு, கண்ணாடி, ரெசின் ஆகியவைகளின் சரியான கலவை விகிதம், அச்சில் அழுத்தும்போது போதுமான அழுத்தம் ஏற்படுத்தல், சரியான வகைக் கண்ணாடி நார் இழைகளைக் கொண்டு வலுவூட்டுதல் ஆகியவற்றினால் இப்புதிய தொப்பிக்கு உடையாத தன்மை ஏற்படுகிறது.

துப்பாக்கிக் குண்டுகள் பாயும்போது அதனால் ஏற்படும் பயங்கர அழிவுச் சக்தி வெளிநோக்கிச் சிதறிடும் வண்ணம் இப் பிளாஸ்டிக் தொப்பி அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் எஃகுத் தொப்பியில் குண்டு பாயும்போது, அதனால் ஏற்படும் பயங்கரச் சக்தி அந்த இடத்தில் உள்ள உலோகத்தை அழுத்தி அல்லது பெயர்த்து விடுவதால், கவலைக்கிடமான காயங்களை ஏற்படுத்துகிறது.

படையில் டாங்குகளைச் செலுத்துவோரும் (Tank-crew) பாராசூட்டில் இறங்குவோரும் தலையில் அணியக் கூடிய கியர் (Head gears) செய்வதற்கும், இப்புதிய தொப்பியைச் செய்யப் பயன்படுத்தப்பட்டுள்ள தொழில் நுட்பத்தையே பயன்படுத்தலாம்.

இப்புதிய கண்டுபிடிப்பினால், கணிசமான அளவு அந்நியச் செலாவணியை மீதப்படுத்த முடியும்.

புதிய கண்டு பிடிப்புகளை ஊக்குவிக்கும் வாரியம் (Inventions Promotion Board) துப்பாக்கிக் குண்டுகளாலும் துளைக்கப்பட முடியாத தொப்பியை உருவாக்கியதற்காகத் திரு ஜோசப் நிஜெட்லி அவர்களுக்கு ரூபாய் 5,000 பரிசு வழங்கியுள்ளதுடன், இறக்குமதி செய்யப்பட்டு வரும் துப்பாக்கிக்குண்டுகள் துளைக்காத தொப்பிகளுக்குச் சிறப்பான மாற்றுப் பொருள் (Substitute) தயாரித்தமைக்காகப் பிரகா தொழிற்சாலை நிறுவனத்திற்கு வெண்கலக் கேடயமும் அளித்துள்ளது.

—ஆர். எம்.



# மிளகாய் மகசூல் பெருக 'பிளானோபிக்ஸ்' தெளியுங்கள்!

ஒரு ஏக்கர் மிளகாய்ச் செடிகளுக்கு ரூபாய் 18 செலவிட்டு, 'பிளானோபிக்ஸ்' ( Planofix ) மருந்து தெளித்தால், ரூபாய் 414 அதிக இலாபம் கிடைக்கும் என்பது கோவில்பட்டியிலுள்ள மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் மேற்கொள்ளப் பெற்ற பரிசோதனைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

பொதுவாக மிளகாய்ச் செடிகளில் தோன்றும் பூக்களில் பெரும் பகுதி உதிர்ந்துவிடுகின்றன. அத்துடன் பூக்களிலிருந்து தோன்றும் மிளகாய்ப் பிஞ்சுகளில் ஒருபகுதியும்உதிர்ந்துவிடுகின்றன. இவ்வாறு பூக்களாகவும், பிஞ்சுகளாகவும், உதிர்ந்தது போக, எஞ்சி இருக்கும் பிஞ்சுகளே பருமன் ஆகி, முதிர்ந்து பழங்கள் ஆகின்றன. கோவில்பட்டி நிலைமையில் மிளகாய்ச் செடிகளில் பூக்கும் பூக்களில் 11 சதம் அளவில் இருந்து மட்டுமே காய்கள் தோன்றுகின்றன என்று கணக்கிடப்பட்டுள்ளது.

'பிளானோபிக்ஸ்' (Alpha Naphthelene acetic acid) என்னும் மருந்தை மிளகாய்ச் செடிகளுக்குத் தெளிப்பதால், மிளகாய்ப் பூக்களும், பிஞ்சுகளும் உதிர்வதைத் தடுத்து, மிளகாய் மகசூலை அதிகப்படுத்த முடியும் என்ற ஆராய்ச்சி முடிவைக் கண்டறிய, 1971-72-ஆம் ஆண்டு முக்கியப் பட்டத்தில், கோவில்பட்டி மண்டல ஆராய்ச்சி நிலையத்தில், அனைத்து இந்திய ஒருங்கிணைந்த காய்கறி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், பரிசோதனை மேற்கொள்ளப் பட்டது.

ஒரே அளவுள்ள இவ்விரு பரிசோதனைத் தளைகளில் 5-11-72 அன்று 'கே. 1' ரக மிளகாய்க் கன்றுகள் நடப்பெற்றன. ஒரு தளையில் 'பிளானோபிக்ஸ்' மருந்து தெளிக்கப்பட்டது. மற்றொரு தளையில் 'பிளானோபிக்ஸ்' மருந்து தெளிக்காமல் தடுப்புத் தளையாக ( Control Plat ) அமைக்கப்பட்டது.

மிளகாய் நடவு செய்த65-ஆம் நாள் 0.5 மில்லி லிட்டர் 'பிளானோபிக்ஸ்' மருந்தை 4.5லிட்டர் தண்ணீரில் கலந்து முதல் முறையாகத் தெளிக்கப்பட்டது. அதன் பிறகு 30 நாட்கள் கழித்து— அதாவது மிளகாய் நடவு செய்த 95-ஆம் நாளில், 1 மில்லி லிட்டர் 'பிளானோபிக்ஸ்' மருந்தை 4.5 லிட்டர் தண்ணீரில் கலந்து இரண்டாம் முறையாகத் தெளிக்கப்பட்டது.

'பிளானோபிக்ஸ்' மருந்துக் கலவை மிளகாய்ச் செடிகளில் நன்கு ஒட்டிக் கொள்ள வேண்டுமென்பதற்காக 4.5 லிட்டர் மருந்துக் கலவைக்கு 1 சி. சி. வீதம் 'டீபால்' (Teapal) கலக்கப்பட்டது.

இருமுறை 'பிளானோபிக்ஸ்' மருந்து தெளித்த தளையில் கிடைத்த மகசூலை (மிளகாய் வற்றல்), 'பிளானோபிக்ஸ்' மருந்து தெளிக்காத தடுப்புத் தளையில் கிடைத்த மகசூலுடன் ஒப்பிட்டுப் பார்த்ததில் பின் கண்ட புள்ளி விவரங்கள் கிடைத்துள்ளன.

'பிளானோபிக்ஸ்' மருந்து தெளித்ததால் எக்டேருக்கு கிடைத்த மிளகாய் மகசூல் 1,537 கிலோ.

'பிளானோபிக்ஸ்' மருந்து தெளிக்காததால் எக்டேருக்கு கிடைத்த மிளகாய் மகசூல் 1,106 கிலோ.

'பிளானோபிக்ஸ்' மருந்து தெளித்ததால் எக்டேருக்கு கிடைத்த அதிக மகசூல் 431 கிலோ.

100 கிலோ மிளகாய் வற்றல் ரூபாய் 250 வீதம் அதிகமாகக் கிடைத்த 431 கிலோ மிளகாய் வற்றலின் மதிப்பு ரூபாய் 1,080.

எக்டேருக்கு 2 முறை 'பிளானோபிக்ஸ்' தெளிக்க உபயோகித்த 250 மில்லி லிட்டர் 'பிளானோபிக்ஸ்' மருந்தின் விலை, தெளிப்பதற்கான ஆட்கூலி ஆகியவற்றிற்கான செலவு ரூபாய் 45.

2 முறை 'பிளானோபிக்ஸ்' தெளித்ததால் எக்டேருக்கு கிடைத்த • அதிக இலாபம் ரூபாய் 1,035.

இதை ஏக்கருக்குக் கணக்கிட்டால், 18 ரூபாய்செலவு செய்து 2 முறை 'பிளானோபிக்ஸ்' தெளித்தால், 414 ரூபாய் அதிக இலாபம் கிடைக்கும் என்பது புலனாகும்.

'பிளானோபிக்ஸ்' தெளிக்கும் பொழுது கீழ்க்கண்ட முன்னெச்சரிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும்.

'பிளானோபிக்ஸ்' மருந்தைத் தண்ணீருடன் கலக்கக் கிணற்றுத் தண்ணீரைப் பயன்படுத்தலாம். கிணற்றுத் தண்ணீர் உவராகவோ அல்லது உப்பாகவோஇருந்தால் 'பிளானோபிக்ஸ்' மருந்துடன் கலக்கக் கூடாது. அப்படிக் கலந்தால் மகசூல் அதிகமாகாது. ஆற்று நீர், தேக்கி வைக்கப்பட்டுள்ள மழை நீர் ஆகியவை 'பிளானோபிக்ஸ்' கலக்க மிகவும் சிறந்ததாகும்.

'பிளானோபிக்ஸ்' மருந்துக் கலவை மிளகாய்ச் செடி இலைகளின் பரப்பில் நன்கு ஒட்டிக் கொண்டு, நீண்ட நாட்களுக்கு வீரியத்துடன் இருந்து பயனளிக்க 4. 5 லீட்டர் மருந்துக் கலவைக்கு 1 சி. சி. 'டீபால்' வீதம் அல்லது மென்மையான சோப்பு ( Soft Soap ) போன்ற ஏதேனும் ஒரு ஒட்டிக்கொள்ளஉதவும் பொருளை (Wetting agent or adhesive) உபயோகிக்கவேண்டும்.

மிளகாய்ச் செடிகள் மழையில் நனைந்தால், எவ்வாறிருக்குமோ அதுபோல் 'பிளானோபிக்ஸ்' தெளிக்கப்பட்ட மிளகாய் செடிகளும் நன்கு நனைந்து காணப்படவேண்டும். இவ்வாறு செய்ய மிளகாய்ச் செடி இலைகளின் மேல், அடிப் பரப்புகள் முழுவதும் நன்கு நனையுமாறு, 'பிளானோபிக்ஸ்' மருந்துக் கலவையைத் தெளிக்க வேண்டும்.

'பிளானோபிக்ஸ்' மருந்தை மிளகாய்ச் செடிகளுக்கு 2 முறை தெளித்துக் குறைந்த செலவில் நிறைந்த மகசூல் பெறும் படியும், அதிக இலாபம் பெற்று வாழ்வை வளப்படுத்திக் கொள்ளும் படியும் கேட்டுக்கொள்கின்றோம்.

—ஆர். எம்.




சைதியான்

## கால்நடைகளுக்கும், கோழி முதலிய பண்ணைப் பறவைகளுக்கும் புழு பூச்சிகளிலிருந்து முழுப் பாதுகாப்பு அளிப்பதற்கு

மிருகங்கள் புழு பூச்சிகளால் பாதிக்கப்பட்டிருப்பதன் விளைவு— இலாபமின்மை.

ஆனால் இப்பொழுது கால்நடைகளுக்கும், பண்ணைப் பறவைகளுக்கும் புழு பூச்சிகளற்ற ஆரோக்கியமான வாழ்வளிக்க சைதியான் இருக்கிறது.

மிகவும் அபாயக்குறைவான இந்த பூச்சிக் கொல்லி கெடுதலற்று கையாளக் கூடியது. உபயோகிக்கச் சிக்கனமானது.

மிருகங்களின் மேலும் அவற்றைச் சுற்றியும் சைதியான் தூவுவதன் மூலம், அவைகளுக்கு ஈடுசெய்ய முடியாத கெடுதல் விளைவதைத் தடுக்கலாம்.

சைதியான் [illegible]

சைதியான்

## 90 வெவ்வேறு வகையான பயிர்களைத் தாக்கும் 100 வகை புழுபூச்சிகளைப் பயனுள்ள முறையில் கட்டுப்படுத்துகிறது

புழு பூச்சிகளால் உங்கள் தானியப் பயிர்கள் நாசமாகிவிடக்கூடும். உங்கள் இலாபமும் கூட.

இப்பொழுது உங்கள் பயிர்களை புழு பூச்சிகளினின்று சக்திவாய்ந்த முறையில் பாதுகாக்க சைதியான் உபயோகியுங்கள்.

அபாயக் குறைவான, சக்திமிக்க பூச்சிக் கொல்லியான சைதியான் பட்டதும் பூச்சிகள் நசித்துவிடுகின்றன. எனவே, இது பயிர்களுக்கு சொல்ல முடியாத சேதம் ஏற்படுவதைத் தவிர்க்கிறது.

உபயோகிக்கக் கெடுதலற்ற, திறன் மிக்க, சிக்கனமான சைதியான் அறுவடைக்கு 1-3 நாட்களுக்கு முன்பு உபயோகிக்கப்படலாம். இதனால் முதிர்ச்சியடைந்த பயிர்களுக்கு ஒரு விதமான கெடுதலும் விளைவதில்லை.

சைதியான் [illegible]

சைதியான்

## 5 வெவ்வேறு வகையான 50 காய்கறிப் பயிர்களையும், பழப் பயிர்களையும் தாக்கும் 75க்கு மேற்பட்ட புழு பூச்சிகளைக் கட்டுப்படுத்துகிறது

உங்கள் காய்கறி மற்றும் பழப் பயிர்களுக்கு புழு பூச்சிகளால் ஆபத்து விளையும்போது, சேதத்தைத் தவிர்க்க ஒரே ஒரு வழிதான் உள்ளது அதுவே சைதியான்.

கையாளுவதற்கு அபாயக் குறைவான, சக்திமிக்க பூச்சிக் கொல்லியான சைதியான் பட்டதும் புழு பூச்சிகள் மடிந்துவிடுகின்றன. சொல்ல முடியாத சேதம் தவிர்க்கப்படுகிறது.

பயிர்களின் மீது கெடுதலான விளைவுகள் எதுவுமின்றி, அறுவடைக்கு 1-3 நாட்களுக்கு முன்பு சைதியான் உபயோகிக்கலாம்

சைதியான் [illegible]






# சைதியான்

பூச்சிகொல்லி

விவசாயப் பிரிவு,
சயனமைட் இந்தியா லிமிடெட்
த.பெட்டி எண் 9109, பம்பாய்-25.

CYANAMID

உலகெங்கும் விவசாயத்திற்கு பணிபுரிகிறது

# மாவட்டங்களிலிருந்து....

### திருச்சிக்கு முதலிடம் !

கடந்த செப்டம்பர் மாதம் மத்தியிலிருந்து அக்டோபர் மாதம் முதல் மூன்று வாரம் முடிய.த் தமிழ் நாட்டில் 56,008 குடும்ப நலத்திட்ட அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன. இந்த வகையில் மாவட்டங்களுக்கிடையே திருச்சி முதலிடம் வகிக்கிறது.

திருச்சி மாவட்டத்தில் 14,508 பேர்களுக்குக் குடும்பநல அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டிருக்கிறது. மற்ற மாவட்டங்கள் விவரம்: கோவை 11,000 செங்கற்பட்டு 10,920, நெல்லை 9,812, வட ஆர்க்காடு 5,047, இராமநாதபுரம் 4,721.

இந்தச் சிகிச்சை பெறுவோர் ஒவ்வொருவருக்கும் 60 ரூபாய், தொகை ஊக்குவிப்பாக வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள மக்களில் நூற்றுக்கு ஒருவருக்கு நிலையான அறுவைச் சிகிச்சை அளிக்கும் நோக்குடன் இந்த இயக்கம் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

* * *

### மதுரை மாவட்டத்தில்....

தமிழ்நாடு அரசு மதுரை மாவட்டத்திலுள்ள ஊராட்சி ஒன்றியங்களின் சார்பில் ஆரம்ப உயர்நிலைப் பள்ளிகளைக் கட்டுவதற்கும், வகுப்பறைகள் கட்டுவதற்கும் ரூ. 13.7 இலட்சத்தினை மானியமாக வழங்கி இருக்கிறது.

கழிவு நீர்ப் பண்ணை ஒன்றினை ஏற்படுத்த மதுரை மாநகராட்சிக்கு அரசு சத்தியமங்கலத்தில் 200 ஏக்கர் நிலத்தினை அளிக்க முன் வந்துள்ளது. பிற்பட்ட, மிகவும் பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட கல்லூரி, பள்ளி மாணவர் கல்வி உதவித் தொகையாக மதுரை மாவட்டத்தில் 65,765 மாணவர்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ. 63 இலட்சத்து 2 ஆயிரத்தில் 4,70,683 ரூபாய் 39,696 மாணவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. மதுரை மாவட்டத்தில் நைலான் தொழிற்சாலையைக் கப்பலூரில் ஏற்படுத்தவும் அரசு உத்தேசித்துள்ளது.

ரெட்டியார் சத்திரம், ஆத்தூர், திண்டுக்கல், சாணார்பட்டி பகுதிகளில் 50 புதுக்கிணறுகளுக்கும், 50 கிணறுகளை ஆழப்படுத்துவதற்கும், 100 பம்பு செட்டுகள் அமைக்கவும், வேடசந்தூர், பாளையம், பகுதிகளில் 100 புதுக் கிணறுகளுக்கும், 100 கிணறுகளை ஆழப்படுத்துவதற்கும், 200 பம்புசெட்டுகள் அமைக்கவும், நத்தம் பகுதியில் 50 கிணறுகளை ஆழப்படுத்துவதற்கும், 100 பம்பு செட்டுகள் அமைக்கவும் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

வேடசந்தூரில் மரகதப்படிவங்கள் தென்படுவது குறித்து ஆராயப்பட்டு வருகிறது.

* * *

### மேலூரில் மேலான பணி !

மதுரை மாவட்டம், மேலூர் ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் தீவிர வேளாண்மைத் திட்டத்தின் கீழ் 7,000 கிலோ நெல் விதைகள், 20 உழவுக் கருவிகள் உழவர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. 1,200 ஏக்கர்கள் பூச்சிகளிலிருந்து பாதுகாக்கப்பட்டு உள்ளன.

மேலும் இணைப்புச் சாலைத் திட்டமும் சிறப்பாக நடந்து வருகின்றது. இரண்டு சீரணி அறிவகங்கள் சீரிய தொண்டாற்றி வருகின்றன. கிராமப்புற வேலையும் துரிதமாக நடந்து வருகின்றது.

* * *

### இளைஞர் அணி பெற்ற வெற்றி !

கோவை மாவட்டம், பவானி சாகர் நகரியத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 64-வது பிறந்த நாள் விழா சிறப்பாக நடந்தது. விழாவினையொட்டி, ''கபடி விளையாட்டுப் போட்டி'' நடந்தது. இதில் பல ஊர்களின் சார்பில் 18 அணியினர் கலந்து கொண்டனர். போட்டியில் இளைஞர் அணிப் பயிற்சி நிலையத்தைச் சார்ந்த 'பயிற்சியாளர்கள் அணி' முதல் பரிசைப் பெற்று வெற்றி பெற்றது. வெற்றி பெற்றவர்களுக்கு ''அறிஞர் அண்ணா சுழற் கோப்பை'' வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது.

* * *

### கோவையில் குடும்ப நலம் !

கோவை மாவட்டக் குடும்ப நலக் கழகம் நடத்தி வரும் தீவிரக் குடும்ப நலத் திட்ட இயக்கத்தின் விளைவாக, அந்த மாவட்டத்தில் 11,000-க்கு மேற்பட்ட ஆண்களுக்குக் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டிருக்கிறது. செப்டம்பர் மாத மத்தியில் துவக்கப்பட்ட இந்த இயக்கம் அக்டோபர் இறுதிவரை நடந்தது.


கோவை மாவட்டத்திலுள்ள 41 வட்டாரங்களிலும் சுகாதார விடுதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்கள், இந்த விடுதிகளில் ஆறு நாட்கள் தங்கி ஓய்வு பெற்றனர். இந்த நாட்களில் ஏற்படக்கூடிய ஊதிய இழப்பை ஈடு செய்வதற்காக இவர்கள் ஒவ்வொருவருக்கும் 60 ரூபாய் கொடுக்கப்பட்டுள்ளது.

கோவை, தமிழ் நாட்டிலுள்ள மிகப் பெரிய மாவட்டமாகும். நிரந்தரக் கருத்தடை முறைகளை ஏற்றுக் கொள்ளும் தகுதி வாய்ந்த 3.79 இலட்சம் தம்பதிகள் இம்மாவட்டத்தில் வசிக்கின்றனர். இவர்களுள், 1972 செப்டம்பர் மாதம் வரையில் மொத்தம் ஒரு இலட்சம் பேர் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்து கொண்டுள்ளனர்.

இப்போது நடந்த தீவிர இயக்கத்தின்போது சுமார் 18,000 ஆண்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

**பாயரின் தரமான**
**பூச்சி மருந்துகள்**

BAYER



உபயோகிப்பதன்

மூலம் பூச்சி பூஞ்சாண உபாதை-
களினாலான நஷ்டத்தை
தவிர்க்கிறார்கள்

# நெல் விளைவிக்கும் விவசாயிகள்.

நெல்லில் தோன்றும்
பலவகைப் பூச்சிகளை
சிறந்த வகையில்
மலிவான வழியில்
கட்டுப் படுத்த

## ஃபாலிடால்.




## ஹினோஸானை

உபயோகிப்பதனால்
நெல் குலை நோய்
மூலம் பயிர்
நாசமில்லை.




இலை சுருட்டும் புழுக்-
களையும் இதர
பூச்சியினங்களையும்
கட்டுப்படுத்தி சிறந்த
பலனளிக்க வல்லது

## மெட்டாஸிட் காம்பி தெளித்தல்




ஒவ்வொரு அடைப்புகளுடன்
இணைக்கப்பட்டிருக்கும்
உபயோகிக்கும் முறை-
களின்படியே ஃபாலிடால்
ஹினோஸான் மெட்டாஸிட்
காம்பி பூச்சி மருந்துகளையே
உபயோகியுங்கள்.

**நெல் பயிரின் பூச்சி பூசண
தொல்லைகளிலிருந்து சிறந்த
முறையில் பாதுகாக்க நம்பிக்-
கைக்குகந்த ஃபாலிடால்
ஹினோஸான் மெட்டாஸிட் காம்பி
தெளிக்கவும்.**

5-A/162 (760)

# கேளுங்கள் கொடுக்கப்படும்

### அவரை, புடலைச் செடிகளுக்கு யூரியா போடலாமா ?

விட்டுத் தோட்டத்தில், பயிரிடும் அவரை, புடலைச் செடிகளுக்கு யூரியாவைப் போட்டால் பட்டுப் போய்விடுகிறது. இது எதனால் ? யூரியாவைப் போடலாமா ? எவ்வளவு போடவேண்டும் ? எந்த வகையில் போட்டால் பயிர் நன்கு வளர்ந்து வரும் ? இல்லாவிடில் எங்கள் உறுப்பினர் ஒருவர் போட்ட விதந்தான் சரியில்லையா ? என்று பதில் கூறுமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

—எஸ். பால்துரை,
உழவர் விவாதக் குழு அமைப்பாளர், திட்டங்குளம் (தெற்கு), நெல்லை மாவட்டம்.

யூரியாவில் 44·0 சதம் தழைச்சத்து உள்ளதால் வீரியம் மிகுந்து காணப்படுகிறது. பொதுவாக அவரை, புடலை, பரங்கி, பூசனி போன்ற கொடி வகைக் காய்கறி பயிர்களுக்கு யூரியாவை உரமாக இடுமாறு பரிந்துரைக்கப்படுவதில்லை.

புடலை, பரங்கி, பூசனி ஆகியவற்றிற்கு ஒரு குழிக்கு அடியுரமாக 12 கிலோ (1 கூடை) தொழு உரமும், 100 கிராம் 6 : 12 : 12 கலப்பு உரத்தையும் போடுவதே சிறந்தது. அவைகளுக்கு மேலுரமாக விதைபோட்ட 30-வது நாளில், குழிக்கு 500 கிராம் அமோனியம் சல்பேட் உரமிடுமாறு பரிந்துரைக்கப்படுகிறது.

அவரைக்கு, ஒரு குழிக்கு 12 கிலோ தொழு உரம், 115 கிராம் அமோனியம் சல்பேட், 290 கிராம் சூப்பர் பாஸ்பேட் ஆகியவைகளை அடியுரமாக இட்டு, மண்ணுடன் நன்கு கலக்குமாறு செய்துவிட வேண்டும். பூப் பூக்கும் பொழுது குழிக்கு 12 கிலோ தொழு எருவை மேலுரமாக இடுமாறு பரிந்துரைக்கப்படுகிறது.

உங்கள் விவாதக் குழு உறுப்பினர் யூரியாவை எந்த அளவில் போட்டார் என்பதைத் தெரிவிக்கவில்லை. அமோனியம் சல்பேட்டை விட யூரியாவில் 2·2 மடங்குத் தழைச்சத்து உள்ளது. எனவே, அவரை அல்லது புடலைக்கு ஒரு குழிக்கு 227 கிராம் யூரியாவுக்கு மேல் இட்டால் நிச்சயமாகப் பட்டுவிடும்.

யூரியாவை அவரை, புடலை ஆகியவற்றிற்கு மேற்கண்ட அளவில் இட்டு, மண்ணுடன் கலக்கச் செய்து உடன் நன்கு தண்ணீர் விட வேண்டும். யூரியாவை அதிக அளவில் இட்டாலோ, அல்லது யூரியாவைப் போட்ட உடன் தண்ணீர் விடாவிட்டாலோ நிச்சயமாக அவரை, புடலை போன்ற காய்கறிப் பயிர்கள் பட்டுவிடும். எனவே, கூடுமானவரை அவரை, புடலை போன்ற எல்லாக் கொடி வகைக் காய்கறிப் பயிர்களுக்கும் அடியுரமாகவோ அல்லது மேல் உரமாகவோ யூரியாவைப் பயன்படுத்தாதிருப்பதே நல்லது. பொதுவாக எல்லாக் கொடி வகைக் காய்கறிப் பயிர்களுக்கும் அடியுரமிட 6 : 12 : 12 கலப்பு உரத்தையும், மேலுரமிட அமோனியம் சல்பேட்டையும் பயன்படுத்துவதே சிறந்தது.

### எம்.சி.யு. 5 பருத்தியின் சிறப்புகள் !

எம். சி. யு. 5 பருத்தியின் சிறப்புகள் என்னென்ன ? இப்பருத்தியை எப்பருவத்தில் பயிரிடலாம் ?

—ச. ஆ. கேசவன்,
கு. கழுகாசலபுரம், குருமலை அஞ்சல், கடம்பூர் வழி.

இதுவரைத் தமிழ் நாட்டில் கண்டு பிடிக்கப்பட்டுள்ள உகாண்டா பருத்தி ரகங்களில் எம். சி. யு. 5 ரகப் பருத்தியே அதிக மகசூல் அளிக்க வல்லது. இந்த ரகத்தின் முக்கியச் சிறப்புக்களாவன :

1. இது சராசரியாக எக்டேருக்கு 6·5 குவின்டால் பஞ்சு மகசூல் கொடுக்கக் கூடியது.

2. இதன் இழை நீளம் 1 6/32 அங்குலம் உள்ளது. ஆனால், எம்.சி.யு. 1, எம்.சி.யு. 3 ஆகிய ரகப் பருத்திகளின் இழை நீளம் முறையே 1 அங்குலமாகவும், 1 2/32 அங்குலமாகவும் உள்ளது.

3. இதன் இழை வலிமை 8·1. ஆனால் எம்.சி.யு. 1 ரகப் பருத்தி இழையின் வலிமை 7·5 தான்.

4. இந்த ரக இழையின் மைக்ரோனர் அளவு 3·2. ஆனால் எம்.சி.யு. 1 ரக இழையின் மைக்ரோனர் அளவு 4·2. எனவே, இந்த ரக இழை மிகவும் நுண் தன்மை வாய்ந்ததாக இருப்பதால், மெல்லிய வலிவுள்ள நூலிழைகளை உருவாக்க எம்.சி.யு. 5 மிகவும் ஏற்றதாக உள்ளது.

5. எம்.சி.யு. 1, எம்.சி.யு. 3 ரகங்களைக் கொண்டு முறையே 40, 45-ஆம் எண் நூல் நூற்க முடியும். எம்.சி.யு. 5 ரகத்தைக் கொண்டு 70-ஆம் எண் நூல் நூற்க முடியும்.

6. இதன் வயது 165 நாட்கள்தான். ஆனால் எம்.சி.யு. 1 ரகத்தின் வயது 180 நாட்கள். வயது குறைவாக இருப்பதால் இந்த ரகம் விரைவில் மகசூல் கொடுப்பதுடன், காய்ப்புழுக்களின் தாக்குதலிலிருந்தும் கணிசமான அளவிற்குக் காப்பாற்றப்படுகிறது.

7. இந்த ரகம் நெருக்கமாகக் கிளைக்காமல், விரிவாகக் கிளைத்து வளரும் தன்மையையும், பரவலான - மிகவும் அடர்த்தியில்லாத - இலைகளின் அமைப்பையும் கொண்டுள்ளதால், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகளைத் திறமையான முறையில் பயன்படுத்த இயலுகிறது.

8. பல்வேறு காலநிலையிலும், நன்கு வளரக் கூடியதாகையால் மானாவாரியாகவும், இறைவையாகவும் சாகுபடி செய்வதற்கு இந்த ரகம் ஏற்றதாக உள்ளது.

9. இந்த ரகத்தைப் பயிரிடுவதால், சாகுபடியாளர்களுக்கு எக்டேருக்கு ரூபாய் 1,000 கூடுதலாகக் கிடைக்கிறது.

10. தமிழ்நாட்டில் குளிர்காலப் பருத்திச் சாகுபடியாகும் 80,000 எக்டேர் பரப்பு முழுவதிலும் எம்.சி.யு. 5 பருத்தி பயிரிடப்படுமானால், எம்.சி.யு. 5 பருத்திச் சாகுபடி செய்யும் உழவர்களுக்கு ஆண்டுதோறும் ஏறத்தாழ 8 கோடி ரூபாய் கூடுதல் இலாபம் கிடைக்கும்.

எம்.சி.யு. 5 ரகப் பருத்தியைக் குளிர்கால இறைவைக் கம்போடியாப் பருத்தியாக ஆகஸ்டு-செப்டம்பர் முதல் பிப்ரவரி-மார்ச்சு வரையான பருவத்திலும், குளிர்கால மானாவாரி கம்போடியா பருத்தியாக அக்

VOLTAS

# பருத்திப்பயிர் களுக்குப் பாதுகாப்பளிக்க மிகச் சிறந்தது



## ஜோலோன்®

மூலப் பொருள்

## 'ரோன்-பொலெங்க்'

பாரிஸ், பிரான்ஸ், ஸ்தாபனத்தாரால்
கண்டுபிடிக்கப்பட்ட போஸலோன்
பூச்சி மருந்து

RHÔNE-POULENC

உலகப் புகழ்பெற்ற பூச்சி மருந்து தயாரிப்பாளர்களான, பிரான்ஸ் நாட்டு ரோன்—பொலெங்க் நிறுவனத்தாரால் கண்டுபிடிக்கப்பட்ட போஸலோனை மூலப்பொருளாகக் கொண்ட ஜோலோன் பூச்சி மருந்து இப்போது இந்தியாவில் கிடைக்கிறது. அது விவசாயிகளுக்கு சேதமற்ற, செழிப்பான பருத்தி மகசூலை அளிக்கிறது. காய் துளைக்கும் புழுக்கள், வெள்ளை ஈக்கள், உறிஞ்சும் பூச்சிகள், இலை தின்னும் புழுக்கள், செடிப் பூச்சிகள், [illegible] முதலியவற்றிலிருந்து பரிபூரணப் பாதுகாப்பு அளிப்பதைத் தவிர, ஜோலோன் பருத்திப்பயிர்களின் காய்ப்புழுக்கள் தாக்குவதிலிருந்தும் பரிபூரணமாகப் பாதுகாக்கிறது. மேலும் ஜோலோன் [illegible] முறையில் கட்டுப்படுத்துவதால், அதனுடன் [illegible] வேறு எந்தப் பூச்சி மருந்தோ [illegible] தேவையில்லை.

காய்கறிகள், பழங்கள் மற்றும் உணவுப் பயிர்களைப் பாதுகாத்திட ரோன்—பொலெங்கின் மற்றுமோர் தயாரிப்பு [illegible] (மூலப்பொருள் [illegible] (Systemic) பூச்சிமருந்து) மிகச் சிறந்தது.

பாரதத்தின் பசுமைப் புரட்சியைப்
பாதுகாப்பது
**'ரோன்-பொலெங்க்'**
பூச்சி மருந்துகள்

மேலும் விவரங்களுக்கு, கீழ்க்கண்ட முகவரிக்குத்
தயவுசெய்து தொடர்பு கொள்க:
வோல்டாஸ் லிமிடெட்
[illegible]
19, [illegible] ரோடு, பேலார்ட் எஸ்டேட்,
பம்பாய்-1.

டோபர் முதல் மே ஜூன் வரை யான பருவத்திலும் பயிரிடலாம்.

எம். எப். 17 : 17 : 17 : காம்ப்ளெக்ஸ்

**எங்கள் நிலத்தில் கிச்சலி, கார் போன்ற நாட்டு நெல் வகைகளைப் பயிரிட இருக்கிறோம். நல்ல விளைச்சல் பெற புதிய எம்.எப். காம்ப்ளெக்ஸ் 17 : 17 : 17 உரங்களை எம் முறையில், நிலத்தில் விதைகள் விதைக்கப்பட்ட எத்தனை நாட்களுக்குப் பிறகு, எவ்வளவு தண்ணீரில் பயன் படுத்த வேண்டும் என்பதைத் தெரிவிக்கவும். மேற்படி உரங்களைக் கடன் மூலம் நம் அரசு விநியோகம் செய்கிறதா என்பதையும் தெரிவிக்கவும். எம். எப். காம்ப்ளெக்ஸ் 17: 17: 17 உரம் பயன்படுத்திய அதே நிலத்தில் அதே பயிருக்கு யூரியா உரம் இட வேண்டிய தேவை உண்டா என்பதையும் தெரிவிக்கவும் ?**

பொதுவாக நாட்டு ரக நெல் எல்லாவற்றிற்கும் கடைசி உழவில் அடியுரமாக 13 கிலோ தழைச்சத்து, 14 கிலோ மணிச்சத்து, 7 கிலோ சாம்பல் சத்து இடுமாறும், நடவு செய்து 30-வது நாளில் 8 கிலோ தழைச்சத்தை மேலுரமாக இடுமாறும் பரிந்துரைக்கப்படுகிறது. தாங்களும் இதே அளவில் உரமிடுதல் நல்லது.

தாங்கள் எம். எப். காம்ப்ளெக்ஸ் 17 : 17 : 17 உரங்களைப் பயன்படுத்த விரும்பியுள்ளதால், மேற்கூறிய அளவில் உரமிட கடைசி உழவில் ஏக்கருக்கு 41 கிலோ 17 : 17 : 17 எம்.எப். காம்ப்ளெக்ஸ் உரத்தையும், 43·75 கிலோ சூப்பர்பாஸ்பேட் உரத்தையும், 13·2 கிலோ யூரியா அல்லது 30 கிலோ அமோனியம் சல்பேட் உரத்தையும் இட வேண்டும். அப்பொழுதுதான் ஏக்கருக்கு 13 கிலோ தழைச்சத்து, 14 கிலோ மணிச்சத்து, 7 கிலோ சாம்பல் சத்து கிடைக்கும்.

இவ்வாறு உரமிடத் தங்களுக்குச் சூப்பர் பாஸ்பேட் அல்லது யூரியா அல்லது அமோனியம் சல்பேட் கிடைப்பது கடினமாக இருந்தால், ஏக்கருக்கு 82 கிலோ எம். எப். காம்ப்ளெக்ஸ் 17 : 17 : 17 உரத்தை அடியுரமாகக் கடைசி உழவில் இட்டு விடுங்கள். இவ்வாறு செய்தால், 82 கிலோ உரத்திலிருந்து ஒரு ஏக்கருக்கு 14 கிலோ தழைச்சத்து, 14 கிலோ மணிச்சத்து, 14 கிலோ சாம்பல் சத்து கிடைத்துவிடும். இதில் பரிந்துரைக்கப்பட்ட அளவுக்கு மேல் 1 கிலோ தழைச்சத்தும், 10 கிலோ சாம்பல் சத்தும் கூடுதலாக இருக்கிறது. இது தேவையில்லையெனினும், உழவர்கள் எம்.எப். காம்ப்ளெக்ஸ் 17 : 17 : 17 ஒன்றை மட்டுமே கொண்டு எளிதில் அடியுரமிட இம்முறையை மேற்கொள்ளலாம்.

நடவு செய்த 30-ஆம் நாள் நிலத்தில் உள்ள தண்ணீரை வடித்துவிட்டு, ஏக்கருக்கு 8 கிலோ தழைச் சத்து அளிக்க 40 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 17·2 கிலோ யூரியாவை மேலுரமாக இடவேண்டும். உரமிட்ட பின் இலேசாகத் தண்ணீர் விடவேண்டும். எம். எப். காம்ப்ளெக்ஸ் 17 : 17 : 17 உரத்தை அடியுரமாகத்தான் பயன்படுத்த வேண்டும். மேலுரமாகப் பயன்படுத்தக் கூடாது. அதனால் அதிகப் பயன் கிடைக்காது. எனவே மேலுரமிட, யூரியாவையோ அல்லது அமோனியம் சல்பேட்டையோ பயன்படுத்த வேண்டும்.

தாங்கள் கடன்பெற விரும்பும் கூட்டுறவுச் சங்கத்தில் எம். எப். காம்ப்ளெக்ஸ் 17 : 17 : 17 உரமிருப்பின், தங்களுக்கு அது கிடைக்கக்கூடும். இல்லாவிட்டால் அங்குள்ள உரங்களையே பெற முடியும். அரசு வழங்கி வரும் தீவிர உரமிடும் திட்டத்தின் கீழ் இவ்வுரங்களைப் பெறலாம்.

**நான் கோழிப் பண்ணை வைக்க விரும்புகின்றேன். இதன் பொருட்டு அரசாங்கத்திடம் இருந்து கடன் வாங்க நான் யாரை எங்கு அணுக வேண்டும் ? வானொலியில் தேசிய மயமாக்கப்பட்ட வங்கி மூலம் கடன் பெறலாம் என்று ஒலிபரப்புகின்றனர். அக்கடனை வாங்க வழிமுறை தெரியவில்லை. அக்கடனை வாங்குவதற்கு, முன் பணம் கட்ட வேண்டுமா ? எவ்வளவு ரூபாய் கடன் கொடுப்பார்கள் ? கடன் பெற எவ்வளவு நாளாகும் ? தயவுசெய்து தெரிவிக்கவும் ?**

—ர. ஜேம்ஸ்,
ஆரோக்கியபுரம், வடுகந்தாங்கல்,
வட ஆர்க்காடு மாவட்டம்.

கோழிப் பண்ணை அமைக்கத் தற்பொழுது தனிப்பட்டவர்களுக்கு நேரடியாக அரசு கடன் கொடுக்கவில்லை. கோழிப்பண்ணை அமைக்க, கனரா பாங்கு, இந்தியன் ஓவர்சீஸ் பாங்கு, இந்தியன் பாங்கு, பாங் ஆப் பரோடா, பேங் ஆப் இந்தியா முதலிய நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் தற்பொழுது பெருமளவில் கடன் கொடுத்து வருகின்றன. ஸ்டேட் பாங்கும் கோழிப் பண்ணை அமைக்கக்கடன் கொடுத்து உதவுகிறது. மேற்கண்ட பாங்குகளில் ஏதேனும் ஒன்று தங்கள் பகுதியில் இருக்கும். அவ்வங்கிக்குச் சென்று, வங்கியின் முகவரையோ ( Agent ) அல்லது மேலாளரையோ சந்தித்து தங்கள் விருப்பத்தைக் கூறிக் கடன்மனுப் பெற்று, அதைப் பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும். அதன் பின், அக்கடன் மனுவில் கண்ட விவரங்களை வங்கி அலுவலர்கள் நேரடியாக விசாரித்துக்கொண்டு தங்கள் சொத்து மதிப்பு, தங்களுக்குள்ள கடனைத் திருப்பிக் கட்டும் சக்தி ஆகியவற்றிற்கு ஏற்பக் கடன் கொடுக்க ஆவன செய்வார்கள். கடன் மனுவில் கண்ட விவரங்கள் சரியாக இருந்தால், சொத்து மதிப்பில் தகராறு இல்லாவிட்டால், ஒரு வாரத்திற்குள்ளாகவே கூட சில வங்கிகள், கேட்ட கடன் தொகையைக் கொடுக்கின்றன. எவ்வளவு தொகைக் கடன் கொடுப்பார்கள் என்று கேட்டுள்ளீர்கள். இதை நாங்கள்திட்டவட்டமாகக் கூறமுடியாது. தாங்கள் எத்தனை கோழிகள் வைத்துக் கோழிப் பண்ணை நடத்தவிருக்கின்றீர்கள் என்பதைப் பொறுத்தே கடன் தொகை எவ்வளவு என்பது முடிவு செய்யப்படுகிறது. தாங்கள் பெற விரும்பும் கடன் தொகைக்கு, முன் பணம் கட்ட வேண்டிய அவசியம் இருக்காது. ஆனால் நபர் ஜாமீன் அல்லது தங்கள் சொத்தில் ஒரு பகுதியை ஈடுகாட்ட வேண்டியிருக்கும். உங்கள் அருகாமையில் உள்ள வங்கிக்குச் சென்று இது பற்றிய எல்லா விவரங்களையும் கேட்டறிந்து, அதன் பின் கோழிப் பண்ணை அமைக்க கடன் பெற முயற்சி செய்வதே நல்லது.

—ஆர். எம்

கடமை எவ்வளவுக்கெவ்வளவு பெரிதோ, அவ்வளவுக்கவ்வளவு பொறுப்பும் மிகுதியாகும்.

* * *

மனிதன் புற உலகை வெல்கிறான் ; தன்னைத் தான் வெல்வதிலே தோற்கிறான்.

* * *

அடைந்த பலன்களை வைத்துத்தான் இலட்சியங்களின் சிறப்பைச் சோதிக்க வேண்டும்.

—நேரு.

# 7 ஆண்டுகளில்

'பெரிய நகரங்களில் குடிசைப் பகுதிகளை மாற்றி அமைப்பதன் மூலம் அந்த மக்களுக்கு நன்மையும், அவர்களுடைய ஆற்றல் நாட்டின் வளர்ச்சிக்குப் பயன் படக் கூடிய நிலையையும் ஏற் படுத்துகிறோம். அது மட்டும் போதாது. குடிசைப் பகுதிகளில் மிகுந்திருக்கும் ஆள் பலத்தை தாயகத்தின் பொருளாதார வளர்ச்சிக்கும் சமுதாயச் செழு மைக்கும் பயன்படுத்திக்கொள்ள வழிவகை செய்வதும் முக்கியம்' என்ற கருத்தைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் வலியுறுத்திச் சொல்லி வந்தார்கள்.

அங்கும் இங்குமாகச் சிற்சில திருத்தங்களைச் செய்வதனால் குடிசைப் பகுதிகளை மேம்படுத்தி விட முடியாது. குடிசை வாழ் மக்களுக்காக அரசாங்கமே முன் னின்று பெரியதொரு திட்டம் வகுத்து அதனைச் செயல்படுத்தி னால்தான் நகரங்களிலும் நகரங் களின் சுற்றுப்புறப் பகுதிகளி லும் குடிசைப் பகுதிகள் நிலை மேம்படும் என்று அவர் கூறிய கருத்தைச் செயல்படுத்தத் தோன்றியதே குடிசை மாற்று வாரியம் ஆகும். தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், தோன்றி இரண்டே ஆண்டுகளில் அது செய்து முடித்துள்ள பணிகள் அனைத்திந்தியாவின் கவனத்தையும் கவர்ந்துவிட்டன. வியக்கத்தக்க சாதனை என்று வேறு மாநிலத்தவராலும் போற் றப்பட்டுள்ளது. அயல் நாடு களில் கூட, இத்திட்டத்தின் சிறப்பினை ஏடுகள் எடுத்துரைத் திருக்கின்றன.

வெள்ள அபாயங்களுக்கும் தீ விபத்துகளுக்கும் இடமில்லாமல் குச்சு வீடு இருந்த இடங்களில் மச்சு வீடுகள், ரூ. 50 நியாய வாடகை இருக்கக்கூடிய குடி யிருப்புகளை ஏழை மக்கள் நலன் கருதி ரூ. 15 வாடகைக்கு விடு வது, சென்னையின் அழகுக்கு மேலும் எழிலூட்டும் வகையில் இந்த மாடிக் குடியிருப்புகளை அமைத்திருப்பது; மக்கள் வாழ்க் கை நிலையை மேம்படுத்த வசதி கள், உதவிகள் இவை அனைத்தை யும் விளக்குகிறது இக்கட்டுரை.



# 180 ஆயிரம்

சென்னை நகரில் மொத்த மக்கள் தொகை சுமார் 27 இலட் சம் என்றால், நகரில் உள்ள வீடு கள் எண்ணிக்கை—ஒரு இலட் சத்து இருபதாயிரம் மட்டுமே ஆகும். குடிசைப் பகுதிகளில் வாழும் மக்கள் உட்பட அனை வருக்கும் ஓரளவுக்கு நிறை வான வீட்டு வசதி செய்வதென் றால் சுமார் 4 இலட்சம் இல்லங்க ளாவது வேண்டும். நகர மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதி யினர் குடிசை வாழ் மக்களே யாவர். நகரின் எல்லாப் பகுதி களிலும் விரவிக் கிடக்கும் குடி சைப் பகுதிகளில் இவர்கள் வாழ்கின்றனர். அண்மையில் எடுத்த புள்ளி விவரங்களின்படி சென்னையில் 1,202 குடிசைப் பகுதிகள் இருப்பதாகக் கணக்குக் கிடைத்திருக்கிறது. இந்தக் குடிசை வாழ் மக்களில் மிகப் பெரும்பகுதியினர் மாதம் ரூ. 50 ரூ. 70, ரூ. 100 என்ற அளவில் மிகக் குறைந்த வருமானம் உள்ள ஏழைகள்.

### ஏழையின் சிரிப்பு

இன்றைய தமிழக அரசு ஏழைகளின் நலன் கருதும் அரசு மட்டுமல்ல, ஏழை மக்களின் துயரங்களைத் துடைத்து, இன் னல்களைக் களைந்து அவர்கள் நிலையை மேம்படுத்துவதில்

# புது இல்லங்கள்!

இந்தியா முழுவதுமுள்ள அனைத்து மாநிலங்களுக்கும், வழிகாட்டும் அரசாகவும் விளங்குகிறது. 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்பதைத் தன் லட்சியமாகக் கொண்டிருக்கிறது. சோஷலிச லட்சியங்களைச் செயல்படுத்துவதற்கு முனைந்து நிற்கிறது. எனவே தான் மாநிலம் முழுவதற்கும் மக்களில் எல்லாப் பிரிவினருக்கும் வீட்டு வசதி செய்யத் தமிழ்நாடு மாநில வீட்டு வசதி வாரியம் இருக்கும்போது, அதனுடனேயே தனியாக குடிசைப் பகுதி மாற்று வாரியம் அமைத்து ஏழை மக்களுக்கு நல்ல வீடுகளை வியக்கத் தக்க வேகத்தில் கட்டி முடித்துக் கொண்டு வருகின்றது.

சென்னை போன்ற நகரங்களில் இயல்பான மக்கள் பெருக்கத்தோடு, புதிதாக வந்து குடியேறுபவர்களும் அதிகம். நாட்டுப் புறங்களில் மழை மாரி சரியாக இல்லை என்பதாலும் நகரங்களுக்குச் சென்றால் பிழைப்பது எளிது என்று நம்பிக்கொண்டும், படிப்புக்கு ஏற்ற வேலை தேடிக் கொள்ள எண்ணியும் சென்னை போன்ற பெரு நகரங்களுக்கு மக்கள் வந்த வண்ணம் இருக்கிறார்கள். இதன் விளைவாகச் சுகாதாரக் குறைவான பகுதிகளில் குடிசைகளைப் போட்டுக்கொண்டு மக்கள் வசிக்கும் நிலை பரவியது. கடற்கரையோரம், கால்வாய் ஓரங்கள், தணிந்த பகுதிகள், ஓரங்கள் பல்வேறு இடங்களிலும் குடிசைகளால் நகரின் எழிலும் கோலமும் சுகாதாரமும் பாதிக்கப்பட்டன என்பதல்லாமல், வேறு இரு அபாயங்களும் கூடவே வந்தன. மழை பெய்த போதெல்லாம், இந்தத் தணிந்த பகுதிகளில் குடிசைகளில் வாழ்ந்த மக்கள் சொல்லொணா அவதிகளுக்கு உள்ளாயினர். கோடை காலங்களில் தீ விபத்துக்கள் மக்களைத் துடிக்க வைத்தன. குறிப்பாக 1967-ல் புது அமைச்சரவை அமைந்த பின்பு, தீ விபத்துக்கள் அதிகரித்தன. தீ விபத்துக்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவித்தொகையை இரட்டிப்பாக்கினர் அரசினர். அவதிக்குள்ளான குடும்பம் ஒன்றுக்கு ரூ. 80 தரப்பட்டது. தீ விபத்து அபாயத்தைத் தடுப்பதற்காக 5,000 எரியாத வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. இத்துடன் குடிசை வாழ்மக்களுக்காகப் பல மாடிக் கட்டடங்கள் அமைத்து 7,384 இல்லிடங்களை அமைத்துத் தந்தது வீட்டு வசதி வாரியம்.


## பெருந் திட்டம்

எரியாத வீடுகள் கட்டினாலும், அவை தணிந்த பகுதியில் பெரும்பாலும் இருந்ததால் மழைக்காலங்களில் வெள்ளம் தேங்கி அந்த வகையில் இன்னல்கள் நீடித்தன. எனவே குடிசைப் பகுதிகளை மேம்பாடு செய்வதற்குப் பதிலாகப் பெருமளவில் குடிசைப் பகுதி மாற்று வேலைகளை மேற்கொள்வதே சாலச் சிறந்ததாக இருக்குமென்றும், இதுவே இச் சிக்கலுக்கு நிலையான தீர்வாக அமையுமென்றும் உணரப்பட்டது. இதனைத் தொடர்ந்து இந்தியாவிலேயே முதலாவதாக, மற்ற மாநிலங்களுக்கும் வழி காட்டும் முறையில் 1970 செப்டம்பரில் குடிசைப் பகுதி மாற்று வாரியம் அமைக்கப்பட்டது. இந்த வாரியத்திற்கு விரிந்த அளவில் அதிகாரங்கள் தரப்பட்டுள்ளன. திரு. இராம. அரங்கண்ணல் தலைமையில் 15 உறுப்பினர்களைக்கொண்ட குடிசைப் பகுதி மாற்றுவாரியம் வசதி பெற்ற மேல்நாடுகளையும் விஞ்சும் வகையில் ஒரே சமயத்தில் பல இடங்களில் பல்வேறு திட்டங்களை வகுத்து, செயல்படுத்தி, வீடுகளைக் கட்டி முடித்து வருகின்றது. குடிசைப் பகுதிகளிலிருந்து வெளியேற்றப்படும் காலத்தில் அந்த மக்களுக்குப் பாதுகாப்பளித்து, சுகாதாரக் குறைவான குடியிருப்புப் பகுதிகள் புதிதாகத் தோன்றாமல் தடுப்பது, தீ விபத்தால் பாதிக்கப்பட்ட குடிசைப் பகுதி மக்களுக்கு உதவுதல், குடிசைப் பகுதி மக்களுக்கு நிலையான குடியிருப்புகள் கட்டித் தருதல், அப்பகுதிகளில் அடிப்படையான சுகாதாரம், இதர வசதிகள் செய்தல் ஆகியன குடிசைப் பகுதிமாற்று வாரியத்தின் முக்கியப் பணிகளாக இருந்து வருகின்றன.

## அடையாள அட்டைகள்

குடிசைப் பகுதிகள் நீங்கி, குச்சுக்குப் பதில் மச்சு வீடுகள் அமைத்து, ஏழை மக்களுக்கு இல்லிட வசதி செய்யும் திட்டங்கள், பெரு நகரின் வளர்ச்சிக்கு ஏற்ற வகையில் முறையாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. முதலில் குடிசைப் பகுதிகளின் சமூகப் பொருளாதார நிலவரம் குறித்து, குடிசைப் பகுதி மாற்று வாரிய புள்ளி விவரப் பிரிவினர் கணக்குகள் எடுக்கிறார்கள். குடிசை வாழ் குடும்பங்கள் போட்டோ எடுக்கப்படுகின்றன. அந்தந்தக் குடிசைக் குடும்பத்துக்கு ஒரு எண்ணும் தரப்படுகின்றது. வாக்காளர் பட்டியல் மற்றும் ஏனைய பதிவுகளைக் கொண்டு இவ்விவரம் சரி பார்க்கப்படுகின்றது. வீடுகள் கட்டி முடிக்கப்பட்ட புதிய பகுதிகளில் இவர்களைக் குடியமர்த்த, இந்தப் படமும் எண்ணும் அடையாள அட்டை ஆக உதவுகின்றது. இவ்வகையில் குறைபாடுகள் ஏதாகிலும் இருப்பின் அதைத் தீர்த்துக் கொள்ள மேல் முறையீடு வசதியும் உண்டு. குடிசைப் பகுதி மாற்று வாரியத் தலைவரும், உறுப்பினர்களும் அவ்வப்போது குடிசைப் பகுதிகளுக்குச் சென்று குறைகளைக் கவனிக்கிறார்கள். தேவைகள் குறித்தும் சரியான மதிப்பீடு தயாரிக்க இதன் மூலம் வசதி ஏற்படுகிறது.

குடிசை வாழ் மக்களுக்கு இல்லிடங்களுக்காக அந்தந்த இடங்களில் பல மாடிக் கட்டடங்கள் கட்டி முடியும் வரை, குடிசை வாழ் மக்கள் தற்காலிகமான குடியிருப்புகளுக்கு அனுப்பப்படுகிறார்கள். இப்படிச் செல்லும்போது, குடும்பம் ஒன்றுக்கு ரூ. 50 வீதம் தரப்படுகின்றது. புதிய இல்லிடம் தயாரானதும், இவர்களுக்கு ஒதுக்கப்பட்டு, அடையாள அட்டையில், அந்தப்புது இல்லிட எண் விவரம் பதியப்படுகின்றது. மிகக் குறைந்த வருமானம் பெறுகின்ற அரசு ஊழியர்கள், அரசுச் சார்பு நிறுவனங்களின் ஊழியர்கள் ஆகியோருக்கும் இந்தப் புதிய இல்லிடங்களில் ஒதுக்கீடுகள் செய்யப்படுகின்றன. இத்தகையவர்கள் முதலில் ரூ. 500 செலுத்தி விட்டு, வாடகைக்கிரய அடிப்படையில் மாதம் ரூ. 40 வீதம் 25 ஆண்டுகள் செலுத்தி இல்லிடத்தை முழு உரிமையாக்கிக் கொள்ளவும் வசதி உள்ளது. வீடுகள் கட்டுவதற்கான இடத்தை, அரசு, வாரியத்துக்கு வழங்குகிறது. அல்லது வாரியம் விலைக்கு வாங்குகிறது. வள்ளல் தன்மை வாய்ந்தவர்களின் நன்கொடை வகையிலும் இடங்கள் கிடைக்கின்றன.



## தொழில் தேவையில் கவனம்

பல மாடிக் கட்டடங்களைப் பொறியியல் வல்லுநர்கள் திட்டமிட்டு, செம்மையான முறையில் கட்டி முடிக்கிறார்கள். மீனவர்கள், சலவைத் தொழிலாளர்கள், நெசவாளர்கள் போன்றவர்களின் தொழில் முறைத் தேவைகளையும் கருத்தில் கொண்டு, அந்தந்த வகை மக்களுக்கு ஏற்றவாறு இல்லிடங்கள் அமைக்கப்படுகின்றன.


இந்தப் பணிகளுக்கான நிதி வசதியை 50 சதவிகித மானிய உதவி 50 சதவிகித கடன் வசதி என்ற முறையில் மாநில அரசினர் தருகிறார்கள். கடன் தொகையை 30 ஆண்டுகளில் வட்டியுடன் திருப்பித் தர வேண்டும். ரூபாய் 5 லட்சம் வரை செலவு பிடிக்கும் திட்டங்களுக்குக் குடிசைப் பகுதி மாற்று வாரியமே ஒப்புதல் அளிக்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. ரூ. 5 லட்சம் செலவு மதிப்புக்கு மேல் உள்ள திட்டங்களுக்கு மாநில அரசினர் ஒப்புதல் அளிக்கிறார்கள்.

இதுவரையில் 22,876 குடியிருப்புகளைக் கட்டுவதற்கான 67 செயல் திட்டங்களை ரூ. 19·50 கோடி செலவில் நிறைவேற்ற ஒப்புதல் வழங்கப்பட்டு, 42 செயல் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. 4,166 இல்லங்கள் கட்டி முடிக்கப்பட்டுக் குடியேறுவதற்குத் தயார் நிலையில் உள்ளன.

## ஏழாண்டுத் திட்டம்

சுகாதாரக் குறைவான குடியிருப்புப் பகுதிகளை அகற்றி, மாநகரைச் சிங்காரச் சென்னையாக ஆக்க, 7 ஆண்டுக் காலத்தில் ஒரு லட்சத்து 80 ஆயிரம் வீடுகள் கட்ட வேண்டும் என்று வாரியம், குறிக்கோள் அளவை வரையறுத்துக்கொண்டுள்ளது. தற்போது இந்த வீடு கட்டும் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வரும் வேகத்தில் முப்பது நிமிடங்களுக்கு ஒரு வீடு வீதம் கட்டி முடிக்கப்பட்டு வருகின்றது. இந்த வேகத்தை இரு மடங்காக்க வாரியம் திட்டமிட்டுள்ளது.

குடியிருப்பு இல்லம் ஒன்றின் பரப்பு குறைந்த பட்சம்




232 சதுர அடியாக இருக்கவேண்டும் என்று முதலில் வரையறுக்கப்பட்டது. ஆனால் அதிகமான பேர்களுக்கு வசதி ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் செலவுகளை மேலும் குறைக்க வீட்டுப் பரப்பு பல்வேறு வடிவமைப்புகளுக்கு ஏற்ப 197 சதுர அடியிலிருந்து 215 சதுர அடி வரை இருக்கலாம் என்று தீர்மானிக்கப்பட்டது. ஒவ்வொரு இல்லத்திலும் ஒரு அறை, சமையல் அறை, குளிக்குமிடம், கக்கூஸ், தண்ணீர்க் குழாய் வசதி, மின்சார வசதி உண்டு. மேல் மட்ட நீர்த் தொட்டி கட்டிக் குடிநீருக்கு வசதி செய்யப்படுகிறது. இந்தக் குடியிருப்புப் பகுதிகளில் பள்ளிகள், விளையாட்டுத் திடல்கள், சமுதாயக் கூடம், குழந்தைகள் விளையாடுமிடம், மருந்தகம், பூங்கா, அங்காடி முதலியன அமைக்கவும் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### வாடகை ரூ. 15 தான்


இந்த இல்லங்களுக்கு, கட்டுமானச் செலவுக்கு ஏற்ப, கட்டுபடியாகக் கூடிய வாடகை விதிக்கப்படுவதில்லை. அப்படி வாடகை விதிப்பதென்றால் மாதம் ரூ. 50 வாடகை ஆகும். ஆனால் வசதிக் குறைவான மக்களின் நலனை முன்னிட்டு, மிகப் பெரும்பாலான குடும்பங்களில் சம்பாத்தியம் உள்ளவர் ஒரே ஒரு நபர் என்ற நிலையைக் கருத்தில் கொண்டு அடையாள வாடகை என்ற முறையில் மாதம் ரூ. 15 வாடகை வரையறுக்கப்பட்டுள்ளது. சோசலிச சமுதாய அமைப்பை ஏற்படுத்திக் காட்டுவதில் இது போன்ற செயல் திட்டங்கள் மிக முக்கியமானவை என்பதால் இத்திட்டம் செயலாக்கப்படும் காலம் வரை, ஆண்டு ஒன்றுக்கு மத்திய அரசினர் ரூ. 10 கோடி வீதம் உதவி வரவேண்டும் என்று வாரியம் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டு வருகின்றது.

### ....வாழ்க்கை நிலை மேம்பட....

புதிய இல்லங்களில் மக்களைக் குடியமர்த்துவதுடன் பணி முடிந்து விடுவதில்லை. இந்த மக்களின் பொருளாதார நிலையை மேம்படுத்த வேண்டும். சுற்றுப்புறச் சுகாதாரத்தைப் பாங்குறப் பேண வேண்டும். கல்வி வசதியைப் பரப்ப வேண்டும் என்பதை உணர்ந்து சமூக நலப் பணிகளுக்கும் வகை செய்யப்பட்டுள்ளது. சமூக நலனுக்குப் பணியாற்றும் பல்வேறு நிறுவனங்களின் தொண்டு இவ்வகையில் பயன்படுத்திக் கொள்ளப்படுகிறது. புதுக் குடியிருப்பு நல்வாழ்வுப் பேரவையின் பணி இவ்வகையில் குறிப்பிடத்தக்க தொன்றாகும். மற்றும் சேரணிப் படையினர், கில்டு ஆப் சர்வீஸ், இந்தியா ஸ்வாலோஸ், மாதர் நலத்துறை, பியூட்டி டியூட்ஸ், ஒய்.எம்.சி.ஏ. ஆகியவையும் சமூக நலப் பணியாற்றி வருகின்றன. புதிய குடியிருப்புகளில் குடியமர்வோர் சிந்தனை, செயல்முறை, வாழ்க்கைநோக்கு அனைத்திலும் மேம்பட வேண்டும் என்ற கருத்தோடு இப்பணிகள் நடைபெற்று வருகின்றன. மக்கள் வாழ்க்கை முன்னேற்றத்துக்கும் அறிவு வளர்ச்சிக்கும் பயன் படத் தக்க திரைப்படங்கள் இப் பகுதிகளில் செய்தி மக்கள் தொடர்புத் துறையினரால் திரையிடப்படுகின்றன. சில குடியிருப்புப் பகுதிகளில் ஏற்கெனவே நூலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 500 குடும்பங்களுக்கு மேல் உள்ள பகுதிகளில் மருந்தகங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. குடும்ப நல முறைகள் எடுத்துரைக்கப்படுகின்றன. இப் பகுதிகளில் இளைஞர்களுக்குத் தொழிற் பயிற்சிக்கான கூடங்கள் அமைக்கவும் வாரியம் செயல் முறைகளை வகுத்து வருகிறது.









# கதர் கிராமத் தொழில்கள்

கதர் கிராமத்
தொழில்களை
ஆதரிப்பது
புனிதத் தொண்டு

கதர் கிராமத்
தொழில்களை ஆதரிப்பது
கிராம மக்களுக்குச்
செய்யும் பேருதவி





கதர்: கதர்ப் பட்டு
சோப்பு, தேன்
தோல் பொருள்கள்
பனைவெல்லம்.
பனைப் பொருள்கள்
வார்ப்படங்கள்
மற்றும் பல்வேறு கைநுட்பப்
பொருள்கள் கதர் கிராமத் தொழில்
விற்பனை நிலையங்களில் கிடைக்கும்





## கதர் கிராமத் தொழில் துறை


2. சர் தேசிகாச்சாரி சாலை

சென்னை-4

சந்தர் ---


உள்ளது அருமையிலும் அருமை என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

சோழர் கலைப் பாணியின் காட்சிக் கூடமாக விளங்கும் இக்கோயிலுக்கு இரண்டு கல் கிழக்கே செங்கமேடு என்ற சிற்றூரில் ஒரு தோப்பில் கலிங்க நாட்டுக் கலைப் பாணியில் பைரவர் உருவங்கள் இரண்டு சிவப்புக் கல்லில் செதுக்கப்பட்டுக் காட்சியளிக்கின்றன. அவைகளைத் தற்பொழுது தமிழ் நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை தனது பாதுகாப்பின் கீழ்க் கொணர்ந்து வருகின்றது. அவ்வுருவங்கள் அங்கு எவ்வாறு வந்தன. கங்கை கொண்டானால் எழுப்பப் பெற்ற ஆலயத்தின் அருகில் எவ்வாறு அவை இடம்பிடித்தன என்று ஆராய்வோமானால் அவைகளையும் முதலாம் இராசேந்திரன் தான் கலிங்கப் பகுதிகளை வென்ற தன் நினைவாகக் கொண்டு வந்திருக்க வேண்டும் எனத் தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் அவர்கள் கருதுகிறார்கள். கங்கை கொண்ட சோழபுரத்துக்கு அருகில் உள்ள இராவீரெட்டித் தெருவில் காணப்படும் துர்க்கை உருவமும், மணல்மேட்டில் உள்ள துர்க்கை உருவமும் சாளுக்கிய பாணியில் உள்ளன. அவை சாளுக்கிய நாட்டிலிருந்து கொண்டுவந்திருக்கலாம்.



**பைரவர்**
செங்க மேடு
கலிங்கர் பாணி

முதலாம் இராசேந்திரனின் மூத்த மகன் முதலாம் இராசாதிராசன் தன் தந்தையைப் போன்றே பெரு வீரனாகத் திகழ்ந்தவன். இவன் பாண்டியர் சேரர், சிங்களர், சாளுக்கியர் ஆகியவர்களோடு வெஞ்சமர் புரிந்து வெற்றிவாகை சூடியவன். இம்மன்னன் சாளுக்கிய மன்னன் ஆகவமல்லனோடு போர் புரிந்து, அவனைத் தோற்கடித்து, அம் மன்னனது கம்பிலி நகரிலிருந்த கோட்டையைத்தான் தகர்த்தெறிந்ததுவும், வராக முத்திரை பொறிக்கப் பெற்றிருந்த இடத்திலெல்லாம் தனது புலி முத்திரையைப் பொறித்ததுவும், வெற்றித்தூண் நாட்டியதுவும் இவனது கல்வெட்டுகளால் அறிய முடிகிறது. அவ்வாறு போர்ப் பரணி நடத்திப் புலவர்களால் புகழ்ப் பரணி பெற்றவன் சாளுக்கியர்களின் தலைநகரான கல்யாண புரத்தை வெற்றி கொண்டதன் அடையாளமாக அங்கிருந்து துவாரபாலர் சிலையொன்றை எடுத்து வந்திருக்கிறான். அச்சிலை சில ஆண்டுகளுக்குமுன்புவரை கும்பகோணத்துக்கு அருகிலுள்ள சிற்றூரான தாராசுரம் இராசராசேச்சுரம் உடையார் கோயிலில் வைக்கப் பெற்றிருந்தது. அது இப்பொழுது தஞ்சை அருங்காட்சி அகத்தில் பொது மக்களின் காட்சிக்கு வைக்கப் பெற்றிருக்கிறது. அச்சிலையினுடைய பீடத்தில் 'ஸ்வஸ்தி ஸ்ரீ உடையார் ஸ்ரீ விசயராசேந்திரத் தேவர் கல்யாணபுரம் எறிந்து கொண்டு வந்த துவாரபாலர்' என்று வரையப் பெற்றுள்ளது. அதன் சிற்பவமைதியைக் காணுங்கால் சோழர் காலத்துத் தமிழ் நாட்டுக் கலைப் படைப்புகளோடு ஒத்தில்லாமல் மாறுபட்டுக் காணப்படுகிறது. எனவே இது சாளுக்சிய நாட்டிலிருந்து இராசாதிராசனின் வெற்றியின் சின்னமாகக் கொண்டு வந்ததுதான் என்பது உறுதியாகிறது.



**பைரவி**
செங்க மேடு
கலிங்கர் பாணி

இதைப் போன்று பல வெற்றிச் சின்னங்கள் தமிழ் நாட்டுக்குக் கொண்டுவந்திருக்கக் கூடும். இலங்கை நாட்டின்மீது படையெடுத்துச் சென்ற தமிழ் மன்னர்கள் அந்நாட்டிலிருந்தும் சில கலைப் படைப்புகளைக் கொண்டு வந்ததாகத் தெரிகிறது. அவைகளெல்லாம் அழிந்தொழிந்துவிட்டனவா? அல்லது நாம் இன்னும் கண்டு கொள்ள முடியாத நிலையில் உள்ளோமா? என்பது தெரியவில்லை. காண்பதற்கு முயற்சிப்போம். கலையைப் பேணிக் காப்போம்

# மக்கள் தொகைப் பெருக்கமும் வேலை வாய்ப்பும்

கே. என். சுப்பையா.

காய்தல் உவத்தல் அகற்றி நடு நிலைநின்று நோக்கின் இந்தியத் துணைக் கண்டம் விடுதலை அடைந்து குடியாட்சி உரிமை பெற்ற பின்னர் பல்வேறு துறைகளிலும் கணிசமான முன்னேற்றம் அடைந்திருக்கிறது, என்பதில் யாருக்கும் ஐயம் இருக்க முடியாது.

வணிகத்திலாகட்டும், வங்கி முறையிலாகட்டும், தொழில் துறையிலாகட்டும், விவசாயத்திலாகட்டும், கல்வியிலாகட்டும், மருத்துவத்திலாகட்டும் நம் முன்னேற்றம் குறிப்பிடத் தக்கது. இலக்கிட்ட முடிவுகளை ஐந்தாண்டுத் திட்டங்கள் மூலம் பெற்று மகிழ்ந்திருக்கிறோம். தேசிய வருவாய் உயர்ந்து காணப்படுகிறது. இத்துணை முன்னேற்றத்திற்குப் பிறகும் தனி நபர் வருமானத்தில் ஏற்றம் காணப்படவில்லை. வறுமையும், ஏழ்மையும் முழுமையாக நம்மை விட்டகலவில்லை. குடிசையில் வாழ்வோர் நம்மில் பலர் இன்னும் இருக்கத்தான் செய்கிறார்கள். நோய் வாய்ப்பட்டவர்கள் இல்லாமல் இல்லை. ஏன்? நீக்கமற நிறைந்து நிற்கும் ஒரே காரணம் ''மக்கள் தொகைப் பெருக்கம்தான்'' என்றால் மிகையாகாது. இயற்கை அளிக்கும் இன்பம், தென்றல் தரும் சுகம் எல்லாருக்கும் பொதுவானது. இருப்பினும் தலைவனை இணைந்து நிற்கும் தலைவி இன்புற்றும், துறந்து நிற்பவள் இன்னலுற்றும் இருக்கும் பொழுது, இயற்கை முன்னவருக்கு இன்பத்தையும், பின்னவருக்கு இன்னலையும், விளைவிப்பது போல், நாடு அங்குள்ள சூழ்நிலை, பொருளாதாரம், இவற்றிற்கு இணங்க இந்தியா, சீனா போன்ற ஆசிய நாடுகளுக்கு மக்கள் தொகைப் பெருக்கம் தவிர்க்கப்பட வேண்டியதாகவும், ஸ்வீடன், ஜெர்மனி போன்ற ஐரோப்பிய நாடுகளுக்கு விரும்பி வரவேற்கப்பட வேண்டியதாகவும் இருக்கிறது. பெருகிவரும் மக்கள் தொகையைக் கருத்தில் கொள்ளாமல் நாம் வகுக்கும் எந்தத் திட்டமும் வெற்றியடைய வாய்ப்பில்லை.

முதல் ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் 18 சதவிகிதம், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 25 சத விகிதம், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 30 சத விகிதம், தேசிய வருமானம் பெருகிக் காணப்பட்ட போதிலும், மக்கள் தொகைப் பெருக்கத்தின் காரணமாகத் தனி நபர் வருமானம் எதிர்பார்த்த அளவு உயர்ந்து காணப்படவில்லை. தனி நபர் வருமானத்தையும், தேசிய வருமானத்தையும் உயர்த்தத் திட்டங்கள் தீட்டப்படுவதுடன், மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த வழி வகைகள் செய்யப்பட வேண்டும்.

1961-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்குப்படி 33.6 கோடி மக்களாக இருந்த நாம் 1971-ஆம் ஆண்டில் 44.1 கோடியாக வளர்ந்திருக்கிறோம். 22.01 சத விகிதம் உயர்ந்திருக்கிறோம். ஐம்பது ஆண்டுகள் தொடர்ந்து இதே வளர்ச்சி இருந்தால் மக்கள் தொகை எண்ணிக்கை இரட்டிப்பாக வாய்ப்பிருக்கிறது. ஆனால் அதே காலக் குறியீட்டில் தேசிய தனி நபர் வருமானம் மக்கள்தொகைப் பெருக்க விகிதத்தில் பெருக வாய்ப்பு உண்டா என்றால் இப்போதுள்ள வசதி வாய்ப்புகளில் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

1951—61-ஆம் ஆண்டுகளில் மக்கள் தொகைப் பெருக்கம் 11.85 சத விகிதம்தான். கடந்த பத்து ஆண்டுகளில் நம் இரட்டிப்பு வளர்ச்சி கவலைக்கிடமாக இருக்கிறது. இந்திய மக்கள் தொகையில் இன்று நாம் 7.51 சத விகிதங்களாக பரவியிருக்கிறோம். இந்திய மக்கள் தொகையில் 1951-ல் ஐந்தாவது இடத்தையும், 1961-ல் ஆறாவது இடத்தையும், 1971-ல் ஏழாவது இடத்தையும் பெற்றிருக்கிறோம் என்பது நமக்குச் சிறு ஆறுதல் தர வல்லதாக இருக்கிறது.

இந்த நூற்றாண்டுத் துவக்கத்தில் 1901-ல் 19.3 கோடியாக இருந்த நாம் 113 சத விகிதம் உயர்ந்து 1971-ல் 41.1 கோடியாகியுள்ளோம். அதில் 20.8 கோடி ஆண்கள், 20.3 கோடி பெண்கள். 12.4 கோடி மக்கள் நகர்ப்புறங்களிலும், 28.7 கோடி மக்கள் கிராமப்புறங்களிலும் வாழ்கிறார்கள்.

1961-ல் சதுர மைலுக்கு 258 பேராக வாழ்ந்த நாம் 1971-ல் 316 பேராக வாழ்கிறோம் என்றாலும், அனைத்து இந்திய அளவில் சராசரி சதுர மைலுக்கு 182 பேர்களே வாழ்கிறார்கள்.

1961-ல் 31.41 சத விகிதம் படித்தவர் எண்ணிக்கையாக இருந்து, பத்து ஆண்டுக் காலத்தில் 25.41 சத விகிதம் வளர்ந்து, 1971-ல் 39.39 சத விகிதம் ஆக உயர்ந்திருக்கிறோம்.

நாம் முன்னர்க் கூறியதுபோல் துறைகள் அனைத்திலும் வளர்ந்திருந்தும் பெருகி வரும் மக்கள் தொகைப் பிரச்சினையும், அதன் விளைவுகளும் நம்மைச் சோதனையில் ஆழ்த்துகின்றன.

''வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்''

''அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்.''

வருமுன்னர்க் காவாதவர் வாழ்க்கையும், அளவறிந்து வாழாதவர் வாழ்க்கையும் அழிந்து படும் என்று வள்ளுவர் மொழிந்திருக்கிறார்.

நாம் வருமுன்னர்க் காக்க முயற்சிக்க வேண்டும். அளவோடு பெற்று வளமுடன் வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். பெற்றவரைக் காக்கவும், பெறாமல் தடுக்கவும், பழகிக்கொள்ள வேண்டும்.

சற்றேறக்குறைய, பொருளாதார வளர்ச்சியால் முழுமை அடைந்த அமெரிக்கா போன்ற நாடுகளில் தனி மனிதன் வருமானம் ரூ.28,000வரை இருந்தும் குடும்ப நலத் திட்டத்தின் அவசியம் உணர்ந்து பணியாற்றப் படுகிறது. நம் நிலை என்ன? ஒரு உயிர் பிறக்காமல் தடுக்கப்பட்டால் அரசுக்கு ரூ. 25,000 வரை காக்கப்படும்.

அரசாங்க மட்டத்தில் குடும்ப நலத் திட்டத்தைச் செயல்படுத்தும் ஒரே நாடு இந்தியாதான். முதலாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 65 இலட்ச ரூபாயும், இரண்டாவது திட்ட காலத்தில் 5 கோடி ரூபாயும், மூன்றாவது திட்ட காலத்தில் 50 கோடி ரூபாயும் செலவு செய்ய அரசினர் முடிவு செய்திருக்கின்றனர். உயிர் பிறக்காமல் தடுக்கப்பட வேண்டியதின் அவசியத்தைப் பற்றி இப்பொழுது நாட்டில் ஒவ்வொருவரும் உணர்ந்த நிலையில் இருப்பது நமக்குத் தெரிவதால், பெற்றவரைக் காப்பது எப்படி என்று பார்ப்போம்.

மக்கள் தொகைப் பெருக்கமுள்ள ஆசிய நாட்டினரின் கண்களுக்கு உருவாக்கப்படும் உயிருக்குள்ள வாயும், வயிறும் தான் காட்சியளித்து கவலை கொடுக்கிறது. மக்கள் தொகைப் பெருக்கம் குன்றியுள்ள ஐரோப்பிய நாட்டினருக்கு உயிர் ஒவ்வொன்றிற்கும் உள்ள இரண்டு கரங்கள் மகிழ்ச்சியளிக்கின்றன. உண்ணுவதற்கு ஒரு வாயைப் படைக்கும்பொழுதே உழைக்க இரு கரங்களைப் படைக்கத் தவறவில்லை.

நாம் செய்யும் தடைகள் அனைத்தையும் கடந்து வெள்ளம் போல் பெருகி வரும் மக்கள் கூட்டத்திற்கு வேலை வாய்ப்பளிப்பது எப்படி, வசதிகளைப் பெருக்கி வறுமையை ஒழிப்பது எப்படி, சமதர்ம சமுதாயத்தைச் சமைப்பது எப்படி என்று நோக்குவோம்.

1961-ஆம் ஆண்டு மக்கள் பெருக்கக் கணக்குப்படி 33.6 கோடி மக்களில் வேலை வாய்ப்புப் பெற்றோர் எண்ணிக்கை 15.3 கோடியினராவர். மற்றவர் சிறியவர், முதியவர், வேலை வாய்ப்புப் பெற முடியாதவர், பெற விரும்பாதவர்கள். அதில்

| | சத விகிதம். |
|---|---|
| உழுபவர்—விளைவிப்பவர் | 42.07 |
| விவசாயிகள்—நில உரிமையாளர். | 18.42 |
| கனிவளத் துறையினர் | 2.84 |
| இல்லத் துறையினர் | 7.86 |
| உற்பத்தித் துறையினர் | 5.52 |
| ஆக்கத் துறையினர் | 1.34 |
| தொழில் வியாபாரத் துறையினர். | 4.94 |
| போக்கு வரத்துத் துறையினர். | 1.65 |
| மற்ற துறையினர் | 15.36 |

1971-ஆம் ஆண்டுக் கணக்குப்படி 4·11 கோடி மக்களில் வேலை வாய்ப்புப் பெற்றோர் 1.5 கோடி மக்களாவார்கள்.

| | சத விகிதம். |
|---|---|
| உழுபவர்—விளைவிப்பவர் | 31·1 |
| விவசாயிகள்—நில உரிமையாளர். | 29·9 |
| மற்றவர் .. .. | 40·0 |

வேலை வாய்ப்புப் பெற முடியாதவர், பெற விரும்பாதவர் 25 கோடி மக்களாவர். 1961—71 புள்ளி விவரங்களில் உழுபவர்—நில உரிமையாளர் என்ற இரண்டு புள்ளி விவரங்களை மட்டும் எடுத்துக்கொண்டால் அரசினர் கொண்டுவந்த நில உச்ச வரம்புச் சட்டங்கள் எதிர்பார்த்த பயனைக் கொடுத்திருக்கிறது என்பது புலனாகிறது. உழுபவர் எண்ணிக்கைகுறைந்தும் நில உரிமையாளர் எண்ணிக்கை உயர்ந்தும் காணப்படுவது குறிப்பிடத் தக்கது.

சாதிசமயமற்ற சமூகம்-யாவருக்கும் சமமான பொருளாதார நீதியும் வாய்ப்பும் உள்ள வகுப்பற்ற சமூகம்-மனிதனின் பொருளாதார, பண்பாட்டு நிலைகளை உயர்த்துவதற்கும் ஆன்மீகப் பண்பு, கூட்டுறவு மனப்பான்மை தன்னலமின்மை, சேவை மனப்பான்மை, நேர்மை, நல்ல எண்ணம், அன்பு ஆகியவற்றைப் பேணுவதற்குத் திட்டமிட்ட அடிப்படையின்மேல் அமைக்கப்பட்ட சமூகம் இதுவே நமது இறுதி இலட்சியமாக இருக்கவேண்டும். இதற்குக் குறுக்கே வருவது எதுவானாலும் அதை முடியுமானால் அன்பான முறையிலும் தேவையானால் கட்டாயமான முறையிலும் அகற்றியே தீரவேண்டும்.

—ஜவகர்லால் நேரு

1961–71-ல் மக்கள் தொகைப் பெருக்கம் 22.01 சதவிகிதம் உயர்ந்து இருந்தாலும் வேலை வாய்ப்புப் பெற்றோர் எண்ணிக்கையில் உயர்வு தெரியவில்லை என்பதற்கு ‘‘வேலை வாய்ப்புப் பெற்றோர்’’ என்ற சொல்லுக்குக் கொடுக்கப்பட்ட ஆக்க பூர்வமான விளக்கத்தில் ஏற்பட்ட மாறுதலே யன்றி வேறு ஒன்றும் காரணம் இல்லை.

முந்திய புள்ளி விவரங்களை உறு துணையாக வைத்து எதிர் காலத்தில் இப்படித்தான் இருக்கும் என்று எண்ணிக் கணக்கிட்டால் 1966-ல் 1.97 கோடி மக்களுக்கும், 1981-ல் 2·15 கோடி மக்களுக்கும், 1984-ல் 2.27 கோடி மக்களுக்கும் வேலை வாய்ப்பளிக்க வேண்டிய நிலையில் நம் மாநில அரசு இருக்கும். 1984 என்பது ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட கால முடிவாகும்.

1984-ஆம் ஆண்டிற்குள் காலப் போக்கில் வரக்கூடிய 40 இலட்சம் பேருக்குள்ள வேலை வாய்ப்பின்றி புதிதாக மேலும் 40 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பிற்கு வழி வகைகள் செய்ய முடியும் என்று, வேலையில்லாத் திண்டாட்டம் முழுமையாக இல்லாமல் போய் விடுமென்றும், நம் மாநிலத் திட்டக் குழுவினர் தீர்வுகண்டிருக்கிறார்கள். உத்தியோக உயர்வு, பலதுறை விரிவாக்கம், மரணம் மற்றபொதுவானகாரணங்களால் விளையும் உத்தியோக வாய்ப்புகள் இல்லாமல் புதிதாக அடுத்த ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 16.5 இலட்சம் பேருக்கும், ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மேலும் 16 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பளிக்க வேண்டி வரும்.


நாம் முன்னர் சொல்லியது போல் வரவிருக்கும் 13 ஆண்டுகளில் 40 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களுக்கு எப்படி வேலை வாய்ப்பளிப்பது என்று நோக்குவோம்.

மாநிலத் திட்டக் குழு எடுத்த முடிவின்படி, சிறிய நகர்ப்புறங்கள், கிராமங்களில் புதிய வேலை வாய்ப்பு நிலையங்களைத் துவக்கி வைத்துப் பணிபுரிய வேண்டும். பொருளாதார வளர்ச்சிக்கு விரோதமாக, பெரிய நகர்ப் புறங்கள் வளராமல் சிறு நகர்ப்புறங்கள் வளர்த்து தோட்டப் பண்ணை கால்நடை

# அமோகமான மகசூலை நிச்சயமாகப் பெற ஜோதி வர்ட்டிகல் டர்பைன் பம்பு

○ மின்சக்தி செலவு கணிசமாகக் குறையும் ○ தொல்லையற்ற நீடித்த உழைப்பு
○ பிரத்யேகமான கட்டமைப்பு ○ பராமரிப்பு தேவையில்லை என்றே சொல்லலாம்

அளவு: 100 டி முதல் 750 டி. 100 மி.மீ. முதல் 750 மி.மீ. வரையுள்ள ட்யூப் வெல்களுக்கு
• சக்தி: நிமிடத்திற்கு 35,000 லிட்டர் வரை • ஏற்றம் 100 மீட்டர் வரை




everest/504/JY/tm

கிளை :—அறை எண் 35, எர்லேன்ஸ் ஓட்டல், 177/179, மவுண்ட் ரோடு, சென்னை-2.
தொலைபேசி எண் : 85007

வளர்ப்பு, சிறு தொழில் அபி விருத்தி செய்து, புதிய வேலை வாய்ப்புகளை உண்டாக்க வேண்டும். இதுவரை நம் மாநில அரசு இதுபோல் 240 நகர்ப்புற புறங்களைத் துவக்கி இயக்கி வரு கிறது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மேலும் நூறுக்கும் மேற்பட்ட புதிய நகர்ப்புறங்கள் உருவாக்கப் பட வேண்டும். மற்றும் ஒரு வழி—பொருளாதாரம் குன்றிக் காணப்படும் பின்தங்கிய எட்டு மாவட்டங்களில் தொழிற்சாலை கள் நிறுவி வேலை வாய்ப்பளித்தல் இப்பொழுது மக்கள் பொதுக் கல்வியில் காட்டும் பிடிப்பு தகுதிக்குக் குறைந்த வேலை வாய்ப்பையே கொடுக்க வல்ல தாக இருக்கிறது. தொழில் கல்வியில் கவனம் செலுத்தி, தகுதி பெற்றோர்க்குத் தகுதிக்குத் தக்க வேலை வாய்ப்பளிக்க முயற் சிக்க வேண்டும்.

மத்திய அரசினர் பொருளா தார முன்னேற்றம் ஏற்படக் கூடிய வகையில் மக்கள் தொகை யை மாற்றி அமைக்க முயற் சிக்க வேண்டும். வளர்ச்சி குன்றி யதும் மக்கள் தொகை அதிக மில்லாததுமான பகுதிகளுக்கு மக்கள் குடிபெயர்வதன் மூலம் பொருளாதார வளர்ச்சி அடைய முடியும். இப்படிக் குடி பெயர்ந்து வாழ்தல் அதிகமான மக்கள் தொகை கொண்ட மாநிலங்களில் மக்களது சராசரி வருமானத்தை உயர்த்தியும், மக்கள் தொகை குறைவாக உள்ள மாநிலங்களில் பொருளா தார வளர்ச்சியைப் பெருக்க வும் துணை நிற்கும்.

சென்னை போன்ற நகர்ப் புறங்களில் தொழிலாளர் எண் ணிக்கையில் பற்றாக்குறையும் அதனால் ஊதிய உயர்வும், ஊதிய உயர்வின் விளைவாக [illegible] செல் பொருள் உற்பத்திச் செலவில் உயர்வும் ஏற்படுவதைப் பார்க் கிறோம். அதே சமயத்தில் சிறு நகர், கிராமப் புறங்களில் வேலை வாய்ப்பின்மையும், கூலி யில் குறைவையும் காண்கிறோம். இது போன்ற சிக்கல்களைச் சமாளிக்க ஒரே வழி குடி பெயர்ந்து குடியேறுதலும், சிறு நகர்ப்புறங்களை வளர்ப்பது மாகும்.

அமெரிக்காவில் அலாஸ்காப் பகுதியும், ரஷ்யாவில் சைபிரீ யாப் பகுதியும், குடி பெயர்ந்து குடியேறி முன்னேற்றங் கண்ட பகுதிகள்தான். சராசரியாகச் சதுர மைலுக்கு 320 பேராக வாழும் நாம், கேரளத்தில் சதுர மைலுக்கு 1,380 பேராக வும், ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம் போன்ற பகுதிகளில் 200 பேருக்கும் குறைவாகவும், வாழ்கிறோம். இத் திட்டத்தின் மூலம் ஏற்றத் தாழ்வை நீக்கி வருவாயைப் பெருக்கிக்கொள்ள முயற்சிக்கலாம். முயற்சி திரு வினையாக்கும்.

தனி மனிதனின் அடிப்படைத் தேவைப் பூர்த்திக்காகவும், வேலை வாய்ப்பளிக்கவும், ஐந்தா வது ஐந்தாண்டுத் திட்டத்தில் 10,500 முதல், 11,500 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம் வேலையில்லாத் திண் டாட்டத்தை ஒழிப்பதுடன், தகு திக்குத் தகுந்த வேலை வாய்ப் பளிக்கவும், முயற்சிக்க விருக் கிறார்கள். இத் திட்டம் வெற்றி கரமாக முடியத் தேவைப்படும் பணத்தில் 6,000 முதல் 7,500 கோடி ரூபாய் நேர்முக வரி விதிப் பின் மூலம் சேர்க்கவிருக்கிறார் கள். வரி விதிப்பு வெறும் விலை உயர்வில் மட்டும் முடிந்துவிடா [illegible] வரிகளும் [illegible] படுத்தப்பட வேண்டும். வரி விதிப்பு, உற்பத்தியைப் பெருக்கி வேலைவாய்ப்பளித்து தேசிய தனி நபர் வருமானத்தை உயர்த்தி, பண வீக்கத்தைத் தடை செய்து, செய்பொருள்களில் உற்பத்திச் செலவைக் குறைத்து விலைவாசி களைக் கட்டுப்படுத்தி, எளியவர், நடுநிலையினர் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, ஒரு நல்ல சமுதாயத்தைச் சமைப்பதாக இருக்க வேண்டும். இப்படி நாம் எடுத்துக்கொள்ள விருக்கும் முயற்சிகள் தனி நபர் வருமா னத்தை 1983—84-ல் இரட்டிப் பாக்கும் என எதிர்பார்க்கப்படு கிறது. 1970—71-ல் தனி நபர் வருமானம் ரூ. 370 ஆக இருப் பது 1983—84-ல் ரூ. 740 ஆக உயரும். இப்படிஏற்படும் உயர் வால் மாநில வருமானம் 4,205 கோடியாக உயருமெனக் கணக் கிட்டிருக்கிறார்கள். தமிழகத்தில் 1983—84-ல் மக்கள் தொகை 56.8 கோடியாக உயருமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

நம் திட்டங்கள் வெற்றி பெற நம் நாட்டின் தேசீய வருமானம் தனி நபர் வருமானம் உயர, நாடு நலம் பெற, மக்கள் நல்ல வளம் பெற எதிர்காலச் சந்ததி யினர் நாம் ஓர் இந்தியக் குடி மகன் என்று சொல்லிப் பூரித்து நிற்க இனி ஒரு விதி செய் வோம், அதை எந்த நாளும் காப்போம்.

பெற்றவரைக் காப்போம்,
பெறாமல் இனித் தடுப்போம்!

இந்தத் தேனூறும் சொற் களுக்குத்தான் நாம் வாயூறி நிற்கிறோம்.




## தமிழரசின் தலை சிறந்த தொண்டு

ஐயா,


நாங்கள் ‘தமிழரசு’ தவறாது படித்து வரும் விவசாயிகள். இதற்கு முன் எந்த அரசும் இவ்வளவு விளக்கமாக, விரிவாக விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து, விவசாய நுணுக்கங்களைக் கூறி ஊக்கம் கொடுக்கவில்லை. தமிழரசில் வரும் குறிப்புகளைப் படிக்கும்போதே மகசூல் வீட்டுக்கு வந்துவிட்டது போன்ற நிறைவு ஏற்படுகிறது. ‘கேளுங்கள் கொடுக்கப்படும்’ பகுதியை ஒவ்வொரு இதழிலும் வெகு ஆவலுடன் எதிர்பார்த்துப் படித்து வரும் எங்களுக்குச் சென்ற இரண்டு இதழ்களிலும் காணாதது மிகவும் ஏமாற்ற மாக உள்ளது. இப்பகுதி ஒவ்வொரு இதழிலும் இடம் பெறச் செய்யுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்வதோடு விவசாயத்திற்கு அளவிலா ஆக்கமும் ஊக்கமும் தரும் ‘தமிழரசு’ பத்திரிகையின் பணி மேன் மேலும் வளர உளமார வாழ்த்துகிறோம்.

இப்படிக்கு,
நவீன விவசாய முன்னேற்றக் குழு,
நிலக்கோட்டை (வட்டம்),
மதுரை மாவட்டம்.


# அஞ்சலக சேமிப்பு வங்கி மூலம்
# சேமியுங்கள்!

- எந்த வங்கியும் இதுவரை அளிக்காத அளவுக்கு நடப்புக் கணக்கு — 4 சதவீத வட்டியுடன்
- வேண்டும்போதெல்லாம் பணம் எடுத்துக்கொள்ளலாம்; செலுத்தலாம்; எந்தத் தடையும் இல்லை
- காசோலை வசதிகள் உண்டு
- முற்றிலும் பாதுகாப்பு உடையது
- அஞ்சலகங்கள் அனைத்திலும் இந்த வசதி உண்டு

*இப்போது சொல்லுங்கள் சேமிப்பதற்காக*
*அஞ்சலகச் சேமிப்பு வங்கியை*
*நான் தேர்ந்தெடுத்தது நியாயம்தானே!*



தமிழ்நாடு அரசு
சிறு சேமிப்பு இயக்ககத்தால்
வெளியிடப் பெற்றது.


தமிழரசு அளிக்கும்
இலவச இணைப்புகள்
மாநிலத் திட்டக் குழுச்
செயல் அணி
அறிக்கையின் சுருக்கங்கள்
புத்தகங்களாக
வருகின்றன!
டிசம்பர் 1உ 1972
பசுமைப் புரட்சிக்குப் பன்னிரண்டு ஆண்டுத் திட்டம்
டிசம்பர் 16உ 1972
வெண்மைப் புரட்சியும் நீலப்புரட்சியும்
சனவரி 1உ 1973
கல்வி வளர்ப்போம்
சனவரி 16உ 1973
நல்வாழ்வு பொங்க....


# கெல்தேன்® பல்வேறு இனங்களைச் சார்ந்த செம்பேன்களை அழிக்கிறது. தவிர, பயிர்களின் மேல் நீண்ட நாட்கள் தங்கி வேலை செய்கிறது. உபயோகத்திற்கு அபாயமற்றதும் கூட.

கெல்தேன் ஒரு பரந்த பயனுள்ள செம்பேன் கொல்லி மருந்து. இன்று கிடைக்கப்பெறும் பல செம்பேன் கொல்லி மருந்துகளில் கெல்தேன் ஒன்றுதான் பல இன வகை செம்பேன்களை அழிக்க வல்லது. கெல்தேன் அதிகநாள் பயிர் மற்றும் செடிகளில் தங்கி வளர்ந்த செம்பேன்களையும், முட்டையிலிருந்து வெளிவந்த சிறிய செம்பேன்களையும் அழித்து செயல்புரிவதில் தனித்து நிற்கிறது. தப்புரவாக பிரயோகம் செய்தால் கெல்தேன் பிரயோகித்த பலன் 4 வாரத்திலிருந்து 6 வாரத்திற்கும் இன்னும் அதிக நாட்களுக்கும் காணப்படுகிறது.

கெல்தேன் மருந்து பிரயோகம் இலைகளின் மேலோ அல்லது பழங்களின் மேலோ பிரயோகிக்க அபாயமற்றது ரசாயன மருந்து பிரயோகங்களுக்கு குணம் மாறும் பழவகை இனங்கள், கெல்தேன் மருந்து பிரயோகத்தினால் நிறம் மாறுவதில்லை. தவிர. இவைகளுக்கு எந்தவிதக் கெடுதலும் ஏற்படுத்துவதில்லை. கெல்தேன் மகரந்த சேர்க்கைக்கு உதவி செய்யும் பூச்சிகளுக்கோ அல்லது பயிர்களுக்கு தீங்கு செய்யும் பூச்சிகளை அழிக்கும் மற்ற பூச்சி இன வகைகளுக்கோ தீங்கு இழைப்பதில்லை.

**இண்டோஃபில் கெமிகல்ஸ் லிமிடெட்**
பம்பாய்-25.

® கெல்தேன் மற்றும் ஃப்ளாஸ்க் சின்னம் ரோம் அண்ட் ஹாஸ் கம்பெனி, ஃபிலடெல்ஃபியா, பா., அவர்களின் ட்ரேட் மார்க்குகள். யூ. எஸ். பேட்டண்டு ஆபீஸிலும் இதர நாடுகளிலும் ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.




**இண்டோஃபில் கெமிகல்ஸ்—பசுமை நிறைந்த வருங்காலத்திற்கு**

# சிந்தை கவரும் சிறுவர் பூங்கா

...ம்பர் பதினுன்காம் நாள் !

...னடித ஜவகர்லால் நேரு அவர்கள் பிறந்த ...; இந்த நாளைக் குழந்தைகள் நாளாகக் ...ண்டாடி வருகிறோம்.

...அவர், தாம் விரும்பிய அழகிய ரோஜா மலர் ...னப்போல, பிஞ்சு உள்ளங்களையும் பெரிதும் ...ரும்பினுர். குழந்தைகளின் மலர் முகத்தைக் ...ண்டுவிட்டால், குதூகலம் பிறந்துவிடும் நேரு ...வுக்கு ! மலர்ந்த முகமே வாழ்க்கையின் இன்பம் ...என்பதை அவர் குழந்தையோடு குழந்தையாக இருந்து உலகுக்கு உணர்த்தியவர்.

அவர் துவக்கி வைத்த சிறுவர் பூங்கா ஒன்று சென்னையில் இருப்பது உங்களுக்கெல்லாம் தெரியுமா ?

தெரியாவிட்டால், என்னுடன் வாருங்கள் அந்தப் பூங்காவுக்குச் செல்வோம் !





வண்ண வண்ண மலர் களும் வளமை மிக்க மரங் களும் சூழ்ந்த பூங்கா அது !

எண்ண எண்ண இன்பமூட் டும் எழில் மிகு காட்சிகள் நிறைந்த சோலை அது !


சிறுவர் முதல் பெரியோர் வரை சிந்தை குளிரும் சித் திரப் பூங்கா அது !

ஆம். அதுதான் கிண்டியி லுள்ள சிறுவர் பூங்கா !

இங்கே, பச்சைப் பசே லெனக் கண்ணைக் கவரும் இயற்கைக் காட்சிகளைப் பார்த்துவிட்டால், பச்சிளங் குழந்தைகளுக்குக் கூட இச்சை பிறந்துவிடுமே !

மக்கள் நெருக்கமும், போக்குவரத்துச் சந்தடியும் மிகுந்த சென்னை மாநகரிலே, இப்படியோர் அமைதியான, அழகான பூங்கா அமைந்திருப் பது எத்தனை பேருக்குத் தெரியும் ?

அட்டை சொல்லும் கட்டுரை



...ங்கே அமைதி?' என்று தேடுவோருக்கு 'இங்கே அமைதி!' என்று அன்புடன் அழைக்கிறது இந்தப் பூங்கா.

குழந்தைகளோடு குழந்தைகளாகக் கொஞ்சிக் குலாவிட, மழலைகளோடு மழலைகளாக மகிழ்ந்து ஆடிட அருமையான சூழல் இந்தச் சிறுவர் பூங்கா!

இருபத்திரண்டு ஏக்கர் பரப்பளவில் அமைந்திருக்கும் இந்தப் பூங்கா ஓர் அழகிய வனமாகும். 1959-ஆம் ஆண்டு தமிழ்ப் புத்தாண்டு நாளிலே இந்தப் பூங்கா துவக்கி வைக்கப்பட்டது.

ஒரு மாபெரும் நகரையொட்டி இப்படிப்பட்ட ஒரு 'இயற்கைக் காடு' மக்களை மகிழ்விப்பதைக் கண்டு மேலை நாட்டு வனத்துறை வல்லுநர்கள் பாராட்டியிருக்கின்றனர்.

மிருகக் காட்சிச் சாலையில் கூட இல்லாத சில அரிய பிராணிகள் இங்கே உள்ளன. இதன் சிறப்புக்கு இவை சிறந்த எடுத்துக் காட்டுகளாகும். இமாலயக் காட்டுக் கோழிகள், சிறுத்தை, பறக்கும் அணில், சிங்கவால் குரங்கு, மலைப்பாம்பு ஆகியவை சிறுவர்களைத் தம்பால் ஈர்க்கின்றன.

எவருமே பிடித்து வந்து வளர்க்க முடியாத எறும்பு தின்னி என்னும் ஒருவகை விலங்கு இங்கு ஒன்றரை ஆண்டுக் காலம் வரை நன்ருக வாழ்ந்தது. தன் சொந்த இயற்கை வாழ்க்கையை விட்டு இப்படி வாழ்ந்தது ஒரு சாதனையென்றே கூறலாம்.

...தாரணமாகப் பிடித்து வளர்க்கப்படும் எறும்பு தின்னிகள் இரண்டு அல்லது மூன்று மாதங்களில் இறந்து விடுமாம். ஆனால், இங்கு இத்தனைக் காலம் இது எப்படி இருந்தது?

காடுகளில் இருப்பது போன்றே இது தன்னிச்சையாகக் கரையான் புற்றுகளில் சென்று வர விடப்பட்டது. இப்படிச் சுதந்தரமாகச் செல்ல அனுமதித்ததால்தான் இது இத்தனை நாளும் வாழ்ந்தது. இந்த எறும்புதின்னி அண்மையில் இறந்துவிட்டது. அதற்குக் காரணம் அது நோய்வாய்ப்பட்டதுதான்.

இங்கே அழகிய மயில்களும் உள்ளன. அவை தோகை விரித்தாடும் காட்சியின் மாட்சியை இன்றெல்லாம் பார்த்துக்கொண்டிருக்கலாம். சாதாரணமாக மயில்கள் காடுகளில் தன்னிச்சையாக முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும் தன்மையன. வீடுகளிலோ அல்லது அடைத்து வைக்கப்படும் இடங்களிலோ இவை இப்படிச் செய்வதில்லை. ஆனால், ஐந்து ஆண்டுகளாக இங்குள்ள மயில்கள் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கின்றனவென்ருல் இதற்குக் காரணம், இவை இயற்கைக் காட்டில் இருப்பதுதான்.

இங்கே குழந்தைகளுக்கு மட்டுமல்ல, பெரியவர்களுக்கும் குதூகலமூட்டும் குட்டி யானை ஒன்று உலா வருவதைப் பார்க்கலாம். தும்பிக்கையைத் தூக்கித் தம்பி தங்கைகளோடு விளையாடும் இந்த யானை மீது சவாரி போகலாம். கட்டணமில்லை!



எந்த ஊருக்கும் போகாமல் வந்த இடத்துக்கே வந்து சேரும் ரயில் வண்டிகூட இங்கே இருக்கிறது. இந்த ரயில் வண்டிப் பெட்டிகளில் என்னென்னவோ எழுதியிருக்கின்றனவே அவையெல்லாம் என்ன? விஷமக்காரர்கள் வேலையா? அவர்கள் ஏன் இங்கே வரப்போகிருர்கள்? கள்ளமில்லா உள்ளம் கொண்ட குழந்தை உலகத்திலே அவர்களுக்கென்ன வேலை?

குழந்தைகள் விரும்பிப் பாடும் பாடல்கள், வேடிக்கையான வண்ணப் படங்கள்தான் அவை! குழந்தைகளோடு புன்னகை தவழ அந்தக் குட்டி ரயில் நிலையத்தில் காத்திருப்பவர்கள்தான் எத்தனைபேர்!

ஓமயா என்ற ஜப்பானிலுள்ள சிறிய நகரத்திலுள்ள ரோட்டரிச் சங்கத்தினர், இந்த அழகிய குழந்தைகள் ரயில் நிலையத்தைக் கட்டிக் கொடுத்திருக்கிருர்களென்ருல், அவர்களின் குழந்தை உள்ளத்தை நாம் பாராட்ட வேண்டாமா?



இருபத்திரண்டு ஏக்கர் பரப்பளவுள்ள இந்தப் பூங்கா, அறுநூறு ஏக்கர் பரப்பளவுள்ள 'மான்கள் பூங்கா'வுக்குள் இருக்கிறது. என்ன? மான்கள் பூங்காவா? ஆமாம். துள்ளி ஓடும் புள்ளிமான்கள் பல இங்கே உலவுகின்ற காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். 25 காசுக் கட்டணத்தில் பலவித மான்களைப் பார்த்துப் பரவசமடையத்தக்க வகையில், இந்த அழகிய வனம் நம் மனத்தைக் காந்தம்போல் ஈர்க்கிறது.

அதோ! அந்தப் பெரிய புளிய மரத்தின் மேல் சிறுவர், சிறுமிகளெல்லாம் ஏறுகின்றனரே! அவர்கள் எங்கே போகிறார்கள்?

அவர்கள் தம் வீட்டுக்குத்தான் போகிறார்கள்! அந்த மரத்தின் மேலே ஒரு அழகிய மர வீடு இருக்கிறது. அந்த வீட்டுக்குச் சுலபமாகப் போக ஏணி ஒன்றும் மரத்தோடு பொருத்தப்பட்டுள்ளது. எல்லாக் குழந்தைகளையும் ஒருங்கே இணைக்கும் ஒருமைப்பாட்டு இல்லமாக இந்த மர வீடு விளங்குவதை நேரில் கண்டு மகிழலாமே!

கண்டு களிக்கவும் கொண்டு வந்ததை உண்டு மகிழவும், நூற்றுக்கணக்கான குழந்தைகளுடன் பெற்றோர்கள் நாள்தோறும் வந்த வண்ணமிருக்கிறார்கள். விடுமுறை நாட்களிலோ இக் கூட்டம் திருவிழாப் போன்று இருப்பதைக் காணலாம். குழந்தைகள் ஆடிப்பாடி மகிழ மட்டும் இந்தப் பூங்கா இல்லை; அவர்கள் அறிவு வளர்ச்சிக்கும் துணை செய்கிறது, இங்கே உள்ள குழந்தைகள் நூலகம். இதில் வண்ணப் படங்களோடு கூடிய எண்ணற்ற புத்தகங்கள் உள்ளன. பூங்காவுக்கு வருகின்ற குழந்தைகள் இந்த நூலகத்தில் புத்தகத்தோடு ஒன்றிப் போகும் அழகே அழகு!



அழகிய பறவைகள், மயில், மைனா, மான், கரடி, யானை, பாம்பு, குரங்கு, காட்டு ஆடு முதலானவைகளைக் கண்டு மகிழவும், காலை முதல் மாலை வரை உல்லாசமாகப் பொழுதினைக் கழிக்கவும் இந்தச் சோலை, கோடை வெயிலைப் போக்கும் ஒரு கொடைக்கானலாகவும் திகழ்கிறது.

காடுகளையும், காட்டு விலங்குகளையும் நேரில் பார்க்காதவர்களுக்கு ஒரு வாய்ப்பு— திரைப்படத்தின் மூலம் அவைகளைக் கண்டு மகிழலாம். தமிழக அரசின் வனத்துறையினர் மாதமிருமுறை இந்தப் படங்களை இங்குக் காட்டுகின்றனர்.

இவைமட்டுமா? சிறுவர்களின் சிந்தையைக் கவரும் வண்ணம் அரும் பொருட்காட்சியகம் ஒன்றை ஏற்படுத்தவும், திரை அரங்கு ஒன்றைக் கட்டவும் திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

பாம்பென்றால் படையும் நடுங்கும் என்பார்கள். ஆனால், சிறிதும் நடுக்கமே இல்லாத பலர் அந்தப் 'பாம்புப் பண்ணை'யையே பார்த்துக் கொண்டிருக்கிறார்களே! வகை வகையான பாம்புகள் வளைந்தும் நெளிந்தும் அங்கே காணப்படுகின்றன. தனியார் நடத்தும் இந்தப் பண்ணை நம் கண்ணை விட்டு அகலாத ஒன்றாகும்.

'நாகரிக மோகம் மிக்க நகர வாழ்க்கையிலே ஒன்றி விட்டவர்கள் கொஞ்சம் மாறுதலுக்காக, எழில் கொஞ்சும் இந்தப் பூங்காவுக்கு வருவீர்களா?' என்று அழைப்பது, குட்டியானை!

—பி.வி.ஜி.

# வயலைத வளர்ப்போம்

டி. என். சுகி சுப்பிரமணியம்

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் சீரும் சிறப்புமாக வாழச் சுத்தமான காற்று, தண்ணீர், மண் மூன்றும் தேவை.

காற்றும் தண்ணீரும் சுத்தமாக இருப்பதை—இருக்க வேண்டுவதை நம்மில் பெரும்பாலோர் ஒப்புக் கொள்வார்கள். மண் தூய்தாக இருக்க வேண்டுவதை வேளாண்மை செய்பவர்கள் மட்டும் ஒப்புக் கொள்ளுவார்கள்.

இவற்றை அசுத்தப் படுத்துவதை இந்நாளில் தொழிலாகவும், குறிக்கோளாகவும் வைத்துக் கொண்டிருக்கிறோம். இவ்வாறு செய்வதை நாகரிகமாகப் பேணுகிறோம். நம்மில் சிறுபாலோர் இவற்றைச் சுத்தமாக வைக்க வேண்டுமென்னும் பணியில் கர்நாடகமாகவும் ஈடுபடுகிறார்கள்.

நாம் தொழிற்படுத்தும் இயந்திரச்சாலைகள், தொழிற்கூடங்கள் காற்றை அசுத்தப் படுத்தவே சதா வேலை செய்கின்றன. தூய்மை குறைந்த காற்று விஷத்துக்குச் சமம். விஷப் பொருள்கள் தயாரிப்பதே இந்நாளைய நாகரிகத்தின் முழுநேர வேலை. அமிர்த மயமான காற்றை உண்டு விஷத்தன்மை உமிழ்கிறவை மனிதர்கள், இயந்திரங்கள் விஷவாயுவைச் சுத்தப்படுத்தும் சக்தி, கேவலம் மரங்களுக்கும் பசிய செடிகொடிகளுக்கும் இயல்பாக இருக்கின்றன.

தாவர உலகம் நமக்கு அமிர்தம் தருகிறது; தூய காற்றுத் தருகிறது! காற்று அசுத்தப்படாமல் சுத்தமாக்கும் பணியைச் சமூகத்துள்ளாகப் பார்த்துக் கொள்வது தாவர உலகம். தாவர உலகத்தின் அறிவு-படைத்த மக்கள் இந்நாளில் அருகி வருகிறார்கள். தூய காற்றுக்குப் பஞ்சம் வருகிறது.

தாவர உலகம் சரிவர இயங்கிக் காற்றைச் சுத்தப்படுத்தினால் காற்றுக்கும் அப்பால் மற்றொரு நன்மை உண்டாகும்.

அதுவே மழை

பசுமையான இயற்கை செழித்தால் பருவமழை தப்பாது வரும். மரம் செழித்தால் மழை செழிக்கும். பூமித்தாய் ஈரமுள்ள நெஞ்சோடு வற்றாது வாரி வழங்குவாள். மண்ணிடைப் பிறக்கும் மரங்களை மனிதர்கள் வெட்டிப் பிழைக்கிறார்கள்; மரங்களை நட்டுப் பிழைப்பது தான் மனிதன் செய்ய வேண்டிய தர்மம். அழிப்பதும் இந்நாள் நாகரிகம். புதிய துறைகளை வளர்க்கும் போது புதிய தொழிலகங்களை உருவாக்கும் போது, புதிய சாலைகள் போடும் போது, புதிய காலனிகள் கட்டும் போது தாவர வளத்தையும் அணைத்துக் கொண்டு வேலை செய்ய வேண்டும்.

சாலைநெடுக மரங்கள் வைத்ததும், தோப்புத் துரவுகள் எழுப்பியதும் அறிவற்றவர்கள்செய்கையன்று. பாருங்களேன்! ஆற்றோரம் ஏரிக்கரையோரம் மரங்களைப் பாதுகாத்த தன்மை போய்க் கொண்டிருக்கின்றன. இதனால் தூய காற்றுக்கும் பஞ்சம். அமிர்த மழைக்கும் பஞ்சம், ஊர்ப் பொதுவுக்காகச் சில எண்ணெய் மரங்கள், புன்னை இலுப்பை மரங்கள் இருந்தன என்பது ஏட்டுப்பாடமாக மாறிவிட்டன. காடுகளும் சோலைகளும் இல்லாது போனால், நாடுகளும் நகரங்களும் பாலையாய்ப் போம்.

கழனிகளுக்கும், கார்நிலங்களுக்கும் தூய்மையான தண்ணீர் தேவை. கழிவு நீர்கள் கலக்கக் கலக்க, செடியின் வீரியம் போய், பயிரில் பச்சை பிடிக்காமல் சோகைபிடிக்கலாம். மணிகள் பிடிக்காமல் சாவியும் சண்டும் பிடித்து விடலாம். வளத்திற்குப் பதில் வறுமை பீடிக்கலாம்.

உயிர் வாழ்வன யாவற்றுக்கும் தூய தண்ணீர் தேவை; நமது நாகரிக வாழ்க்கையில் மனிதன் குடிக்கக்கூடத் தூய்மையான நீர் எங்கும் கிடைக்கவில்லை.

பளிங்கு போன்ற ஓடைகளும், பால் வெண்ணீறு போன்ற கண்மாய்களும், இளநீர்த்தன்மையான கிணறுகளும் தமிழகத்தில் சில இடங்களில் இன்னும் காணக் கிடைக்கின்றன. குழாய் வழியாக வரும் தண்ணீர் தூய்மையாக இருந்தால் போதும். பயிருக்கும், கால்நடைக்கும் கேடு கெட்ட தண்ணீர் கிடைத்தால் போதும் என்றால், நாம் மனித சமுதாயத்திற்கு விரோதிகள். வாடும் பயிரைக்காண வேண்டிய அஞ்ஞானிகள், உயர்ந்த கால்நடைகளுக்கு உற்சாகம் தரும் உலுத்தர்கள்.

தூய காற்றும், தூய தண்ணீரும் தாவர உலகத்தைப் பொறுத்தது; தாவர உலகம் வீறு கொண்டு வளரவும், ஒன்றுக்கு நாறாக விம்மி வெடித்துப் பலன் தரவும் தூய்மையான மண் தேவை. மண்ணை விட இனிமையான பொருள் வேறு எதுவும் இல்லை. மணமிக்க மலர்கள் மண்ணிடையே தோன்றுகின்றன. அழகுமிக்க பறவைகள், வலிவுடைய விலங்குகள் மரங்களிலும், மரங்கள் சூழ்ந்த கானகங்களிலும் வாழ்கின்றன. மண்ணைத் தாயகம் என்கிறோம். தாய்க்கு மாண்பும், மதிப்பும் உண்டு. அவள் தியாகி; அவள் உள்ளம் பிறரைக் காக்கும் பேருள்ளம்.

இந்நாளில் விஞ்ஞானத்தின் துணையால் தாய் மண்ணைத் தாரமாக்கக் கற்றுக் கொண்டோம். தாயைப் பழிவாங்கும் மக்கள் முன்னுளில் கிடையாது. தாரத்தைப் பழிவாங்கும் மக்கள் எந்நாளிலும். எந்நாட்டிலும் உண்டு. மண் மூடிய இந்த உலகத்தை எந்நாட்டவரும் பழி வாங்கிக் கொண்டிருக்கிருர்கள். பண்படுத்திய பூமிகள் மாறிப் பாழ் மனைகள் ஆகின்றன. தாவரம் செழித்த இடங்கள் தரைமட்டமாகின்றன.

நந்தவனங்கள் போன்று பூத்துக் குலுங்கிய இடங்கள் மறைகின்றன. வானுற ஓங்கி உயர்ந்த மரங்களை வளர்த்த காடுகள், அருகி வருகின்றன. வண்ணப் பறவைகளும், விந்தை விலங்குகளும் காணக் கிடைக்காது மறைந்து மடிந்து போகின்றன.

மண்ணை வளமாக்கவும், மண்ணைப் பொன்னுக்கவும், மண்ணை வணங்கவும் மக்கள் குலத்துக்கு அறிவு வர வேண்டும். மண் வளம் குறைந்தால் மக்கள் மனவளம் குறையும். இலக்கிய வளம் போம். சொல் நாகரிகம் குன்றிக் கருத்துக்கள் ஒடுங்கி மனிதர்கள் விலங்கு மனத்தினராய்க் கருவி பிடிக்கும் கரத்தினராக மாறிவிடுவார்கள். பயங்கரச் செயல்கள் பண்பாகப் போற்றப்படும்; கொலை செய்வது, நன்றி மறப்பது, தீமை புரிவது இயல்பாகிப் போகும். மண்ணைக் கெடுப்பார், மக்கள் குலத்து மன நாகரிகத்தைக் கெடுப்பவர்.

காற்று, தண்ணீர், மண் மூன்றையும் கெடுத்துக் கொண்டு வருகிறோம். இவை நமக்குக் கிடைத்த அமிழ்தங்கள். இயல், இசை, நாடகம் போன்ற முத்தமிழுக்கு இவை சமம்.

இதுகாறும் மனித குலத்துக்குரிய மூன்று புறச் செல்வங்களைச் சொன்னேன்.

இனி, மனித குலம் முழுமைக்குரிய அகச் செல்வங்கள் மூன்றினைச் சொல்லுகிறேன்.

வியப்பு - நம்பிக்கை-அன்பு-

என்ற மூன்று செல்வங்களும் காற்று, தண்ணீர், மண் என்னும் மூன்று செல்வங்களுக்குச் சமம்.

வியக்கத் தெரிவது பெரிய கொடை! கொடுக்கத் தெரிவது மட்டும் கொடையன்று. எவை அழகு தருவனவோ, எவை நல்லறிவு தருவனவோ, எவை பண்பாட்டைத் தருவனவோ, அவற்றைக் கண்டு வியக்கத் தெரிய வேண்டும். வடிவங்களையும் வண்ணங்களையும் பார்த்து இன்புறுதல் வேண்டும்.

பாடும் நதிகள், ஓடும் மேகங்கள், ஆடும் மயில்கள், அசையும் யானைகள் யாவும் கண்ணுக்கு வியப்பூட்டும் பொருள்கள். இதே போன்று, கருத்துக்கு வியப்பூட்டும் கவிதைகள், கதைகள், நாடகங்கள், அரசியல் திருப்பங்கள், மேடைப் பேச்சுகள் ஆகியவற்றையும் அறிவுக் கண்ணுல் முதற்கண் வியக்கத் தெரிய வேண்டும். பின்னர் வினை புரியத் தெரிய வேண்டும்.

வியக்கத் தெரிவது அடித்தளம். வியக்கும் பொருள்களை நாமே சிருஷ்டிக்கத் தெரிவது மேல் தளம். செடியின் வேரும், அதன் பூவும் போல எவை வெறுக்கத் தக்கன, எவை விரும்பத்தக்கன என்று மனத்தால் கோடு போடத் தெரிந்தால் வியக்கத் தக்க சூழ்நிலைகளை நாமே உண்டாக்கலாம். நம் போன்ற மனிதர்களை உய்வித்துச் செல்லலாம். செல்வர்கள் ஆக்கலாம்.

## உங்கள் தமிழறிவுக்கு ஒரு சோதனை

கீழே பத்துப்பாட்டு இலக்கியங்களின் பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றிற்கு எதிர் வரிசையில் அந்தந்த நூல்களின் பெயர்களும், மாற்றிக் கொடுக்கப்பட்டுள்ளன. அந்தந்த இலக்கியத்திற்குரிய ஆசிரியரையும் பாடப் பெற்றேரையும் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

| பாட்டு | ஆசிரியர் | பாடப்பெற்றேர் |
|---|---|---|
| 1. திருமுருகாற்றுப்படை | கபிலர் | நல்லியக்கோடன் |
| 2. பொருநர் ஆற்றுப்படை | நப்பூதனர் | நெடுஞ்செழியன் |
| 3. சிறுபாணுற்றுப்படை | மாங்குடிமருதனர் | கரிகாற்சோழன் |
| 4. பெரும்பாணுற்றுப்படை | நக்கீரர் | ஆரியமன்னன் பிரகத்தன் |
| 5. முல்லைப்பாட்டு | முடத்தாமக்கண்ணியார் | முருகப்பெருமான் |
| 6. மதுரைக்காஞ்சி | பெருங்கௌசிகனர் | நன்னன் |
| 7. நெடுநெல்வாடை | நத்தத்தனர் | இளந்திரையன் |
| 8. குறிஞ்சிப்பாட்டு | உருத்திரங்கண்ணனர் | கரிகாற் சோழன் |
| 9. பட்டினப்பாலை | நக்கீரர் | பெயர் தெரியாத தலைவன் |
| 10. மலைபடுகடாம் | உருத்திரங்கண்ணனர் | நெடுஞ்செழியன் |

விடை : அடுத்த பக்கம்

தீமையைக் காணும் அறிவுக்கும், தீயவற்றை ஒழிக்கும் அறிவுக்கும் மறு பெயர் வியப்பு. ஆக்கத்தின் பாதையே வியப்பு. ஆக்கத்தைப் பாதுகாக்கும் வேலியே வியப்பு. இருக்க வேண்டுவன எவை என்பதைச் சொல்லாமல் சொல்லும் ஆற்றலே வியப்பு.

அடுத்து, மனிதர்கள் ஒவ்வொருவருக்கும் தேவையான, பொருள் நம்பிக்கை. எவற்றின் மீது நமக்கு நம்பிக்கை விழுகிறதோ அது நமக்கு மிக மிகப் பிடிக்கும். நமது உயிர் மூச்சாகும். நாம் நம்பிக்கை கொண்ட நல்ல செயல்கள்—நல்ல விளைவுகள்—நல்ல சிந்தனைகள் போன்று நம்மில் மிகப் பலரும் நம்பிக்கை கொள்ள வேண்டும். நல்ல நம்பிக்கைகள் 'சேரவாரும் செகத்தீரே' என்று செயல்படும். நம்பிக்கை, மிகப் பெரிய சக்தி. நமது மொழியும், நமது இனமும், நமது நாடும், முன்னேற்றமடைய நமக்குள் 'பொது நம்பிக்கைகள்' வேர் ஊன்ற வேண்டும்.

தீயவற்றைத் துடைப்பதும், அதே சமயம் நன்மையானவற்றை நிறைப்பதும், நம்பிக்கையின் செயல். விளக்கொளி வந்ததும் இருள் மறைவதைப் போல, நம்பிக்கையை வளர்ப்பதால் வெளிச்சங்கள் புலனாகும். நம்பிக்கை உள்ள சமுதாயம் பிறர் காண்பதற்குத் துல்லியமாகத் தெரியும். நம்பிக்கையற்ற மனிதன், நம்பிக்கையற்ற சமுதாயம் இரண்டும் இருளில் கிடக்கும் இழி பொருள்கள்! இந்த நம்பிக்கை தனி மனிதர்கள் நம்பிக்கை யென்பது வீட்டு விளக்கினைப் போலத் தனித்தனி இருத்தல் வேண்டும். பொது வாழ்க்கை நம்பிக்கை என்பது வீதி விளக்குப் போலவும் இருந்தாக வேண்டும்.

மூன்றாவது அகப் பொருள் அன்பு. குடும்பத்துக்கும், நட்புக்கும், நாட்டுக்கும் நலனுக்கும் தன் வளர்ச்சிக்கும் அடித்தளமாக இருக்கும் மாபெரும் சக்தி அன்பு. அன்பு இலாதார் வெறும் எலும்பு மனிதர்களுக்குச் சமம். அன்பிலே மிகச் சிறந்த அன்பு, தாய்மை அன்பு. பரிவும், பாதுகாப்பும், தன்னலமில்லாத பேராண்மையும் நிறைந்தது தாய்மை அன்பு. தன்னை அழித்துப் பிற உயிரைக் காக்கும் தகைமை உடையது.

உயிரினத்தின் மூச்சு இழை, அன்புச் செயல். கொல்புலியும் புல்வாயும் தத்தம் குட்டிகளிடம் அன்பு காட்டுகின்றன. தங்கள் உயிரைப் பணயம் வைத்துத் தம் வயிற்று உயிர்களைக் காவல் செய்கின்றன.

விலங்கு வாழ்க்கையிலே அன்பு அடிப்படை. மறத்திற்கும் அன்பு அடிப்படை. நிழலில் இருக்கும் செடி, ஒளிக்கதிரை நாடிப் போவதுபோல, மேட்டுத் தண்ணீர் பள்ளத்தை நோக்கி ஓடுவது போல, அன்பு எல்லார் உள்ளத்தும் சுரக்கும். அன்புக் கேணி இல்லாத மனிதன் பதர் அன்று; அவன் பாவி. அரசியலுக்கும் அன்பு தேவை; ஆட்சி மொழிக்கும் அன்பு தேவை. அன்பு ஊடு சரமாக உள்ளத்து நீரூற்றாக மனித உள்ளத்துக்குள் கிடக்கிறது.

இந்த நாட்டில் பிறந்த ஆண்டிக்கும் தேவை, தூய காற்று, தூய தண்ணீர், தூய மண். ஆண்டியைப்போல அரசபோகத் தாருக்கும் இவை மூன்றும் தேவை.

வியப்பு, நம்பிக்கை, அன்பு, என்னும் மூன்றுவித அகப் பொருள்களும் அரசியல் கட்சிகளுக்கும், ஆன்மீகக் கட்சிகளுக்கும் தேவை. உயிர் வாழ, உயர்ந்து வாழ எண்ணும் தனி மனிதனுக்கும் இவை தேவை. அரசுடைமையாக்கும் அறிவாளிகளுக்கும் இந்த மூன்று பொருள்களும் தேவை.

காற்று, தண்ணீர், மண் மூன்றும் அசுத்தமானால் உயிரினத்து வயது நீடிப்பு நசித்துப் போகும்.

வியப்பு, நம்பிக்கை, அன்பு மூன்றும் அசுத்தமானால் மனித குலத்து மாண்பும் மதிப்பும், அறிவும், ஆற்றலும், பண்பும் பயனும் நசித்துப் போகும்.

வயதும் வளர வேண்டும்.

நம் வரலாறும் வளர வேண்டும்.

வயதை வளர்ப்போம்.

நம் வரலாற்றை வளமாக்குவோம்!

## சோதனைக்கு விடை இதுவே!

| பாட்டு | ஆசிரியர் | பாடப்பெற்றோர் |
|---|---|---|
| 1. திருமுருகாற்றுப்படை | நக்கீரர் | முருகப்பெருமான் |
| 2. பொருநர் ஆற்றுப்படை | முடத்தாமக்கண்ணியார் | கரிகாற் சோழன் |
| 3. சிறுபாணாற்றுப்படை | நத்தத்தனார் | நல்லியக்கோடன் |
| 4. பெரும்பாணாற்றுப்படை | உருத்திரங்கண்ணனார் | இளந்திரையன் |
| 5. முல்லைப்பாட்டு | நப்பூதனார் | பெயர் தெரியாத தலைவன் |
| 6. மதுரைக்காஞ்சி | மாங்குடிமருதனார் | நெடுஞ்செழியன் |
| 7. நெடுநெல்வாடை | நக்கீரர் | நெடுஞ்செழியன் |
| 8. குறிஞ்சிப்பாட்டு | கபிலர் | ஆரியமன்னன் பிரகத்தன் |
| 9. பட்டினப்பாலை | உருத்திரங்கண்ணனார் | கரிகாற் சோழன் |
| 10. மலைபடுகடாம் | பெருங்கௌசிகனார் | நன்னன் |

ஆசிரியர், வெளியிடுபவர் செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு அச்சக எழுதுபொருள் இயக்குநரால், சென்னை, அண்ணாசாலை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை-2.